ஐ.தே.க. பக்கம் சாய்வதால் தமிழர்களுக்கு கிடைக்கப் போவதென்ன?
பக்கம் 16

உதயன்
சுடர் 30 கதிர் 250 வள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 18, திங்கட்கிழமை 03.08.2015

ஈராக் போரால் ஒரு மாதத்தில் 1,332 பேர் சாவு
பக்கம் 13

# தீர்வுக்கு ஆணைக்குழு

## தென்னாபிரிக்க பாணியில் அமைக்கப்படும் என்கிறார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, ஓகஸ்ட் 3
தேசிய இனப்பிரச்சினைக்கு எத்தகையதொரு தீர்வுத்திட்டத்தை முன்வைப்பது என்பது தொடர்பில் சகல தரப்பினருடனும் கலந்துரையாடி இறுதி முடிவை எடுப்பதற்காக உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவொன்றை அமைப்பதே தீர்வுத் திட்ட விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் நோக்கமாக இருக்கிறது.
தென்னாபிரிக்காவில் விஸ்பரூபமெடுத்திருந்த இனப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்து நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காகவும் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதி, நிவாரணத்தை வழங்குவதற்காகவும் அந்நாட்டு அரசு உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்

பக்கம் 24

## தபால் மூல வாக்களிப்பு இன்று

கொழும்பு, ஓக. 3
நாடாளுமன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நடவடிக்கைகள் இன்று நடைபெறவுள்ளதுடன் எதிர்வரும் 5ஆம் மற்றும் 6ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளன.
தபால் மூல வாக்களிப்பு நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக விசேட குழுவொன்றை அனுப்புவதற்கு தேர்தல்கள் செயலகம் தீர்மானித்துள்ளது.
இன்று திங்கட்கிழமை கல்வி திணைக்கள அதிகாரிகள்

பக்கம் 24

## வெள்ளைவான் விவகாரத்தால் பதவியிழந்தார் பிரசன்ன சில்வா

கொழும்பு, ஓகஸ்ட் 3
மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வா, இராணுவ கொமாண்டோ படைப் பிரிவின் கட்டளை அதிகாரி பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் கிரிசாந்த டி சில்வா இதற்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.
அண்மையில் மீரிஹானவில் இலக்கத்தகடு மாற்றப்பட்ட வெள்ளை வான் ஒன்றில், கைது செய்யப்பட்ட மூன்று படையினரிடம் இருந்த கைத்துப்பாக்கி, மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வாவுக்கு வழங்கப்பட்ட அதிகாரபூர்வ துப்பாக்கி என்பது விசாரணைகளில் உறுதி செய்யப்பட்டதையடுத்தே, அவரது பதவி பறிக்கப்பட்டுள்ளது.
அதிகாரபூர்வமாக இராணுவ அதிகாரி ஒருவருக்கு வழங்கப்பட்ட துப்

பக்கம் 24

## மஹிந்தவின் அலுவலகத்தில் ஆயுதத்துடன் ஒருவர் கைது

கொழும்பு, ஓக. 3
குருநாகலில் முன்னாள் ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷவின் பிர தான தேர்தல் பணியகத்தில் ஆயு தம் தாங்கிய அரச புலனாய்வுச் சேவையைச் சேர்ந்த ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
கைது செய்யப்பட்ட நபர் முன்னாள் அமைச்சர் சாலிந்த திசநாயக்கவின் நெருங்கிய நண்பர் என்றும், அவரது மனைவியின் அழைப்பின்

பக்கம் 24

## பாதுகாப்புக்குப் பங்கம் நேராது அதிகாரம் பகிரப்பட வேண்டும்

### வலியுறுத்துகிறார் சோபித தேரர்

கொழும்பு, ஓக.3
நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் அதிகாரங்கள் பகிரப்படவேண்டும் என்று சமூக நீதிக்கான தேசிய அமைப்பின் ஏற்பாட்டாளர் மாதுளுவாவே சோபித தேரர் வலியுறுத்தியுள்ளார்.
அதிகாரப் பகிர்வின் மூலமே தேசிய பிரச்சினைக்கு தீர்வுகாண முடியு

பக்கம் 24

## 13ஐ தாண்டி ஒருபோதும் ஐ.ம.சு. தீர்வு வழங்காது

### அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த கூறுகின்றார்

கொழும்பு, ஓக.3
இனப் பிரச்சினைக்கு 13 பிளஸைக் கூட தீர்வாக வழங்க முடியாது. 13 ஆவது திருத்தத்தை தாண்டி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி செல்லாது. – இவ்வாறு அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.
13 பிளஸ் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு தெரிவாக இல்லை என்பதால், இனப் பிரச்சினைக்குத் தீர்வாக, 13 பிளஸை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம். இனப் பிரச்சினைக்கான தீர்வாக, 13 ஆவது திருத்தச் சட்டத்துக்குள் அமையும் எந்த தீர்வையுமே, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஏற்றுக்கொள்ளும்.– என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
சம்பந்தனின் தமிழ்த் தேசியக் கூட்ட

பக்கம் 24

## போர்க் குற்ற அறிக்கை செப்.30 ஐ.நா. அமர்வில்

ஜெனிவா, ஓக. 3
போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் விசாரணை அறிக்கையை அடுத்தமாதம் 30ஆம் திகதி ஐ.நா மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 30ஆவது கூட்டத்தொடருக்கான வரைவு நிகழ்ச்சி நிரலில், இலங்கை குறித்த விவாதம் செப்ரெம்பர் 30ஆம் திகதி நடைபெறும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
அன்றைய தினமே, பெரிதும் எதிர்பார்க்கப்படும், ஐ.நா விசாரணை அறிக்கையை

பக்கம் 24

## த.தே.ம. முன்னணியின் விஞ்ஞாபனம் வெளியீடு

நெல்லியடி, ஓக. 3
தாயகத்திலும் புலம்பெயர்ந்தும் வாழும் தமிழ் மக்களையும் தமிழகத்தில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களையும் ஒன்றிணைத்து அரசியல் மயப்படுத்தி அணிதிரட்டி தமிழ் மக்களுக்கான தீர்வுக்காக போராடு

பக்கம் 24



## ஐ.தே.கட்சி அலுவலகம் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், ஓக.3
யாழ்.சுன்னாகத்தில் அமைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி அலுவலகத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பக்கம் 24

## உயர்தரப் பரீட்சை நாளை

கொழும்பு, ஓக. 3
திட்டமிட்டபடி ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை நாடளாவிய ரீதியில் நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளது. அதற்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவடைந்துள்ளன என்று பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யூ. எம். என். ஜே. புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறுவதையொட்டி ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை இருகட்டங்களாக நடத்தப்படவுள்ளது. இதன் பிரகாரம் ஓகஸ்ட் 4 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை முதற் கட்டமாகவும் ஓகஸ்ட் 24 முதல் செப்ரெம்பர் 8 ஆம் திகதி வரை இரண்டாம் கட்டமாகவும் இடம்பெறவுள்ளது.
இம்முறை பரீட்சைக்கு நாடளாவிய ரீதியில் 3 லட்சத்து 9 ஆயிரத்து 69 பேர் தோற்றவுள்ளனர். இவர்க ளில் 2 லட்சத்து 36 ஆயிரத்து 72 பேர் பாடசாலை பரீட்சார்த்திகளாவர். 72 ஆயிரத்து 997 பேர் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாவர். இவர்கள் நாடளாவிய ரீதியில் 2180 பரீட்சை நிலை

பக்கம் 24

## தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடையாது

### புலனாய்வு பிரிவினரால் ஜனாதிபதிக்கு அறிக்கை

கொழும்பு, ஓக. 3
நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் கடுமையான போட்டி நிலவும் என புலனாய்வு பிரிவினர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் தெரிவித் துள்ளதாக கொழும்பு செய்திகள்

பக்கம் 24

## குடும்பஸ்தர் சடலமாக யாழ். குருநகரில் மீட்பு



யாழ்ப்பாணம், ஓக. 3
யாழ்ப்பாணம், குருநகர் பகுதியில் நேற்று குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குறித்த பகுதியைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான 35 வயதுடைய அந்தோனிப்பிள்ளை கமல் என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

பக்கம் 24

## பிரபாகரனின் ‘பிராடோ’ வாகனம் இராணுவ அதிகாரி பாவனையில்

கொழும்பு, ஓக.3
தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் பயன்படுத்திய ‘பிராடோ’ ரக வாகனத்தை, இராணுவ அதிகாரி ஒருவர் பயன்படுத்திய விவகாரம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.
மீரிஹானவில் அண்மையில் இராணுவத்தினரால் பயன்படுத்தப்பட்டு வந்த இலக்கத்தகடு மாற்றப்பட்ட வெள்ளை வான் ஒன்று கைப்பற்றப்பட்டதையடுத்து பாதுகாப்பு அமைச்சு மேற்கொண்ட விசாரணைகளின் போதே இந்த விவகாரம் அம்பலமாகியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
விடுதலைப் புலிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட வாகனங்கள் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பயங்கரவாத தடைச் சட்ட நடைமுறைகளின் படி,

பக்கம் 24

## மாவீரர் குருதியின் பயனே இன்றைய எமது பாதுகாப்பு

### கலையரசன் தெரிவிப்பு

எமது ஆயுதபோராட்டத்தில் மாவீரர்கள் சிந்திய குருதியும், உடலுமே இன்றைய எமது தமிழ் இன தலைநிமிர்விற்கும், பாதுகாப்பிற்கும் மூல காரணகர்த்தாவாகும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அம் பாறை மாவட்ட வேட்பாளரும், கிழக்கு மாகாணசபை உறுப்பினரு மான தவராசா கலையரசன் கூறினார்.

கல்முனையில் நடைபெற்ற பரப்புரை நடவடிக்கையின் போது கட்சி ஆதரவாளர்கள், பொது மக்களுடன் கலந்துரையாடும்போதே இதனைத் தெரிவித்தார்.

மேலும் இது தொடர்பாக கருத்துரைக்கையில்,

எங்களில் பலர் ஏதாவது எதிர்பார்ப்புடனும், சுயலாபத்துடனும் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த காலச்சூழ் நிலையில் எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் எம் இனத்தின் விடுதலைக்காக களமாடி விதையான மாவீரர்கள் எம் இனத்தின் வீர புருஷர்கள். எமது அம்பாறை மண்ணின் மாவீரர்களையும் எம்மினத்தின் போராளிகளையும் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.அப்போது அவர்களது தியாக உணர்வு அனைவரையும் மெய் சிலிர்க்கச் செய்யும்.

எமது மாவீரர்களின் நினைவுக் கல்லறைகளுக்குக் கூடச் சென்று அவர்களுக்காகவேண்டி ஒரு நிமிடமாவது அக வணக்கம் செய்யமுடியாத நிலையிலேதான் இன்றும் எம்மினம் இருந்து வருகின்றது. அவ்வாறான சூழல் தான் இந்த நாட்டிலே இன்றும் இருந்து கொண்டிருக்கின்றது என்பது அனைவருக்கும் தெரிந்த வெளிப்படை உண்மையும்கூட.

இந்த நாட்டிலே ஜே.வி.பி கிளர்ச்சியில் இறந்தவர்களுக்குக்கு நினைவு நாளை அனுஷ்டிப்பதற்கு அனுமதி கொடுக்கும் சிங்கள பேரினவாத அரசுகள் ஏன் தமிழர்களுக்கு மாத்திரம் அனுமதி கொடுக்க தவறுகின்றார்கள்? அவ்வாறு அனுமதி கொடுத்தால் மீண்டும் மாவீரர்கள் உயிர்த்தெழுந்து விடுவார்கள் என்று அஞ்சுகின்றதனாலோ அவர்கள் அனுமதி கொடுக்க விரும்பவில்லை என்ற சந்தேகம் தமிழ் மக்களை பொறுத்தவரையில் ஒவ்வொருவர் மனதிலும் கேள்விக்குறியாகவே இருந்து வருகின்றது.

அன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை உருவாக்கிய பெருமை எமது தேசியத் தலைவரையே சாரும். அவரது சிந்தனையின் உருவாக்கமே இன்று தமிழ் மக்கள் மத்தியில் பெரு விருட்சமாக இருந்து எமது தமிழ்மக்களின் உரிமைகள், தேவைகளை பற்றி வெளி உலகுக்குப் பறை சாற்றிக்கொண்டிருக்கின்றது.அவ்வாறான நல்ல சிந்தனைகளின் இருப்பிடமாகவே அன்று தேசியத் தலைவரின் தளம் அமைந்திருந்தது.

இவ்வாறானவர்களின் உயரிய சிந்தனைகளுக்கு எம்மிடம் இன்று இருக்கும் ஒரே பலம் எமது ஆயுத பலமான வாக்குப் பலமாகும். இந்த வாக்குப் பலத்தினை அனைவரும் எதிர்வரும் 17ஆம் திகதி பயன்படுத்த வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகியிருக்கின்றோம்.

ஆகவே அனைத்து தமிழர்களும் தமிழ்த் தேசியம் வெல்வதற்காக வேண்டி உங்களது வாக்குப் பலத்தினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சின்னமான வீட்டிற்கு இட்டு எமது கட்சியை அம்பாறை மாவட்டத்தில் வெற்றிபெற உழைக்க முன்வரவேண்டும்–என்றார். (த)

## தீர்வை அடைவதற்கான சூழல் கூட்டமைப்பால் உருவாக்கப்பட்டுள்ளது

### முன்னாள் எம்.பி சுமந்திரன் தெரிவிப்பு



தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு திடீரென உதிக்கப் போவதில்லை. ஆனால், தீர்வொன்றை அடைவதற்கான சூழலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆன வழிகளில் உருவாக்கியிருக்கின்றது. இந்தச் சூழியல் மாற்றங்கள் தீர்க்கமானவையாக இல்லாத போதும் நிச்சயமாக சாதகமானவையே என கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

உடுவில் உதயசூரியன் சனசமூக நிலையத்தில் நடந்த உரையாடலில் பேசிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், யாழ்.மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளருமாகிய திரு. சுமந்திரன், இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் வினவப்பட்ட வினாக்களுக்குப் பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று சர்வதேச மட்டத்தில் தமிழருக்கிருக்கும் ஆதரவு வளர்ந்திருக்கிறது. உதாரணமாக, சர்வதேச விசாரணை 2009 மே மாதத்தில் இலங்கை அரசைப் பாராட்டித் தீர்மானம் நிறைவேற்றிய ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை 2014 மார்ச் மாதத்தில் இலங்கையில் யுத்தத்தில் இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் மீதான சர்வதேச விசாரணையை உள்ளடக்கியதொரு தீர்மானத்தை நிறைவேற்றியது. நாம் நீண்ட காலமாக சமஷ்டியைக் கோரி வந்திருக்கிறோம். இன்று அதற்கு சர்வதேச ஆதரவு இருக்கின்றது.

மேலும், நாம் மஹிந்தவை ஆட்சியில் இருந்து இறக்கினோம். நிகழ்ந்தேறிய மாற்றங்கள் பூரணமற்றவை. ஆனால் மாற்றமே நடக்கவில்லை என்பதும் உண்மைக்குப் புறம்பானதே. சில நிலங்கள் விடுவிக்கப்பட்டிருக்கின்றது. எல்லா நிலங்களும் விடுவிக்கப்பட வேண்டும். ஆனால் இந்த விடயத்தில் முன்னேற்றம் இருக்கின்றது. இங்கிருந்த இராணுவ ஆட்சியாளர்கள் பதவியிறக்கப் பட்டிருக்கின்றனர்.

வேறு தமிழ்க் கட்சிகள் இன்று வரை ஒரு விஞ்ஞாபனத்தை வெளியிட்டதாகத் தெரியவில்லை. எம்மைத் திட்டுவதைத் தவிர அவர்களிடம் வேறெந்தத் திட்டமும் இல்லை.

எம்மைப் பொறுத்தளவில் நாம் நடந்திருக்கும் இந்தத் திருப்பங்களை வலுப்படுத்த வேண்டும். தமிழ் மக்களது ஆணை பூரணமாக எமக்குக் கிடைக்க வேண்டும். எம் மீது இருக்கும் விமர்சனங்கள் விளங்கிக் கொள்ளக் கூடியவைதான். ஆனால் நாம் மட்டுமே இது வரை சாதித்தவர்களாக உங்கள் முன் நிற்கின்றோம். நாம் மட்டுமே தெளிவான ஒரு பாதையை வெளிக்காட்டி நிற்கின்றோம். நீங்கள் எங்களையே பலப்படுத்த வேண்டும்–என்றார். (த)

## தமிழர் ஜனவரி 8 ஏற்படுத்தியது ஜனாதிபதி மாற்றம் மாத்திரமே

### சொல்கிறார் அங்கஜன் இராமநாதன்

தமிழ் மக்கள் கடந்த ஜனவரி 8 ஆம் திகதி இந்த நாட்டில் ஏற்படுத்தியது ஜனாதிபதி மாற்றம் மாத்திரமே என்று குறிப்பிட்டுள்ள அங்கஜன் இராமநாதன், கடந்த 5 ஆண்டுகளாக நாடாளுமன்றத்தில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் இந்தப் பிரதேச நாடாளுமன்ற உறுப்பினர் என்ன செய்தார் என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

தன்னை இப்போது சந்திக்கும் மக்கள் தொகையினரைப் பார்க்கும் போது தான் வெற்றி பெறுவது உறுதி என்றும், யாழ்ப்பாண மக்களுக்கு சேவை செய்யக் கூடிய அமைச்சராவேன் என்றும் அவர் குறிப்பிட்டார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிடும் அங்கஜன் இராமநாதனது அலுவலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

2010 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் இங்கு போட்டியிடும் போது, அதுவும் தேசியக் கட்சியில் இங்கு போட்டியிடும் போது மக்கள் வாக்களிப்பார்களா என்ற சந்தேகத்துடன் போட்டியிட்டேன். தமிழ் மக்கள் தேசியக் கட்சி – சிங்களக் கட்சி என்று பார்ப்பதில்லை. யார், மக்களுக்கு சேவை செய்கின்றார்களோ அவர்களுக்கு வாக்களிக்கின்றனர். அந்த வகையில்தான் என்னையும் அவர்கள் தேர்வு செய்தனர். தற்போது என்னைப் பலதரப்பினரும் சந்திக்கின்றனர். நான் வெற்றி பெறுவது உறுதியாகி விட்டது. அமைச்சராக வருவேன். யாழ்ப்பாண மக்களுக்குச் சேவை செய்யும், அமைச்சுப் பதவி நிச்சயம் ஜனாதிபதி எனக்கு வழங்குவார். மக்கள் பிரச்சினையை எப்படித் தீர்க்கப் போகின்றேன் என்பது பற்றித்தான் இப்போது சிந்தித்துக் கொண்டிருக்கின்றேன்.

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், நல்லவர்களை – படித்தவர்களை – சேவை செய்யக் கூடியவர்களைத் தெரிவு செய்யுமாறு கூறியுள்ளார். நான் அப்படிப்பட்ட ஒருவன் என்று மக்கள் கூறுகின்றார்கள்.

எங்களுடைய நாடாளுமன்ற ஆசனம் 9 இலிருந்து 7 ஆகக் குறைந்துள்ளது. இதற்கு காரணம் என்ன ? சனத்தொகை குறைந் தமை. அந்த சனத்தொகை எப்படிக் குறைந்தது. போரினால் கொல்லப் பட்டவர்கள் சிறு வீதத்தினர். எஞ்சி யோர் புலம்பெயர்ந்தனர். எங் களை ஆரம்பத்தில் அரசியல் அகதி கள் என்று வெளிநாட்டில் அழைத்தவர்கள் இப்போது பொருளாதார அகதிகள் என்று சொல்கின்றனர்.

இளைஞர் – யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு இன்மையால்தான் அவர்கள் வெளிநாடு போகின்றனர். அவர்களுக்குரிய வேலை வாய்ப்புக்களை வழங்குவதையே நாங்கள் நோக்காகக் கொண்டிருக்கின்றோம்.

நான் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கப் போவதில்லை. எனது செயற்பாடு முழுவதும் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவுடனானதாகத் தான் இருக்கும் – என்றார். (த–5–ரி5)

## 1987 இல் ஈ.பி.ஆர்.எல்.எவ் அடித்தது இன்றும் வலிக்கிறது

### முன்னாள் எம்.பி. சிறிதரன் தெரிவிப்பு



எழுத்தில் ஒரு கொள்கையினையும், வாய்க் கோசத்தில் ஒன்றினையும் கொண்டுள்ள கட்சியினர் கொள்கையினை எழுத்தில் கொண்ட எமது கட்சியினை விமர்சிப்பது நகைப்பிற்குரியது என்று குறிப்பிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், 1987 ஆம் ஆண்டு என்னை இந்திய இராணுவத்தினர் கைது செய்து தாக்கியதை விட அப்போது ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பினர் அடித்ததுதான் இன்றும் எனக்கு வலித்துக் கொண்டிருக்கின்றது என்று குறிப்பிட்டார்.

நல்லூர் செட்டித்தெருவில் உள்ள சனசமூக நிலையத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், சி.சிறீதரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய, நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், ஒரு நாடு இரு தேசம் என்று வெற்றுக் கோசம் போடும் கட்சியின் எழுத்தில் உள்ள யாப்பில் இன்றுவரை உள்ளது ஒற்றையாட்சிதான். அதனை மாற்றம் செய்யாது இலங்கை தமிழ் அரசுக் கட்சி எனப் பெயர் வைத்துள்ள எமது கட்சியில் பிழை பிடிக்கின்றனர், அகில இலங்கை என்னும் சொல்லினை வைத்துள்ளவர்கள்.

எமது நாடு பலவிதமான நெருக்கடிகளை சந்தித்தது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான காலம். நான் தற்போது உரையாற்றும் இதே ஊரில்தான் 1987 ஆம் ஆண்டு இந்திய இராணும் என்னைக் கைது செய்து 7 நாள்கள் தடுத்து வைத்திருந்து. அப்போது இந்திய இராணுவத்திலும் விடவும் என்னை கடுமையாகத் தாக்கியது ஈ.பி.ஆர்.எல்.எவ்.தான். அந்த வலி இன்றும் உள்ளது.

தற்போது இன்னுமொருவகையான காலம். இந்தக் காலத்தில் வாக்கு கேட்பவர்களில் ஒரு கட்சியினரின் கோசம் ஒருநாடு இரு தேசம் என்பதாகும். தேசம் என்பது வடமொழிச் சொல் அதற்கும் சரியான தமிழ், நாடு என்றே அர்த்தப்படும். அவ்வாறானால் ஒரு நாடு இரு நாடு என்றா கூறுகின்றனர். இருநாடுகளை ஒரு நாடு எனக் கோர வேண்டிய தேவை இல்லை. பொய் உரைத்து மக்களை ஏமாற்றக் கூடாது – என்றார். (த–101)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒன்றே தமிழ் மக்களுடைய ஒரே ஒரு கட்சி

## எமது இலக்கு எப்போதும் ஒன்றுதான் என்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் சித்தார்த்தன்

சந்திப்பு - டிலீப்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒன்றுதான் மக்களுடைய ஒரே ஒரு கட்சி. தமிழ் மக்களுக்காக இருக்கின்ற ஒரே ஒரு கட்சி. தமிழர்களுடைய நன்மைகள் தீமைகள் அனைத்திலுமே பங்குபற்றுகின்ற கட்சி. மக்களுடைய விடுதலைக்காகவே நாங்கள் எதனையும் செய்கின்றோம் என்று தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் சித்தார்த்தன்.

அவர் உதயனுக்கு வழங்கிய செவ்வியின் விபரம் இங்கே.

**நடப்பு நாடாளுமன்றத் தேர்தலில் திம்புக் கோட்பாடு பற்றி அதிகம் பேசப்படுகின்றது. அதனை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியம் இருக்கின்றதா ?**

திம்புக் கோட்பாடு என்பது கோட்பாடுகள். அதை அரசியல் அமைப்பு ரீதியாக மாற்றம் கொடுக்க வேண்டும். அரசியல் அமைப்புக்குள் அதனை எவ்வாறு கொண்டு வருவது என்பதைப் பார்க்க வேண்டும். அதைப் புகுத்துகின்ற முறை சுயாட்சி கொண்ட ஒரு முழுமையான சமஷ்டி அமைப்பு என்பதுதான் அதன் அர்த்தம். நாங்கள் அதனை உருவாக்குகின்றபோது அந்த அடிப்படையில்தான் அதனைப் பற்றி பேசினோம். சுயாட்சியை – சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி, வரக்கூடிய சமஷ்டி அமைப்பு. இதை நாங்கள் எவருமே இன்று வரை கைவிடவில்லை. இதனை நடைமுறைப்படுத்த முடியும். அதனால்தான் தேர்தல் அறிக்கையிலும் அதனைக் குறிப்பிட்டுள்ளோம்.

**திம்புக் கோட்பாட்டைக் கைவிடவில்லை என்று நீங்கள் குறிப்பிடுகின்றீர்கள். ஆனால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தாங்கள் மாத்திரமே திம்புக் கோட்பாட்டைத் தொடர்ந்து வலியுறுத்துவதாகவும், 2010 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனைக் கைவிட்டு விட்டதாகவும் குற்றம் சுமத்துகின்றதே ?**

திம்புக் கோட்பாடு என்றால் என்ன ? இதெல்லாம் விளங்காத மக்கள்தான் இருக்கின்றார்கள் என்பதை நினைத்துக் கொண்டு அந்த மக்களை குழப்புகின்ற, குழப்பி அந்தக் குட்டையில் ஒரு மீனைப் பிடிக்கலாம் என்பதற்காக இந்த விடயங்களை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முன்வைக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை, முன்னணி குறிப்பாக 2010 ஆம் ஆண்டு வரை என்று சொல்லக் காரணம், 2010 ஆம் ஆண்டு வரையில் திம்புக் கோட்பாட்டை கூட்டமைப்பு பின்பற்றவில்லை. ஏனென்றால், 2009ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் இருந்தார்கள். விடுதலைப் புலிகள் என்ன கொள்கையை வைத்திருந்தார்களோ, அந்தக் கொள்கையைதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் வைத்திருந்தது. இது எல்லோருக்கும் தெரிந்த ரகசியமான உண்மை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2009 ஆம் ஆண்டு வரையில் ஈழக் கோரிக்கையைதான் ஆதரித்து நின்றது என்று சொல்லுகின்ற துணிவு கஜனுக்கு இல்லை.

சமஷ்டி அமைப்பு, என்று சொன்னாலே சுயநிர்ணயம் சுயாட்சி பற்றித்தான் பேசுகின்றோம். நான் முன்னரே குறிப்பிட்டவாறு இதனை அரசமைப்பில் இணைக்கும் போது – உள்புகுத்துகையில், திம்புக் கோட்பாடு என்று வெறுமனே எழுதி விட்டுப் போக முடியாது. இதை அரசமைப்புக்கு ஏற்ப போட வேண்டும். இது அவர்களுக்கு விளங்கவில்லையோ அல்லது விளங்கிக் கொண்டு மக்களை குழப்புகின்றார்களோ எனக்குத் தெரியவில்லை.

**சமஷ்டி அடிப்படையிலான தீர்வை முன்வைத்து வெளியிடப்பட்டுள்ள உங்களின் தேர்தல் அறிக்கை, தென்னிலங்கையில் பெரும் சலசலப்பை உருவாக்கியிருக்கின்றதே. இது பின்னடைவைக் கொடுக்குமா ?**

போரின் முடிவின் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகவும் பக்குவமாக விடயங்களை நகர்த்த வேண்டும் என்றுதான் திட்டமிடுகின்றது. இதில் சம்பந்தர் மிகத் தீவிரமாக இருக்கின்றார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சுயநிர்ணயத்தைப் பற்றி இதில் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டபடியால் தென்பகுதியில் மிகப்பெரியதொரு எதிர்ப்பலை உருவாகியிருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒன்றுதான் மக்களுடைய ஒரே ஒரு கட்சி. தமிழ் மக்களுக்காக இருக்கின்ற ஒரே ஒரு கட்சி. தமிழர்களுடைய நன்மைகள் தீமைகள் அனைத்திலுமே பங்குபற்றுகின்ற கட்சி. மக்களுடைய விடுதலைக்காகவே நாங்கள் எதனையும் செய்கின்றோம்.

மக்களின் எண்ணங்கள் – பாதுகாப்புகளுக்கு குந்தகம் விளைவித்துக் கொண்டு, நாங்கள் கொழும்பிலும் அமெரிக்காவிலும் இருந்து அரசியல் பேச முடியாது. மக்களின் பாதுகாப்பை இங்கு உறுதிப்படுத்த வேண்டும். அவர்களுடைய நியாயமான அபிலாஷைகளை உள்ளடக்கிய தீர்வை நோக்கிய பயணத்தையும் கைவிட முடியாது.

ஏனென்றால், 2009 இன் பின்னர் பலவீனமான சமூகமாக மாற்றப்பட்டிருக்கின்றோம். பொருளாதார ரீதியாக, எண்ணிக்கையில், கல்வி ரீதியில் பலவீனமாகியுள்ளோம். ஆரோக்கியமான சமூகம்தான் விடுதலைப் போராட்டத்தை நோக்கி நகரக் கூடிய சமூகமாக இருக்க முடியும். 1970 ஆம் ஆண்டுகளில் நாங்கள் ஆயுதம் எடுக்கும் போதும் – அப்போது ஆயுதம் ஏந்திய ஏனைய இயக்கங்களும் பொருளாதார ரீதியாக பலமானவர்களாகத்தான் இருந்திருக்கின்றார்கள்.

பொருளாதார பலம் போராட்டத்துக்கு தேவை என்பதைச் சொல்லவில்லை. ஆனால் பொருளாதாரப் பலம் இல்லாமல் போராட முடியாது. இதனை நான் நடைமுறையில் கண்டவன். பேச்சுக்குச் சொல்லலாம், பொருளாதாரப் பலம் தேவையில்லை என்று. நடைமுறையில் அது தேவை.

**2011 ஆம் ஆண்டு வரையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உங்களது கட்சி இணைக்கப்படவில்லை. 2011 ஆம் ஆண்டுதான் இணைந்து கொண்டீர்கள். ஏன் அது வரையில் கூட்டமைப்பில் இணையாமல் இருந்த நீங்கள், 2011 ஆம் ஆண்டு இணைந்து கொண்டீர்கள். அந்த மாற்றத்துக்கான காரணம் என்ன ?**

ஆரம்பத்தில் நாங்கள் நம்பினோம், தமிழ் மக்களின் போராட்டம் எந்த வகையினுடையதாக இருந்தாலும் மிக முக்கியமான அம்சம். ஆனால் எங்களைப் பொறுத்தவரையில், போராட்டத்துக்கு குந்தகம் இல்லாமல் மக்களுடைய துன்பங்களுக்கு ஓர் வழி கண்டுபிடிக்க வேண்டும். மக்களுடைய துன்பங்களை போக்க வேண்டும். இந்த விடயத்தில் போராட்டம் நடந்து கொண்டிருந்த காலத்திலும் கூட, நாங்கள் நாடாளு மன்ற உறுப்பினராக, நகரசபைகளை கைப்பற்றி வைத்திருந்த காலத்திலும், வவுனியாவில், மன்னாரில் எங்களால் இயன்றளவுக்கு அந்த மக்கள் பாதுகாப்பாக இருக்கின்ற நிலைமையை உருவாக்கியிருந்தோம்.

அபிவிருத்தி வேலைகள், கல்வி – சுகாதார அபிவிருத்தி விடயங்களை முன்னெடுத்தோம். வடக்கு – கிழக்கில் ஒரே ஒரு இடம், இராணுவ முகாம் வேலியுடன் மக்கள் குடியமர்ந்தது என்றால், அது வவுனியா ஜோசப் முகாம் அருகில்தான். வன்னி முழுவதையும் கட்டுப்படுத்தி வைத்திருந்தது வவுனியா ஜோசப் முகாம்தான். அதன் கிழக்குப் புறமாக ஒரு வேலியுடன் மக்கள் குடியிருப்பு இருந்தது. இது எங்களால் சாத்தியமாக இருந்தது. போருக்கு எதிராக இதைச் செய்யவில்லை. போரை பிழை என்றும் சொல்லவில்லை. அப்படியென்றால், நாங்கள் ஆயுதம் எடுத்திருக்கமாட்டோம்.

ஆனால் அந்தக் காலகட்டத்தில், – போர்க் காலத்தில் – மக்கள் வாழ வேண்டும். இதை நாங்கள் முழுமையாக நம்பினோம். போர் நடந்து கொண்டிருக்கின்ற ஒரு விடயம். ஆனால் மக்களுடைய வாழ்க்கை போய்க் கொண்டிருக்க வேண்டும். அனைத்து மக்களுமே போரில் ஈடுபட்டவர்கள் அல்ல. அந்த மக்கள் வாழ வேண்டும். நாங்கள் வெறுமனே நிலத்துக்காக போராடவில்லை. மக்களுக்காகத்தான் போராடியவர்கள்.

போர் முடிந்த பின்பு ஏற்பட்ட சூழ்நிலை, போரின் பின்னர் கூட மஹிந்த அரசு, தமிழ் மக்களை ஒட்டுமொத்தமாக அடிமைப்படுத்துகின்ற அல்லது இந்த நாட்டை விட்டுத் துரத்துகின்ற செயற்பாடுகளை முன்னெடுத்தது. முக்கியமாக வடக்கு மாகாணத்தைக் கூட குடிப்பரம்பல் விடயத்தில் ஒரு கிழக்காக மாற்றுகின்ற செயற்பாடுகளை முன்னெடுத்தது. இதையெல்லாம் பார்த்துத்தான் நாங்கள் மாறுவதற்கு முடிவு எடுத்தோம். இனி நாங்கள் எல்லோரும் ஒற்றுமையாக இருந்தால் ஒழிய இந்த அரசையோ, எந்த அரசையோ முகம் கொடுக்க முடியாது. போராட முடியாது என்ற காரணத்திற்காகத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்தோம்.

அந்தப் பாதையிலேயே இன்றும் பயணிக்கின்றோம். எங்களுடைய இலக்கு விடயத்தில் ஒற்றுமையாக இருக்கின்றோம்.

**நீங்கள் ஓர் ஆயுதப் போராட்டக் குழுவுக்கு தலைமை வகித்தவர் என்ற வகையில், தமிழ் மக்களுடைய ஆயுதப் போராட்டத்தின் தோல்விக்கு என்ன காரணம் என்று கருதுகின்றீர்கள் ?**

பல குழுக்களாகப் பிரிந்து நாங்கள் போராட்டம் நடத்தியதுதான் பலர் தோல்விக்கு காரணம் என்று நினைக்கின்றார்கள். உண்மையான காரணம் அதுவல்ல.

1983 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நான், ஜி.பார்த்தசாரதியைச் சந்தித்தேன். அவர் என்னுடைய தந்தையாரின் நண்பர். இதனால் அவர் என்னுடன் திறந்த மனதுடன் கதைத்தார்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் இந்தியா ஒரு தனி நாடு வருவதை அனுமதிக்க மாட்டாது. ஆகவே நீங்கள் ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஒரு நியாயமான தீர்வுக்கு உங்களை தயார்படுத்திக் கொள்ளுங்கள். என்று சொன்னார். இது எனக்கு மாத்திரமல்ல, மற்றைய இயக்க தலைமைகளுக்கும் சொல்லியிருப்பார்.

இந்தியாவின் கொள்கைகளில் மாற்றம் வரலாம் என்ற நம்பிக்கை. அதனால்தான் நாங்கள் எல்லோரும் போராட்டத்தை எடுத்துச் சென்றோம். அடிப்படையில் நாங்கள் ஒன்றை மறந்து விட்டோம் சர்வதேசம் ஒரு போதும் தனிநாடு உருவாக விடாது என்று.

இங்கு ஒரு ஆயுதப் போராட்டம் – கோத்தபாயவினதோ மஹிந்தவினதோ கெட்டித்தனம் அல்ல. ஒட்டுமொத்த சர்வதேச சமூகமும் தீர்மானித்து விட்டார்கள் இலங்கையில் ஒரு ஆயுதப் போராட்டம் முழுமையாக ஒடுக்கப்பட வேண்டும். இப்போது சர்வதேச இராஜதந்திரிகளுடன் கதைக்கின்ற போது அவர்கள் தெளிவாகச் சொல்லுகின்றார்கள்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்த மட்டில், அவர்கள் ஈழத்தைக் கைவிட மாட்டார்கள். ஒன்றுபட்ட தீர்வுக்கு வரமாட்டார்கள். என்பதிலே நாங்கள் நூறு வீதம் உறுதியாக இருந்தோம். ஆகையினால் எங்களுக்கும் வேறு வழி இருக்கவில்லை. அதனால் போரை நடத்திய ராஜபக்ஷ அரசுக்கு உதவினோம். ஆனால் அவர் தீர்வு விடயத்தில் எங்களை ஏமாற்றி விட்டார் என்று, அவர்கள் இப்போது தெரிவிக்கின்றார்கள்.

**போருக்கு சர்வதேசம் பங்களிப்பு வழங்கியது எனில், போரின் போது நடந்த மோசமான மனித உரிமை மீறல்களும் சர்வதேச சமூகம் உடந்தையாக இருந்ததா ? மனித உரிமை மீறல்களை அனுமதித்திருந்ததா ?**

அவர்களைப் பொறுத்த வரை ஒரு லட்சம் இரண்டு லட்சம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள் என்பது செய்தி. ஏதோ ஒரு நாட்டில் சண்டை, அவ்வாறு நடந்தது என்பதுதான் அவர்களின் உணர்வு. ஆனால் எங்களுக்குத்தான் அவர்கள், உடன்பிறப்புக்கள்.

இன்று புலம்பெயர் உறவுகளும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒவ்வொரு நாடுகளிலும் அழுத்தங்கள் கொடுக்கின்ற படியால்தான் அவர்கள் இதை ஒரு விடயமாக எடுத்து, ஐ.நா. தீர்மானங்களை கொண்டு வந்திருக்கின்றார்கள். அந்த நேரத்தில், அவர்கள், விடுதலைப் புலிகளை ஒடுக்குவதற்கு என்ன வழியையும் பாவியுங்கள் என்ற நிலைப்பாட்டில்தான் இருந்திருப்பார்கள் என்றுதான் நான் எண்ணுகின்றேன்.

**தமிழ் மக்கள் தொடர்ச்சியாக பல தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவளித்திருக்கின்றார்கள். நடப்பு தேர்தல் தொடர்பில் மக்கள் ஆர்வமில்லாத நிலைமை காணப்படுகின்றது. இதனை நீங்கள் உணர்கின்றீர்களா ? இதற்கு என்ன செய்யப் போகின்றீர்கள் ?**

மக்கள் மத்தியில் ஒரு அதிருப்தி இருக்கின்றது. இதனை நான் மறுக்கவில்லை. அதிருப்தி எப்படி வந்தது என்றால், மக்கள் எதிர்பார்த்தார்கள் மாகாணசபை மூலம் மிகப்பெரிய மாற்றம் வரும் என்று. அந்த மாற்றத்தை அவர்கள் பார்க்கவில்லை. இந்த மாற்றம் வராததற்கு எங்கள் மீது தவறு இல்லை என்று கூறுகின்ற போது மக்கள் ஏற்றுக் கொள்கின்றார்கள். தவறு, அன்றிருந்த மஹிந்த அரசு – அவரின் பிரதிநிதியாக இருந்த ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரே. மாகாண சபையை இயங்கவிடாமல் ஒவ்வொரு விடயங்களிலும் முட்டுக்கட்டை போட்டுக் கொண்டிருந்தார்கள்.

எங்கள் மக்களின் நலனுக்காக முதலமைச்சர் நிதியத்தைஉருவாக்கமுயற்சித்தபோதுஅதற்கு தடைமேல் தடை போட்டுக் கொண்டிருந்தார்கள். முதலமைச்சர் நிதியத்தை உருவாக்க நாங்கள் முயன்றது இங்கு பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்வதற்கு. வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு.

மக்களுடைய வாழ்வாதாரத்தை கொடுத்து வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது. பொருளாதார ரீதியில் பலமான மக்கள் கூட்டம்தான் தனது விடுதலையைப் பற்றி சிந்திக்கும். அது முக்கியமான அம்சம். அதே நேரத்தில் நியாயமான தீர்வு. இரண்டும் சமாந்தரமான பயணம். இதனை நாங்கள் முன்னெடுக்கவுள்ளோம். இதனை மக்களிடம் நாங்கள் முன் கொண்டு செல்வோம். அதன் மூலம், மக்கள் கொண்டுள்ள அதிருப்தியை மாற்றுவோம்.

**இறுதி நேர போரில் இறுதிப் பாதுகாப்பு வலயம் வரையிலான சண்டையில் மிகவும் துல்லியமான் முறையில் ராணுவம் தமது தாக்குதல்களை மேற்கொண்டிருந்தார்கள். ராணுவம் வேண்டுமென்றே தமிழ் மக்களைக் கொன்றது என்று யாரும் சொல்ல முடியாது இவ்வாறு, ஒரு நேர்காணல் 2010 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் உங்களால் வழங்கப்பட்டதாக, சமூக வலைத் தளங்களில் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாறான ஒரு கருத்தை தாங்கள் தெரிவித்திருந்தீர்களா ?**

நிச்சயமாக அப்படியான ஒரு நேர்காணல் நான் வழங்கவில்லை. ஒரு விடயம் நடந்தது. போர் முடிந்த காலத்தில் இந்திய நாடாளுமன்றக் குழு (கனிமொழி தலைமையில்) இங்கு வந்தது. அப்போது என்னைச் சந்தித்தார்கள். இந்திய அரசு நினைத்திருந்தால் போரை நிறுத்தியிருக்க முடியுமா என்று கேட்டார்கள். நான் சொன்னேன். நிச்சயமாக போரை நிறுத்தியிருக்கலாம். எப்போது என்றால், போர் மன்னாரில் ஆரம்பித்த போது, ஆகக் குறைந்தது மல்லாவியில் நடந்து கொண்டிருந்த போது, நிறுத்தியிருக்க முடியும். அந்த நேரத்தில் தமிழகத் தலைவர்களாக இருக்கலாம் இங்கு இருக்கக் கூடியவர்களாக இருக்கலாம், எவருமே அந்தக் காலத்தில் போரை நிறுத்தக் கேட்கவில்லை.

போர் நிறுத்தத்தை வலியுறுத்தத் தொடங்கியதே, புதுக்குடியிருப்புக்கு இராணுவம் சென்ற பிறகு. நீங்கள் உள்ளிட்ட எல்லோரும் நம்பினீர்கள், புலிகள் பின்வாங்குவார்கள் பின்பு பெரியதொரு தாக்குதல் நடத்துவார் கள் என்று. இதனடிப்படையில், நீங்கள் சொல்லுகின்றீர்கள். ஆகவே, புதுக்குடியிருப்புக்கு இராணுவம் போன பிறகு, போர் நிறுத்தத்தை கொடுத்து மஹிந்த அரசியல் தற்கொலை செய்ய மாட்டார் என்று கூறினேன். அவர்களும் அதை ஏற்றுக்கொண்டார்கள். இதைவைத்துக் கொண்டுதான், சரியான கருத்தை புரிந்து கொள்ளாமல், இல்லை புரிந்து கொண்டும் புரியாத மாதிரி எழுதுகின்றார்கள். (தி)

# வடக்கு-கிழக்கில் 1,870,000 பேர் இந்தமுறை வாக்களிப்பதற்கு தகுதி

கொழும்பு, ஓக. 3
நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு கிழக்கில் 18 லட்சத்து 70 ஆயிரத்து 73 பேர் வாக்களிக்கத்தகுதி பெற்றுள்ளனர்.
இதனடிப்படையில் வடக்கு மாகாணத்தில் 7 லட்சத்து 82 ஆயிரத்து 297 பேர் வாக்களிக்கவுள்ளனர். அதில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 5 லட்சத்து 29 ஆயிரத்து 239 பேரும், வன்னி மாவட்டத்தின் மன்னாரில் 79 ஆயிரத்து 433 பேரும் வவுனியாவில் 1 லட்சத்து 9 ஆயிரத்து 705 பேரும் முல்லைத் தீவில் 63 ஆயிரத்து 920 பேரும் வாக்களிக்கவுள்ளனர்.
கிழக்கு மாகாணத்தில் 10 லட்சத்து 87 ஆயிரத்து 776 பேர் வாக்களிக்கவுள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் 3 லட்சத்து 65 ஆயிரத்து 167 பேரும் அம்பாறை மாவட்டத்தில் 4 லட்சத்து 65 ஆயிரத்து 757 பேரும் திருகோணமலை மாவட்டத்தில் 2 லட்சத்து 56 ஆயிரத்து 852 பேரும் வாக்களிக்கத்தகுதி பெற்றுள்ளனர்.
இதனால் வடக்கு கிழக்கிலிருந்து இம்முறை தமிழ்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் எத்தனை பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவார்கள் என்ற எதிர்பார்ப்பு மேலோங்கி காணப்படுகின்றது.
இம்முறை நாட்டில் ஒரு கோடியே 50 லட்சத்து 44 ஆயிரத்து 490 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். தேர்தல் மூலம் 196 பேரை தெரிவு செய்வதற்காக 6 ஆயிரத்து 151 வேட்பாளர்கள் தேர்தல் களத்தில் குதித்துள்ளனர். எதிர்வரும் 17 ஆம் திகதி நாடு முழுவதும் 12ஆயிரத்து 21 வாக்களிப்பு நிலையங்களில் மக்கள் வாக்களிக்கவுள்ளனர்.(ற-ரி)

## ரயிலில் மோதி வவுனியாவில் ஒருவர் சாவு

வவுனியா, ஓக.3
வவுனியா மெனிக்பாம் பிரதேசத்தில் நேற்று அதிகாலை ரயிலில் மோதுண்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.
மன்னாரில் இருந்து வவுனியா நோக்கி பயணித்த ரயிலில் மோதுண்டே குறித்த நபர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
உயிரிழந்தவர் மெனிக்பாம் பகுதியை சேர்ந்த 30 வயதான இளைஞன் என அடையாளம் காணப்பட்டுள்ளது. (ற)

## லொறி குடைசாய்ந்ததால் 22 பேர் காயம்

கொழும்பு, ஓக.3
கம்பளை மற்றும் கெலிஓயா பகுதிகளுக்கிடையிலான ரயில் மார்க்கத்தில் லொறியொன்று குடை சாய்ந்ததில் 22 பேர் காயமடைந்துள்ளனர்.
யாத்திரை மேற்கொண்ட வாகனமொன்றே நேற்று காலை இவ்வாறு விபத்துக் குள்ளாகியுள்ளது.
காயமடைந்த வர்களில் இருவர் கம்பளை வைத்தியசாலையிலிருந்து பேராதனை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ற)

## வாக்காளர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் வவுனியாவில்



யாழ்ப்பாணம், ஓக.3
வவுனியா மத்திய பஸ் நிலையத்தில் நேற்றுக் காலை கபே அமைப்பு ஏற்பாடு செய்த வாக்காளர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டம் நடைபெற்றது.
வன்னி மாவட்ட தேர்தல் தொகுதிக்கான வாக்காளர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்யும்போது, சட்டங்களை மதிப்பவர், இலஞ்ச ஊழல்களில் ஈடுபடாதவர், சமூகவிரோத செயல்களில் ஈடுபடாதவர், குற்றவாளி அல்லாதவர், தேர்தல் சட்டங்களை மதிக்கும் ஒருவரையே வாக்காளர்கள் தெரிவு செய்யவேண்டும் என்னும் விழிப்புணர்வு கையெழுத்து நடவடிக்கையினை கபே அமைப்புடன் இணைந்து சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் ஏற்பாடு செய்திருந்தது.
அதில் சமயத்தலைவர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டு கையெழுத்திட்டனர். நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்திலிருந்து ஆரம்பமான இந் நிகழ்ச்சித்திட்டம் இன்று வவுனியா, மதவாச்சி, அனுராதபுரம் சென்று கொழும்பை நோக்கி செல்லவுள்ளது என்று கபே அமைப்பின் வவுனியா மாவட்ட ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர். (ற)

# கொள்ளையுடன் தொடர்புடைய மாணவர்கள் இருவர் கைது





மன்னார், ஓக.3
தங்க நகைகள் மற்றும் பணம் என்பவற்றை கொள்ளையிட்ட இரண்டு சந்தேகநபர்களை நேற்றுக் காலை கைது செய்துள்ளதுடன் கொள்ளையிடப்பட்ட நகைகள் மற்றும் பணத்தையும் மீட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.
இதன்போது சுமார் முப்பது பவுண் தங்க நகைகள், ஐந்து இலட்சம் ரூபா பணம் என்பவற்றை பொலிஸார் மீட்டுள்ளனர். மேலும் கொள்ளையிடப்பட்ட இரு கையடக்கத் தொலைபேசிகள் வாவியில் வீசப்பட்டு விட்டதாகவும் பொலிஸ் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.
கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களும் காத்தான்குடி முதலாம் குறிச்சியைச் சேர்ந்த மாணவர்கள் எனவும் அதில் ஒரு சந்தேக நபர் இவ்வருடம் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை எழுதவுள்ள மாணவன் எனவும் காத்தான்குடி பொலிஸார் குறிப்பிட்டனர்.
இந்நிலையில் கொள்ளையிடப்பட்ட பொருள்களுடன் சந்தேக நபர்களை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ற)

# பல்கலைக் கழக மாணவர்கள் குற்றக் கூண்டில் நிற்கக்கூடாது

### யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் எச்சரிக்கையுடன் அறிவுரை

யாழ்ப்பாணம், ஓக.3
யாழ்.பல்கலைக்கழகத்தின் கௌரவம் மிகவும் முக்கியமானது. அது பாதுகாக்கப்பட வேண்டுமானால், பல்கலைக்கழக மாணவர்கள் நீதிமன்ற குற்றக் கூண்டில் நிற்கக் கூடாது.– இவ்வாறு யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் தெரிவித்தார். இது தொடர்பில் பெற்றோரும் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.
அபாயகரமான ஆயுதங்கள் சட்டத்தின் கீழ் பெற்றோல் குண்டு, வாள், பொல்லு மற்றும் ஆயுதங்களுடன் யாழ் பல்கலைக்கழகத்தின் 2 மாணவர்கள் உட்பட 10 இளைஞர்களை சுன்னாகம் பொலிஸார் கைது செய்திருந்தனர்.
மல்லாகம் நீதிமன்றம் இவர்களை விளக்கமறியலில் வைத்து விசாரணைகளை நடத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தது. குறித்த இளைஞர்களை பிணையில் விடுமாறு முன்வைக்கப்பட்ட விண்ணப்பத்தை மல்லாகம் நீதிவான் நிராகரித்திருந்தார். அதையடுத்து, கைது செய்யப்பட்டிருந்த 2 பல்கலைக்கழக மாணவர்களின் கல்வியையும் எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டு, இவர்களுக்கு பிணை வழங்க வேண்டும் என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டிருந்தது.
கடந்த 30 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டிருந்த, வழக்குத் தவணையின்போது, இந்த மேன் முறையீட்டு பிணை மனு மீதான விசாரணையை, முடிவுக்குக் கொண்டு வந்தபோதே நீதிபதி இளஞ்செழியன் இந்த எச்சரிக்கையையும், அறிவுறுத்தலையும் விடுத்துள் ளார்.
அபாயகரமான ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டவர்களுக்கு பிணை வழங்க மறுத்து, அவர்களை உள்ளே தள்ளியிருந்த மல்லாகம் நீதிமன்றம் அவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுப்பதற்காக அரச பகுப்பாய்வு திணைக்களத்தை நாடியிருந்தது.
கைது செய்யப்பட்ட இளைஞர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்டிருந்த பெற்றோல் குண்டை (நேர்த்தியாக பெற்றோல் அடைக்கப்பட்ட போத்தல் குண்டு) ஆய்வு செய்து, அது அபாயகரமான ஆயுதங்கள் சட்டத்தின் கீழ் வருகின்றதா என்பது குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அரச பகுப்பாய்வாளருக்கு மல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.
இதற்கமைவாக நடத்தப்பட்ட ஆய்வில், இந்த பெற்றோல் குண்டு அபாயகரமான ஆயுதங்களின் பட்டியலில் அடங்கவில்லை என அரச பகுப்பாய்வு திணைக்களம் நீதிமன்றத்துக்கு சமர்ப்பித்திருந்த அறிக்கையயடுத்து, சந்தேக நபர்கள் 10 பேரையும் மல்லாகம் நீதிவான் சதீஸ்கரன் பிணையில் செல்ல அனுமதித்திருந்தார்.
இந்தத் தகவலை மேன் முறையீட்டு பிணை மனு வழக்குத் தவணையின்போது, யாழ் பல்கலைக்கழகத்தின் 2 மாணவர்கள் உள்ளிட்ட 10 சந்தேகநபர்களின் சார்பில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணிகள் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியனின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.
மல்லாகம் நீதிமன்றத்தில் சந்தேக நபர்கள் பத்து பேருக்கும் பிணை வழங்கப்பட்டிருப்பதால், மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த தமது பிணை மனுவை கைவாங்குவதற்கு நீதிமன்றத்திடம் அந்த சட்டத்தரணிகள் அனுமதி கோரியிருந்தனர்.
அப்போது 2 யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் பெற்றோர்களும் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தனர்.
சட்டத்தரணிகளின் விண்ணப்பத்தை ஏற்று, இந்த பிணை மனு மீதான விசாரணையை முடிவுக்குக் கொண்டு வந்த நீதிபதி இளஞ்செழியன் தெரிவித்ததாவது:
ரவுடித்தனம், தெருச் சண்டித்தனம், வாள்வெட்டு, கோஷ்டி மோதல் போன்ற பொது அமைதியைக் குலைக்கின்ற சமூக விரோதச் செயற்பாடுகளுக்கு இடமளிக்க முடியாது. இளைஞர்கள் கல்வி கற்பதற்காகவே, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்குச் செல்கின்றனர். அவர்கள் தெருச் சண்டித்தனத்தில் ஈடுபட முடியாது.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களாக இருக்கும் 2 பேர், தெருவில் நின்ற மற்ற இளைஞர்களுடன் பெற்றோல் குண்டு, பொல்லு வாள் மற்றும் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டமை பாரதூரமான விடயமாகும். எனவே, யாழ் பல்கலைக்கழகத்தின் கௌரவம் பாதுகாக்கப்பட வேண்டியது முக்கியம். அது, அங்கு பயிலும் மாணவர்களின் முக்கிய பொறுப்பாகும். அந்த கௌரவம் பாதுகாக்கப்பட வேண்டுமானால், பல்கலைக்கழக மாணவர்கள் நீதிமன்றத்தின் குற்றக் கூண்டுகளில் நிற்கக் கூடாது. அவர்கள் தமது பொறுப்பை உணர்ந்து செயற்பட வேண்டும். இது விடயத்தில் பெற்றோரும் அசமந்தமான போக்கில் இருக்க முடியாது. அவர்களும் தமது பிள்ளைகள் குறித்து கூடிய கவனம் எடுத்துச் செயற்பட வேண்டும். – என்றார். (ற)

# சந்தையில் கஞ்சா விற்றவர் கைதானர்

மட்டக்களப்பு, ஓக.3
மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர் பொலிஸ் பிரிவில் ஏறாவூர் பொதுச் சந்தையில் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்றுக் காலை இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.
மேற்படி இளைஞர் ஏறாவூர் பொதுச் சந்தைப் பகுதியில் வைத்து மறைமுகமாக கஞ்சா விற்பனையில் ஈடுபடுவதாக பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து ஸ்தலத்திற்கு விரைந்த பொலிஸார் 11 கிராம் கஞ்சாவுடன் குறித்த நபரைக் கைது செய்துள்ளனர்.
கைது செய்யப்பட்டவர், ஏறாவூர் ஓடாவியார் வீதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞர் ஒருவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்நிலையில், இது குறித்த மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ற)

## அமையும் கூட்டரசில் ஜே.வி.பி. இணையாது



கொழும்பு, ஓக.3
நாடாளுமன்ற தேர்தலுக்கு பின்னர் ஆட்சியமைக்கவுள்ள புதிய அரசில் பதவிகளைப் பெற்றுக் கொண்டு கூட்டரசில் இணைப் போவதில்லை என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.
தேர்தலுக்குப் பின்னர் ஆட்சி அதிகாரத்தை பெற முடியாவிட்டாலும் பலமான எதிர்க்கட்சியாக மக்கள் விடுதலை முன்னணி தனது கடமையை நிறைவேற்றும் எனவும் அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.
நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள நாடாளுமன்ற முறைமைக்கு அமைய வலுவான எதிர்க் கட்சியாக இருந்தால், மக்களுக்கு நிவாரணங்களை பெற்றுக் கொள்ள முடியும் என்பதால், மக்கள் விடுதலை முன்னணி எதிர்க் கட்சியில் பங்காற்றும் பலத்தை மக்கள் வழங்குவார்கள் எனவும் அந்தக் கட்சி நம்பிக்கை தெரிவித்துள்ளது.
ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றுடன் மக்கள் விடுதலை முன்னணி ஆட்சியில் இணையாது. இந்த இரு கட்சிகளும் காலம் கடந்து போன கட்சிகள் எனவும் மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது. (ற)

# மஹிந்த வந்தால் நாடு அழிவடையும்

### லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

கொழும்பு, ஓக.3
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மீண்டும் ஆட்சிப் பொறுப்பை வழங்கினால் நாடு அழிவடைந்துவிடும் என்று லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.
அதிகாரம் இல்லாத ஐக்கிய மக்கள் சுந்திரக் கூட்டமைப்பானது, தேர்தல் விஞ்ஞாபனத்தின் மூலம் வெறும் வாக்குறுதிகளை மட்டும் அள்ளி வீசிவருவதாக தெரிவித்த அவர், குறித்த தேர்தல் விஞ்ஞாபனம் நகைப்புக்கு உரியதெனவும் குறிப்பிட்டுள்ளார்.
ஐக்கிய தேசியக் கட்சி அரசிலேயே மக்களுக்கு அதிகளவான நிவாரணங்கள் வழங்கியதாக தெரிவித்த அவர், எரிபொருள் விலைக் குறைப்புக்கு ஐக்கிய தேசியக் கட்சி உயர்நீதிமன்றத்தில் அனுமதி பெற்றுக்கொண்டபோதும், மஹிந்த அரசு அதனை கருத்தில் கொள்ளாது எரிபொருள் விலையை அதிகரித்து என்றும் அவர் தெரிவித்தார்.
இந்நிலையில், மீண்டும் மஹிந்தவுக்கு நாட்டைக் கொடுத்தால் நாடு அழிவுப்பாதையை நோக்கி செல்லும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ற)



## அர்ஜூனவைச் சந்தித்து சந்திரிகா ஆலோசனை

கொழும்பு, ஓக.3
முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா மற்றும் ஐக்கிய தேசிய முன்னணியின் கம்பஹா மாவட்ட வேட்பாளர் அர்ஜூன ரணதுங்கவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று நடைபெற்றுள்ளது.
இச்சந்திப்பானது, மஹரகம பிரதேசத்தில் அமைந்துள்ள அர்ஜுனவின் அலுவலகத்தில் நடைபெற்றது.
இதன்போது, தேர்தல் பரப்புரை நடவடிக்கைகள் குறித்து அர்ஜுனவுக்கு சந்திரிகா ஆலோசனை வழங்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
அர்ஜுன உள்ளிட்ட ஐவரது உறுப்புரிமை சிறி லங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ள நிலையில், குறித்த ஐவரது தேர்தல் பரப்புரைக் கூட்டங்களிலும் கலந்து கொள்ளப்போவதில்லையென சந்திரிகா தெரிவித்திருந்தார். (ற)

## ஹெலி வழங்கப்படாததால் மஹிந்தவுக்குச் சிரமமாம்

கொழும்பு, ஓக.3
தமக்கு ஹெலிகொப்டர் வசதி செய்து கொடுக்கப்படாத காரணத்தால், தூரப்பிரதேச கூட்டங்களை முன்னாள்ஜனாதிபதிமஹிந்த ரத்து செய்து வருவதாகக் கூறப்படுகின்றது.
எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் குருநாகல் மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளராக களமிறங்கியுள்ள மஹிந்த, அனைத்து பிரசேதங்களுக்கும் காரிலேயே செல்ல வேண்டியுள்ளதால் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் கூறப்படுகிறது.
இந்நிலையில், இதனால் ஏற்படும் பயணச் சிக்கலைக் கருத்தில் கொண்டு மஹிந்த தூரப் பிரதேசக் கூட்டங்களை இரத்துச்செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.
மஹிந்தவின் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களுக்கு தேவையான பாதுகாப்பு வழங்கப்படவேண்டுமென, ஏற்கனவே அவரது தரப்பினர் அரசைக் கோரி வந்தனர்.
கடந்த ஜனாதிபதி தேர்தல் காலத்தில் பாதுகாப்பு படையினருக்கு சொந்தமான ஹெலிகளை மஹிந்த பயன்படுத்தி வந்தமையும் அதற்கான கட்டணங்கள் செலுத்தப்படாமல் பெரும் சர்ச்சை ஏற்படுத்தியிருந்தமையும் தெரிந்ததே. (ற)

## 'கட்- அவுட்', சுவரொட்டிகள் இந்தமுறை மிகக் குறைவு

### தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு



கொழும்பு, ஓக.3
சுவரொட்டிகள் மற்றும் கட் – அவுட்கள் காட்சிப்படுத்தப்படாதிருக்கும் இறுதித் தேர்தல் எதிர்வரும் ஒகஸ்ட் 17 ஆம் திகதியன்று நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலாகவே இருக்கக் கூடும் என தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய கூறியுள்ளார்.
ஏனைய தேர்தல்களுடன் ஒப்பிடும் போது இந்த முறை பொதுத் தேர்தலில் சுவரொட்டிகள் மற்றும் கட் – அவுட்கள் காட்சிப்படுத்தப் படுதல்கள் உச்ச விகிதாசாரத்தால் குறைவடைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
இந்த முறை இடம்பெறும் இந்தத் தேர்தலில் தம்மால் பொலிஸ் துறைக்கு வழங்கப்பட்டிருந்த பணிப்புரைகளுக்கு அமைய பொலிஸ் துறையானது சட்டத்தை சரியாக நடைமுறைப்படுத்தி சுவரொட்டிகள் மற்றும் கட் – அவுட்களை அகற்றியுள்ளது என்றும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.
சுவரொட்டிகள், கட் – அவுட்கள் காட்சிப்படுத்தப்படுவது சம்பந்தமாக சிறந்த ஒத்துழைப்பு கிட்டுவதாகவும் ஏனைய தேர்தல்களை விட இந்த முறை தேர்தலில் சட்ட விரோத சுவரொட்டிகள் மற்றும் கட் – அவுட்களை நீக்குவதற்கு எந்தளவுக்கு மக்கள் அதீத அக்கறை காட்டுகிறார்கள் என்பதைக் கூற வேண்டுமானால் நள்ளிரவு பதினொரு மணியளவிலும் தொலைபேசியில் தமக்கு அழைப்பு விடுத்து இடத்தைக் குறிப்பிட்டு அங்கே சுவரொட்டிகளை ஒட்டுகிறார்கள். தேர்தல்கள் ஆணையாளர் நித்திரை கொள்கிறாரா? எனத் தம்மிடம் கேள்வி எழுப்பியிருந்த சந்தர்ப்பங்களும் இருக்கின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

## ஐ.ம.சு.கூட்டமைப்பு ஆதரவாளர் மீதான தாக்குதலுக்கு ஹூனைஸ் கண்டனம்

கொழும்பு, ஓக.3
சாதாரண மக்கள் மீது முன்னெடுக்கப்பட்டுவரும் கொலை அச்சுறுத்தல்களும், தாக்குதல்களும் நல்லாட்சி அரசிலும் தொடர்ந்து வருகின்றமையை தாம் வன்மையாகக் கண்டிப்பதாக வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளருமான சட்டத்தரணி ஹூனைஸ் பாரூக் தெரிவித்துள்ளார்.
மன்னார், புதுக்குடியிருப்பு கிராமத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஆதரவாளரான அப்துல் ரசாக் முஹமட் அம்ஸ்




நேற்றுமுன்தினம் இரவு, கடுமையாக தாக்கப்பட்டுள்ள நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.
அவரை இன்று வைத்தியசாலைக்கு சென்று பார்வையிட்ட சட்டத்தரணி ஹூனைஸ் பாரூக் பின்னர் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–
அப்துல் ரசாக் முஹமட் அம்ஸ் நேற்றைய தினம் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் ஆதரவாளர்களால் கடுமையாக தாக்கப்பட்ட நிலையில் மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.
இந்த நல்லாட்சி அரசிலும் இவ்வாறான தாக்குதல்கள் இடம்பெறுவது கண்டனத்துக்குரிய விடயமாகும்.– என்றார். (ற)

## அமையவுள்ள ஐ.தே.க. ஆட்சியில் இருண்டயுகம் இல்லாது போகும்

### அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.3
ஐக்கிய தேசியக் கட்சியைத் தலைமையாகக் கொண்ட அரசு பெரும்பான்மையோடு ஆட்சியமைக்கும் போது கடந்த 12 வருடகாலமாக முஸ்லிம் சமூகத்துக்கு இருந்து வந்த இருண்ட யுகம் இல்லாமலாகிவிடுமென்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.
மட்டக்களப்பு மாட்ட தலைமை வேட்பாளர் அலி ஸாஹிர் மௌலானாவை ஆதரித்து ஏறாவூரில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரி வித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–
முஸ்லிம் காங்கிரஸின் அரசியலில் புதிய யுகம் பிறந்திருக்கின்றது. எல்லாவற்றுக்கும் மேலாக சகோதர தமிழ் சமூகத்தோடு முரண்பாட்டு அரசியலைச் செய்யாமல் கைகோர்த்துக் கொண்டு தமிழ் சமூகத்தோடு இணைந்து போகின்ற எழுச்சி பெற்ற அரசியலை முஸ்லிம் காங்கிரஸ் முன்னெடுத்து வருகிறது.
அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்த ஜனநாயகப் பாதையை நாம் கிழக்கு மண்ணிலே முன்னுதாரணமாய் நிலை நிறுத்திக்காட்டியிருக்கின்றோம்.
ஆட்சியமைக்கவுள்ள ஐக்கிய தேசியக்கட்சி அரசில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இதற்கு முன்பு அரசில் வகித்த பதவிகளை விட உயர்வான அந்தஸ்தோடு அதிகாரத்தோடு பத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் குறையாத அணியோடு பதவியில் அமரும்.– என்றார். (ற)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** உற்சாகத்துடன் செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் பன்மடங்கு உயரும். சொத்து வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். அரசியல்வாதிகளுக்கு, எதிர்பார்த்த பதவி கிடைக்கும்.

**இடபம்:** எதிரியும் அன்பு பாராட்டும் சூழ்நிலை உருவாகும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். சுபவிடயத்தில் நல்ல முடிவை எட்டுவீர்கள். பிள்ளைகள் வழியில் ஆடம்பரச் செலவு ஏற்படும்

**மிதுனம்:** எதிர்கால வளர்ச்சி குறித்து திட்டமிடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் உயரும். ஆரோக்கிய விடயத்தில் அக்கறை அதிகரிக்கும். வெளியூர் பயணத்தில் திடீர் மாறுதல் ஏற்படும்.

**கடகம்:** கடந்த கால அனுபவம், வெற்றிக்குத் துணை நிற்கும். தொழில், வியாபாரத்தில் முயற்சிக்கேற்ப இலாபம் கிடைக்கும். சிக்கனத்தின் மூலம் சேமிப்புக்கு வழி வகுப்பீர்கள். வாகனப் பயணத்தில் மித வேகம் பின்பற்றவும்.

**சிங்கம்:** நேர்மை எண்ணத்துடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பணி நிமித்தமாக வெளியூர் செல்ல நேரிடும். உறவினர் வருகையால், வீட்டுச் செலவு அதிகரிக்கும்.

**கன்னி:** உங்களின் பேச்சில் நல்லெண்ணம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். குடும்பத்தின் முக்கிய தேவைகளை நிறைவேற்றுவீர்கள். பணியாளர்கள், நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெறுவர்.

**துலாம்:** எதிர்கால வளர்ச்சி குறித்து திட்டமிடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் முயற்சிக்கேற்ப வருமானம் கூடும். உறவினர் வருகையால், ஆடம்பரச் செலவு ஏற்படும். வாகன போக்குவரத்தில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** குடும்ப விடயத்தை பிறரிடம் பகிர்ந்து கொள்ள வேண்டாம். தொழில், வியாபாரத்தில் தடை நீங்கி, வருமானம் உயரும். பணியாளர்கள், பணிச்சுமைக்கு ஆளாக நேரிடும். மனம் அமைதி பெறும்.


**தனுசு:** பொறுப்புடன் பணியாற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தினரின் நன்மதிப்பைப் பெறுவர். மாணவர்கள், படிப்பில் ஆர்வமுடன் ஈடுபடுவர்.

**மகரம்:** அன்றாடச் செயல்களில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். மனைவியின் ஆலோசனை, வளர்ச்சிக்கு துணை நிற்கும். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். உடல்நலனில் கவனம் செலுத்துவது நல்லது.

**கும்பம்:** சமூகத்தில் நன்மதிப்பு கிடைக்கப் பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சி திருப்தியளிக்கும். புத்திரர் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். குடும்பத்துடன் விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**மீனம்:** வெளிப்படையான குணத்துடன் பழகுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பிள்ளைகளுக்காக ஆடம்பரச் செலவு செய்ய நேரிடும். உறவினர்களின் ஆதரவால், மனம் மகிழ்வீர்கள்.

## பேஸ் புக்கில் பிறந்தவை...





**பிள்ளை** வரம் கேட்டு
கோயில் கோயிலாக ஏறி
இறங்கும் யாருக்கும்
தெரிவதே இல்லை...

**அம்மா** வரம் கேட்டு
அனாதை
இல்லத்தில் காத்திருக்கும்
குழந்தைகளின் கண்ணீர்
ஏக்கம்.....



# சண்டி வீரன்

## படத்துக்கு யு சான்றிதழ்

அதர்வாவின் எதிர்பார்ப்பைப் பொறுத்தவரை, பாலாவின் பரதேசிக்கு முன்; பரதேசிக்குப் பின் என்ற நிலைதான். அதுவரை படங்களில் ஹீரோ என்ற பெயரில் சும்மா வந்து போய்க் கொண்டிருந்தவரை, பண்பட்ட நடிகராக்கினார் பாலா. இன்று முன்னணி ஹீரோக்களில் ஒருவராகி விட்டார். அந்த நன்றிக்கடனை ஏகத்துக்கும் மனசில் வைத்திருக்கும் அதர்வா, பாலா கூப்பிட்டதுமே ஒப்புக் கொண்ட படம் சண்டி வீரன். களவாணி புகழ் சற்குணம் இயக்கும் இந்தப் படம் குறித்து அதர்வா பேசுகையில்; எனக்கு இயக்குநர் பாலா போன் செய்து உடனே வரச் சொல்லி அழைத்தார். உடனே போய் விட்டேன். கதை ஒன்று கேட்டேன். அதில் நீ நடிக்க வேண்டும் என்று கூறினார். நான் என்ன கதை, யார் இயக்குநர் என்று கூடக் கேட்கவில்லை. உடனே சரியென்று சொன்னேன். அதன் பிறகுதான் இயக்குநர் சற்குணம் என்பது தெரியும். களவாணி படத்தைப் பார்த்திலிருந்தே சற்குணம் இயக்கத்தில் நடிக்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. அது இப்போது நிறைவேறியுள்ளது. இந்தப் படத்தில்; நான் கிராமத்து இளைஞனாக நடித்திருக்கிறேன். கிராமத்துப் பின்னணியில் சாதாரண படமாக இந்தப் படம் உருவாகியிருக்கிறது. கிராமங்களில் படப்பிடிப்பு நடந்தது ரொம்பவும் புதிய அனுபவமாக இருந்தது என்றார். இந்தப் படத்தில் அதர்வாவுக்கு ஜோடி கயல் ஆனந்தி. அவர் கூறுகையில்; நான் கிராமத்துப் பெண்ணாக நடித்திருக்கிறேன். சற்குணம் இயக்கத்தில் நடித்தது மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. நிறையக் கற்றுக் கொள்ள வாய்ப்பு கிடைத்தது என்றார். சண்டி வீரன் படத்துக்கு 'யு' சான்றிதழ் கிடைத் துள்ளது. இந்தப் படம் எதிர்வரும் 7 ஆம் திகதி திரைக்கு வருகிறது.


## என்ன கொடுமை சார் இது???




பொதுவாக நாம் வாங்கும் சம்பளம்



நாம் வாங்குவதாக நண்பர்கள் நினைப்பது



நமது உறவினர்கள் நாம் வாங்குவதாக நினைப்பது...





## பாட்டியுடன் கடற்கரையில் குட்டி இளவரசர் ஜோர்ஜ்

பிரிட்டனின் குட்டி இளவரசரான ஜோர்ஜ் தனது பாட்டியுடன் கடற்கரையில் உற்சாகமாக ஓடி ஆடி விளையாடிய புகைப்படங்கள் வெளியாகியுள்ளன. பிரிட்டனின் இளவரசர் வில்லியம் மற்றும் இளவரசி கேட் மிடில்டன் தம்பதியினரின் மகனான குட்டி இளவரசர் ஜோர்ஜின் பிறந்தநாள் அண்மையில் கொண்டாடப்பட்டது. ஜோர்ஜ் தனது தாய்வழிப் பாட்டியான காரொலி மிடில்டனுடன் கடற்கரையில் உற்சாகமாக விளையாடிய புகைப்படங்கள் வெளியாகியுள்ளன. பிரிட்டனின் நோர்பொக் கடற்கரையில் எடுக்கப்பட்ட இந்தப் புகைப்படத்தில், அவர் தனது பாட்டியுடன் மணலில் வீடு கட்டியும் கடல் அலையில் காலை நனைத்தும் விளையாடியதும் பதிவாகியுள்ளது. மேலும் செல்லபிராணியான லூபோவும் உடன் இருந்தது.

## பாராளுமன்றத் தேர்தல் - 2015




யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்
தமிழர் விடுதலைக் கூட்டணி
**காசிப்பிள்ளை**
**குலசேகரம்**
(B.A.Dip.in.Ed. MEd.)

ஒரு விவசாயியாக, எழுது வினைஞராக, ஆசிரியராக, பிரதியதிபராக, சேவைக்கால ஆசிரிய ஆலோசகராக, கொத்தணி அதிபராக நேர்மையுடனும் தனித்துவமாகவும் சேவையாற்றிய நேர்மையாளனைத் தெரிவுசெய்யுங்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணி X 4

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



4

## சுரேஷ் க.பிரேமச்சந்திரன்

X 4

அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற
ஆக்கிரமிப்புக்களை அகற்ற
இழந்த வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க
**வீட்டுச் சின்னத்திற்கும் இலக்கம்**
**4 இற்கும் வாக்களியுங்கள்**

## பாராளுமன்றத் தேர்தல் – 2015

(வன்னி தேர்தல் மாவட்டம்)

வன்னி மண் காக்க
வறண்ட வாழ்வைப்போக்க...



8

X
இலங்கை தமிழரசு கட்சி
8 X

வலி தெரிந்தவன் வன்னி மண்ணிற்கு உரித்தானவன்
**வைத்திய கலாநிதி சி.சிவமோகன்**
(வடமாகாணசபை உறுப்பினர்)

தமிழ் தேசிய கூட்டமைப்பு

## நம்பிக்கை இழக்காதீர்கள், அக்கறை காட்ட நாங்கள் இருக்கின்றோம்...

**எம் மக்களால் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்ட**
**ஜனாதிபதி மைத்திரியின் வெற்றிலைச் சின்னம்**

**வடமராட்சி கிழக்கு மக்களின் வாழ்வு நிலையினை மாற்றுவேன். . . !**

வடமராட்சி கிழக்கு கேவில், ஆழியவளை, உடுத்துறை, மருதங்கேணி, தாளையடி, செம்பியன்பற்று, நாகர்கோவில், அம்பன், குடத்தனை, வல்லிபுரஆழ்வார் கோவில் மக்கள் தந்த ஆதரவிற்கு தலை வணங்கி . . . .

கடந்த கால அரசியல் வாதிகள் இப் பிரதேச மக்களின் அடிப்படை வசதியற்ற நிலையினை எள்ளளவேனும் கருத்திற் கொள்ளவில்லை.

கல்வி, சுயதொழில், விவசாயம், வீதி, குடிநீர், வீட்டுத்திட்டம் ஆகியவற்றினை எனது இளைஞர் அணிமூலம் ஜனாதிபதிக்கு நேரடி அழுத்தம் கொடுத்து உடனடியாக பெற்றுத்தருவேன்.

கடற்தொழிலாளர்கள் உச்சளவான மீன்களைப் பிடிப்பதற்கு உரிய அதி நவீன செயல்முறைத் திட்டங்களை அமுல்ப்படுத்துவேன்.

**அங்கஜன் இராமநாதன்**

(ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழு உறுப்பினர் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர்)



X
1

# டெங்கு நுளம்புகளின் பெருக்கம் குறித்து பாடசாலைகளில் ஆய்வு

தென்மராட்சி, ஓக.3

அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சை நடைபெறும் பாடசாலைகளில் டெங்கு நுளம்புகளின் பெருக்கம் உள்ளதா என்பதை பரிசோதித்து உறுதிப்படுத்துமாறு சுகாதார அமைச்சின் செயலாளர் சகல சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினருக்கும் பாடசாலைகளின் அதிபர்களுக்கும் அறிவித்துள்ளார்.

கடந்த வருட பரீட்சைகளின்போது நுளம்புகளால் பரீட்சார்த்திகள் சிரமங்களை எதிர்நோக்கியதாக முறைப்பாடுகள் கிடைத்ததையடுத்து பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்னர் பரீட்சை நடைபெறும் பாடசாலைகளில் டெங்கு நுளம்பின் பெருக்கம் உள்ளதா என்பதை பரிசோதித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறும் பாடசாலைகளில் டெங்கு நுளம்பு காணப்படின் அவற்றை அழிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் அறிவித்துள்ளார்.

இதேவேளை எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் வாக்களிப்பு நிலையங்களாகப் பயன்படுத்தப்படவுள்ள பாடசாலைகளிலும் டெங்கு பரிசோதனைகளை மேற் கொள்ளுமாறும் அறிவித்துள்ளார். (ற–9)

# மத்திய கல்லூரி ஆண்டு நிறைவு விழாவின் நிகழ்வுகள் ஆரம்பம்



தென்மராட்சி, ஓக.3

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 200வது ஆண்டு விழாவின் ஆரம்ப நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை 8மணிக்கு கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் தலைமையில் ஆரம்பமாகின. ஆரம்ப நிகழ்வுகளில் யாழ். மெதடிஸ்த தேவாலயத்தில் விசேட பிரார்த்தனை நிகழ்வு இடம்பெற்றது.

அதனைத்தொடர்ந்து கல்லூரியின் றொமைன் குக் மண்டபத்தில் நிகழ்வுகள் அரம்பமாகியது. நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவனும் ஒலிம்பிக் வீரருமான கலாநிதி என்.எதிர்வீரசிங்கம் கலந்து கொண்டார்.

கல்லூரியின் நிறுவுநர் முன்னாள் அதிபர் வண . லின்ஸின் திருவுருச் சிலைக்கான மலர் மாலையை கலாநிதி என்.எதிர்வீரசிங்கம் அணிவித்தார். நிறுவுநர் தின நினைவுப் பேருரையை ஓய்வுநிலை நூலகர் க.மணிவாசகர் நிகழ்த்தினார்.

நிகழ்வில் கல்லூரின் பிரதி அதிபர், உப அதிபர்கள். மாணவர்கள் ஆசிரியர் கள் பெற்றோர்கள் பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தினர் பழைய மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டார்கள்.

கல்லூரியின் 200ஆவது ஆண்டு விழா நிகழ்வுகள் 2016 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் வரை நடைபெறவுள்ளன. ஒவ்வொரு மாதமும் விசேட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ற–86)

## வாக்காளர் அட்டைகள் எழுதுமட்டுவாழ் உப அஞ்சலகத்தில்

தென்மராட்சி, ஓக.3

பளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இதுவரை மீள்குடியமர்வு இடம்பெறாத முகமாலை தெற்கு, இந்திராபுரம், வேம்பொடுகேணி மேற்கு ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த குடியிருப்பாளர்களின் பொதுத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் எழுதுமட்டுவாழ் உப அஞ்சல் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

வாக்காளர் அட்டைகள் உரியவரிடம் கையொப்பம் பெற்று கையளிக்க வேண்டும் என்பதால் குடியிருப்பாளர்கள் நேரில் வந்து வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ற–9)

# பனம் பொருள் உற்பத்தியாளருக்கு ரூபா ஒரு லட்சம் வரையில் கடன்

## பளைப் பிரதேச செயலர் தெரிவிப்பு

தென்மராட்சி, ஓக.3

பளைப்பிரதேசத்தில் பனம்பொருள் உற்பத்தியில் ஈடுபடுவோருக்கு ஒரு லட்சம் ரூபா வரையில் கடன் வழங்கப்படும் என்று பிரதேச செயலர் திருமதி ஜெபரமோதயன் தெரிவித்தார்.

பனை வளம் நிறைந்த பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் பனம் பொருள் உற்பத்தியை ஊக்குவித்து தரமான பொருள்களை உருவாக்கி பிரதேச மக்களின் பொருளாதாரத்தை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு வாழ்வின் எழுச்சி (சமுர்த்தி ) திணைக்களத்தின் ஊடாக ஒரு லட்சம் ரூபா வரை கடன் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் தரமான பனம்பொருள்களைக் கொள்வனவு செய்ய பனை அபிவிருத்திச் சபையினர் முன்வந்துள்ளதால் பனம்பொருள் உற்பத்தியில் ஈடுபடுவோர் தத்தமது பிரிவு வாழ்வின் எழுச்சி அலுவலருடன் தொடர்புகொள்ளுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

பிரதேசத்தில் சட்டவிரோதமாக பனை வளங்கள் அழிக்கப்பட்டு வருகிறது. இதனைத் தடுக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தினரால் நடத்தப்பட்ட பனம்பொருள் கண்காட்சியில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் கோகுலதாசன் உரையாற்றும்போது வட மாகாண மக்கள் தமது வீட்டுத் தேவைக்கு பனைமரங்களை காலங்காலமாக பயன்படுத்தி வருகின்றனர் என்பது அனைவரும் அறிந்த விடயம். இந் நிலையில் ஒரு பனை மரம் தறிக்கும்போது ஐந்து பனம் விதைகளை நட்டால் எதிர்காலச் சந்ததிக்கு பெரிதும் உதவுவதுடன் எமது நாட்டில் பனைவளம் அருகிவிடும் அபாயம் காணப்படாது என்றும் குறிப்பிட்டார். (ற–9)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 24 04 1934

மறைவு 04 07 2015

**அமரர் கந்தையா அருணாசலம்**

(ஓய்வு பெற்ற அதிபர்)

சிறப்பாக நாம் வாழ வழிகாட்டி சென்ற தெய்வமே அப்பா
நிறைவாக எமை வளர்த்த நினைவுகள் எமக்குண்டு
நேர்மையாய் நாம் இன்று நேர்த்தியுடன் வாழ்வதனை
நெற்றிக்கண் உடையானுடன் சேர்ந்தே நின்று
பார்ப்பது நிறைவாக உள்ளது அப்பா!!

கடந்த 04.07.2015 சனிக்கிழமை இறைபதம் அடைந்த எமது அன்புத் தந்தை அமரர் கந்தையா அருணாசலம் அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு இன்று [03.08.2015] திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம் பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பாலாவி தெற்கு,
கொடிகாமம்.

பிள்ளைகள்.

குருவே துணை

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் பார்வதிப்பிள்ளை கந்தையா**

புங்குடு தீவு - 03

திதி: அபரபஷ்ச சதுர்த்தி 03.08.2015



மண்ணவர்களுக்காக மண்ணில் 04.02.1924

விண்ணவர்களுக்காக விண்ணில் 13.08.2014

வட இலங்கை சர்வோதயத்தின் ஒளிவிளக்காய் குடும்பத்தின் குலவிளக்காய்
எமக்கெல்லாம் ஒழியா ஒளி தந்து எம் நெஞ்சமெல்லாம்
குடியமர்ந்திருக்கும் தொண்டரின் அன்னையே - உம்
பணியும் பாசமும் விசாலமானது உம்மை எண்ணுகையில் இதயமெல்லாம்
வெந்து நீறாய்ப் போகுதம்மா உளமதில் துன்பத்தின் வடுக்கள்
எம் மனக்கடலிலே என்றென்றும் கடலலைகளாய் நின்றாடும்
உம்மை நினைத்து கவி வடிக்கையில் கண்கள் குளமாகின்றன
இதயமும் கல்லாய் கனக்கின்றன ஆறவில்லை எம் துயரம்
நிறுத்த முடியாத கண்ணீரோடு நினைவு செய்கிறோம்.

இன்று [03.08.2015] திங்கட்கிழமை புங்குடுதீவு, வட இலங்கை சர்வோதய சேவை வளாகத்தில் நடைபெறும். அன்னாரின் நினைவுதின நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வடஇலங்கை சர்வோதயம்
புங்குடுதீவு.

வடஇலங்கை சர்வோதய
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

**திருமதி மீனாட்சிப்பிள்ளை தம்பிப்பிள்ளை**



அன்னையின் கரங்களில் தவழ்ந்தது 02.06.1926

ஆண்டவன் பாதங்களில் சேர்ந்தது 05.07.2015

திதி: சதுர்த்தி

ஈரைந்து மாதங்கள் எம்மைத் தன் மடியில் சுமந்து பாரினில் எமை ஈந்து பகல் இரவாய் விழித்திருந்து தன் இரத்தத்தைப் பாலாக எமக்கூட்டி வளர்த்தவளை எப்பிறவியில் காண்போம். நாம் இன்னொருக்கால் இப்புவியில்
" இறந்தால். மீண்டும் பிறந்தால் இடம்தா உந்தன் மடி மீது
இருந்தால் உந்தன் மகவாய் இருக்கும் வரம் வேண்டும் புவி மீது"

கடந்த 05.07.2015 இல் சிவபதமடைந்த எங்கள் குலவிளக்கு அமரர் மீனாட்சிப்பிள்ளை தம்பிப்பிள்ளை அவர்களின் சபிண்டீகரண நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அன்னாரின் இல்லத்தில் நாளை (04.08.2015) செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளதால் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் பங்கு கொண்டு ஆத்மசாந்தி நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். மேலும் இந்த நிகழ்விற்கு அழைப்பிதழ் தவறுதலாகக் கிடைக்காதவர்களும் அதனை மன்னித்து இந் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் 05.07.2015 அன்று அன்னாரின் மரணச்செய்திகேட்டு நேரடியாகவும் தொலை பேசி மூலமாகவும் கண்ணீர் அஞ்சலிகளின் மூலமாகவும் ஆறுதல் வழங்கி மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

"புஸ்பராஜேஸ்வரி பவனம்"
சின்னையார் கோவில் வீதி
கைதடி தெற்கு,
கைதடி,
021 205 7042

" அன்னையாய் அனைத்தும் தந்து
தன்னையே உருக்கிய தாயடி சரணம்"

குடும்பத்தினர்.

## மருத்துவபீட விடுதிக்கு நிதி திரட்ட 'அளப்பருங்கருணை' நாடகம்

யாழ்ப்பாணம், ஒக.3

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களின் விடுதித் தேவையைப் பூர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு நிதி திரட்டப்படுகின்றது. இதன் ஒரு முகமாக 'அளப்பருங் கருணை' என்ற நாடகம் மேடையேற்றப் படவுள்ளது. – என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நாடகம் குறித்தும் விடுதியின் தேவைகுறித்தும் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடொன்று நேற்று மருத்துவ பீட மாணவர் விடுதிக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்ட வைத்தியர்களாலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

மருத்துவ பீட மாணவர்களுக்கு விடுதி வசதி போதியளவில் இல்லை. துறைசார்ந்து அவர்கள் யாழ் போதனா வைத்திய சாலையை அண்மித்து இருக்க வேண்டிய நிலை உள்ளது. இந்த நிலையில் குறித்த இடத்தை வாங்குவதற்கான நிதி தற்போது திரட்டப்படுகின்றது. யாழ் பல்கலைக் கழக மருத்துவ பீடமானது நீண்டதொரு இடைவெளியின் பின்னர் வித்தியாசமான தொருகலைப் படைப்புடன்தன்னை இணைத்துக் கொள்கிறது. யாழ் மருத்துவ பீடத்தின் பழைய மாணவர்கள் – தற்போது வைத்தியர்களாகக் கடமை புரிபவர்கள் – தமது பீடத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் வதிவிட வசதியை மேம்படுத்தும் நோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட நிதி சேகரிப்பின் ஒரு பகுதியாக இந்த நடன நாடகத்தை மேடையேற்றுகிறார்கள்.

இதில் நோபல் பரிசு பெற்ற வங்கக் கவிஞர் ரவீந்திரநாத் தாகூரினுடைய 'சன்யாசி' எனும் நாடகத்தையும், அவருடைய 'கீதாஞ்சலி' மற்றும் 'வசந்தத்தின் சுழற்சி' ஆகிய கவிதைத் தொகுப்புகளிலிருந்து முக்கியமான சில கவிதைகளையும் கொண்டதாக 'அளப்பருங்கருணை' எனும் இந்த நடன நாடகம் அமைந்திருக்கின்றது.

இந்த நாடகத்தின் எழுத்துருவை ஆக்கிய ஈழத்தின் மூத்த நாடகவியலாளர்களுள் ஒருவரான குழந்தை ம.சண்முகலிங்கம் வழங்க இந்த நாடகத்தின் நடன அளிக்கையை மூத்த நடனக் கலைஞரான திருமதி சாந்தினி சிவநேசன் அவர்கள் வடிவமைத்திருக்கின்றார். இசையை தவநாதன் றொபேட் வழங்கியுள்ளார். இந்த நடன நாடகத்தின் இன்னுமொரு சிறப்பம்சமாக ஓவியக் கலைஞரான சனாதனன் அவர்களது இணைவு அமைந்திருக்கின்றது. அவர் இந்த நடன அளிக்கை முழுவதிலும் வர்ணங்களினாலும், வடிவங்களினாலும், தனது துறைசார் நிபுணத்துவத்தை வழங்கியிருக்கின்றார்.

எதிர்வரும் 8,9 ஆம் திகதிகளில் யாழ் மருத்துவ பீடத்தில் நடைபெறவுள்ள இந்த நாடகத்திற் கான அனுமதிச் சீட்டின் விலை ரூபா 5 ஆயிரம் ஆகும். – என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ற–10,ரி6)

## இறங்கியிருந்த தண்டவாளம் கண்டுபிடிக்கப்பட்டு சீரமைப்பு



தென்மராட்சி, ஒக.3

வீதிக் கடவையின் தண்டவாளம் இறங்கியிருந்தமை உரிய நேரத்தில் கட்டுபிடிக்கப்பட்டதால் பெரும் அனர்த்தம் தவிர்க்கப்பட்டது.

சாவகச்சேரி தனங்கிளப்பு வீதியில் உள்ள கடவையில் காணப்பட்ட தண்டவாளமே கடவை பாதையின் கீழ் சற்று இறங்கியுள்ளது. கடந்த வாரம் தணடவாளப் பரிசோதனையில் ஈடுபட்ட ரயில்வே பொறியியலாளர் குழு அதனைக் கண்டு பிடித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு, நேற்றுச் சீர்செய்தது.

தண்டவாளம் அமைக்கப்பட்ட காலத்தில் நாவற்குளி – பூநகரி (ஏ–32 ) வீதியும் சம காலத்தில் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்றன. அவ்வேளையில் பெருமளவு கனரக வாகனங்களில் கற்கள் உட்பட வீதிப் புனரமைப்புக்கான பொருள்கள் கொண்டு செல்லப்பட்டன. அத்துடன் மன்னார் கிளிநொச்சிக்கான பயணிகள் வாகனப் போக்குவரத்தும் இடம்பெற்றது. அதிக வாகனங்கள் பயணித்தமையால் தண்டவாளம் இறங்கியிருக்கலாமெனத் தெரிவிக்கப்பட்டது. (ற–9)

## சேதமாக்கப்பட்ட நீர்க் குழாயை சேதப்படுத்தியவர் திருத்தினார்

தென்மராட்சி, ஒக.3

ஆலய தேவைக்கென பொருத்தப்பட்டிருந்த குடிநீர் குழாயை அடித்து நொறுக்கி சேதம் விளைவித்த நபர் தானாக முன்வந்து அவற்றைத் திருத்திக் கொடுத்துள்ளார்.

கடந்த வாரம் தென்மராட்சி தெற்கு கோவிலாக்கண்டி மத்தி சிதம்பர சிவசுப்பிரமணியர் ஆலய தேவைக்காகப் பொருத்தப்பட்டி ருந்த நீர்க் குழாய்களை இனந்தெரியாதோர் அடித்து சேதப்படுத்தியிருந்தனர். இது தொடர்ப்ாக ஆலய நிர்வாகத்தினர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் அப்பகுதியைச் சேர்ந்த ஒருவர் மதுபோதையில் கிணற்றில் பொருத்தப்பட்டிருந்த 'புட்வால்வ்' மற்றும் நீர் விநியோகக் குழாய்களை அடித்து சேதப்படுத்தியதை ஒப்புக்கொண்டு அவற்றினைத் திருத்தித் தருவதாகக் கூறி திருத்தம் செய்து கொடுத்துள்ளார். இதனையடுத்து இரு பகுதியினரும் ஒத்துக் கொண்டு முறைப்பாட்டை மீளப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ற–9)

## கசிப்புடன் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக.3

வடமராட்சி வல்வெட்டித்துறைப் பகுதியில் கசிப்புப் போத்தல்களுடன் இருவரை வல்வெட்டித்துறை பொலிஸார் கைது செய்திருக்கின்றனர். பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே அந்த இரண்டு சந்தேக நபர்களையும் கைது செய்ததாக வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்தனர். இவர்களிடம் இருந்து கசிப்பு போத்தல்கள் மீட்கப்பட்டதாகவும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். (ற–109)

## வருடாந்த திருவிழா

தென்மராட்சி, ஒக.3

சாவகச்சேரி கல்வயல் விளைவேலி துர்க்காதேவி ஆலய பெருந் திருவிழா நாளை மறுதினம் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 13ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் ஆடி அமாவாசை தினத்தன்று தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ற–9)

* * *

சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு சந்தன முதலிச்சிபுலம் முருகமூர்த்தி ஆலய பெருந் திருவிழா நாளைமறுதினம் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 13ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் ஆடி அமாவாசைதினத்தன்று தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (ற–9)

* * *

யாழ்ப்பாணம் திருவண்ணை நகர் ஸ்ரீவைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த தேவி மஹோற்சவம் எதிர்வரும் ஏழாம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது. தொடர்ந்து 11தினங்கள் நடைபெறும் இந்த மஹோற்சவத்தில் 15ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

தினமும் காலைத் திருவிழா காலை 8.30மணிக்கும் மாலைத்திருவிழா மாலை 6 மணிக்கும் ஆரம்பமாகி நடைபெறும். விழாக் காலங்களில் அடியவர்கள் ஆலயத்துக்கு ஆசார சீலர்களாக வருகை தந்து வைத்தீஸ்வரப் பெருமானின் அருளைப் பெற்றுக்கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினரும் விழா உபயகாரர்களும் கேட்டுக்கெண்டுள்ளனர். (ற–ரி)

## பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை காவலாளிகளுக்கான கூட்டம்

வடமாகாணத்தில் 1987–1990 காலப்பகுதிகளில் பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைக் காவலாளிகளாக நியமனம்பெற்று அசாதா ரண சூழலால் பணியிழந்தவர்களுக்கான ஒன்றுகூடல் நடைபெறவுள்ளது. நாளை மறுதினம் 5ஆம் திகதி புதன்கிழமை புங்கன்குளம் புகையிரத நிலையத்திற்கு அருகில் காலை 8. மணிக்கு நடைபெறவுள்ள மேற்படி கூட்டத்தில் ஆவணங்களுடன் உரியவர்களை வருமாறு பாதுகாப்பற்ற புகையிரதக் காப்பாளர் சங்கத்தினர் (87–90) கேட்டுக் கொண்டுள்ளனர். (ற–10)

### யாழ்ப்பாணம் மாநகர சபை ஆதனவரி தொடர்பானஅறிவித்தல்

யாழ்ப்பாணம் மாநகர சபை நிர்வாக எல்லைக்குட்பட்ட ஆதனங்களுக்குரிய ஆதனவரி நிலுவைகளை 31.12.2015 இற்கு முன்னர் செலுத்துமாறு அறிவுறுத்தப்படுகின்றீர்கள். வெற்றுக்காணிகள், சேதமடைந்த கட்டடங்கள் பராமரிப்பற்ற நிலையிலுள்ள சகல ஆதனங்களினதும் ஆதன வரியும் 31.12.2015 இற்கு முன்னர் செலுத்தத் தவறினால் அந்த ஆதனங்களைச் சபை பொறுப்பேற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதனைச் சகல ஆதன உரிமையாளர்களும் கவனத்தில் எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மாநக்ரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.




வேலையாள்கள் தேவை
* சமையல் ஆள், சமையல் உதவியாளர் (பெண்கள்)
* சப்பளையர், சிட்டை எழுதுநர் (ஆண்கள்)
ஆகியவற்றுக்கு வேலையாள்கள் தேவை.
தொடர்பு: 077998 1896 (63766) (9.3.5)

வேலைவாய்ப்பு
நெல்லியடியில் இயங்கிக் கொண்டு இருக்கும் பிரபல தனியார் நிதி நிறுவனம் ஒன்றுக்கும் தனியார் கிளினிக் நிலையத்திற்கும் A/L சித்தியடைந்த ஆண், பெண் இருபாலாரும் தேவைப்படுகின்றனர்.
(வடமராட்சிப் பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது)
தொடர்பு: 077 253 1086 (சுதன்) (63765)(9.3.5)

வாடகைக்கு
திருமண மண்டபம், வீடு என்பன வாடகைக்கு உண்டு.
நிறுவனங்களுக்கும் உகந்தது.
விளையாட்டரங்க வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
தொ.பே. 077 491 9851

கார் விற்பனைக்கு
நல்ல நிலையில் உள்ள 5ஸ்ரீ மொறிஸ் மைனர் கார் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு. 077 491 9851

வீடுவளவு விற்பனைக்கு!
மீசாலை வடக்கு, வீரசிங்கம் மத்திய கல்லூரிக்கு அருகாமையில் சகல வசதிகளுடன், உடன் குடியேறக்கூடிய, நல்ல நிலையில் உள்ள 4 பரப்பு காணி வளவு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : நவா : 0766 686740
0061 3425808199
தவம் : 0775 977210

NEW SCIENCE HALL JAFFNA
விடுமுறைகால வகுப்பு
2016 A/L
புலங்கள்
MON, TUE, WED, THU
9.30 - 11.30
BY
Mr. S. சோதிலிங்கம்
2017 A/L
பாயி பொறியியல்
(நீர் நிலையியல்)
MON, TUE, WED, THU
7.30 - 9.30
ஆரம்பம்: 04.08.2015

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# இலஞ்ச விசாரணை ஆணைக்குழுவின் ஆணையாளர்கள் குறித்து விசாரணை

## அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானமாம்

கொழும்பு, ஓக.3

இலஞ்ச, ஊழல்கள் விசாரணை ஆணைக்குழுவின் ஆணையாளர்கள் கடந்த நான்காண்டு காலத்துள் செயற்பட்டுள்ள விதம் குறித்து முழுமையான விசாரணையொன்றை மேற்கொள்வதற்கு அமைச்சரவை கடந்த 29 ஆம் திகதி தீர்மான மொன்றை எடுத்துள்ளது.

இந்தக் காலகட்டத்துள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் உள்ளிட்ட அரசியல்வாதிகளுக்கும் சில அரச அதிகாரிகளுக்கும் எதிராக இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக் குழுவுக்கு ஆயிரத்து 900 முறைப்பாடுகள் கிடைத்திருப்பதோடு, தற்போதைய அரசின் கீழ் ஆணைக் குழுவுக்கு பணிப்பாளர் நாயகமொருவர் நியமனம் செய்யப்படும் வரையிலும் அந்தக் கோப்புக்கள் அனைத்தும் அடிப் பெட்டியில் இடப்பட்டிருந்ததாகவும் சில அரசியல்வாதிகள் சம்பந்தமாக மேற் கொள்ளப்பட்டிருந்த விசாரணைகளின் பின்னர் அவர்களுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பரிந்துரைக்கப்பட்டிருந்த கோப்புக்கள் கூட, மறைத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சரவைக் கூட்டத்தின் போது விலாவாரியான விடயங்கள் வெளிப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட அரசியல்வாதியொருவர் 4,00 லட்சம் ரூபா சம்பாதித்தமை தொடர்பில் கிடைக்கப் பெற்றிருந்த முறைப்பாடொன்றின் மீது மேற்கொள்ளப்பட்டிருந்த விசாரணையில் அதை உறுதிப்படுத்தி விடக்கூடிய தகவல்கள் ஆணைக் குழுவால் தேடிக் கண்டறியப்பட்டிருந்த நிலையில், அது சம்பந்தமாக எந்தவிதமான நடவடிக்கையும் மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை எனவும் ஒருசில ஆணையாளர்கள் பாரபட்சமின்றிச் செயற்படவில்லை என்று ஏராளமான முறைப்பாடுகள் கிடைத்திருந்ததாகவும் அமைச்சரவைக் கூட்டத்தில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவின் ஆணையாளர்கள் இருவருக்கு எதிராக இரு இலஞ்சக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதோடு அந்த இருவருள் ஒருவர் சம்பந்தமாக மேற் கொள்ளப்பட்டிருந்த விசாரணைகளின் பின்னர், அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடுப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும், அதை நடைமுறைப்படுத்தாது அந்தக் கோப்பு மறைத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-22)

# சுரங்கப் பணியகத்தில் ரூ.15 லட்சம் மோசடி செய்த சுசில் பிரேமஜயந்த



கொழும்பு, ஓக.3

புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்துக்கு வழங்கப்பட்ட நிதியில் இருந்து சுமார் 15லட்சம் ரூவை சுசில் பிரேமஜயந்த பெற்றுக் கொண்டுள்ளமை உறுதியாகியுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலம் நெருங்கியபோதே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர் சுசில் பிரேமஜயந்த இந்த நிதியைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

புவியியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் வேலைத் திட்டத்தில் நாடு முழுவதிலும் விழிப்புணர்வூட்டும் பலகைகள் நிறுவுவதற்காக ஒதுக் கப்பட்ட சுமார் 15 மில்லியன் நிதியில் இருந்தே அவர் இதனைப் பெற்றுக்கொண்டுள்ளதாகத் தெரியவந் துள்ளது.

இந்தக் காலப் பகுதியில் நிறுவனத்தின் தலைவராக இருந்த கொழும்பு கிழக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் சேனாரத்ன ஜயசுந்தர இந்த மோசடி நடவடிக்கைக்கு அனுமதி வழங்கியுள்ளதாகக் குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது. குறித்த வேலைத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு முன்னரே சுசில் பிரேமஜயந்த இந்த நிதியை பெற்றுக்கொண்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

முன்னாள்தலைவர்சேனாரத்ன ஜயசுந்தரவின் செயலாளராக செயற்பட்ட லக்மால் என்பவர் இப் பணத்தை தங்கள் நிறுவனத்தின் மூலம் சுசில் பிரேமஜயந்தவுக்கு வழங்கியதாக உறுதி செய்துள்ளார். (த)

# அனுமதியின்றி பனை தறித்த இருவர் கைது

யாழ்ப்பாணம், ஓக.3

அனுமதியின்றி பனை மரங்களைத் தறித்து ஏற்றிச் சென்றதாகக் கூறப்படும் இரண்டு சந்தேக நபர்களை வல்வெட்டித் துறைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். இவர்களிடமிருந்து பனை மரக் குற்றிகளும் அவற்றை ஏற்றுவதற்குப் பயன்படுத்தப்பட்ட உழவு இயந்திரமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை சமரபாகு, கொற்றாவத்தைப் பகுதியில் வீதிக் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த பொலிஸாரே இவர்களைக் கைது செய்ததோடு பனை மரக்குற்றிகளை மீட்டதாகவும் குறித்த நபர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாகவும் வல்வெட்டித் துறைப் பொலிஸார் தெரிவித்தனர். (ற-109)

## மரண அறிவித்தல்

### திருமதி பூமணி கனகரத்தினம்



சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், குமரபுரம் பரந்தனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூமணி கனகரத்தினம் 02.08.2015 ஞாயிற்றுக்கிழமை இறைபத மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினத்தின் அன்பு மனைவியும் ரஞ்சனா, சுமன் ஆகியோரின் அன்புத் தாயாரும் நாகராசா(ராசன்) வின்அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (03.08.2015) திங்கட்கிழமை காலை நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் பரந்தன் பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

குமரபுரம்,பரந்தன். குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மதலேனம் செல்லத்துரை



பிறப்பு: 24.02.1924
இறப்பு: 01.08.2015

மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மதலேனம் செல்லத்துரை 01.08.2015 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (03.08.2015) திங்கட்கிழமை பிற்பகல் 02 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தோமையார் ஆலயத்தில் இரங்கல் திருப் பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் தோமையார் சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


தகவல்.

மாதகல். அருட்சகோதரி ஜெயசீலி, துரை, புஸ்பம்.

### ஆறுமுகம் புண்ணியமூர்த்தி

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்-
துறைமுக அதிகார சபை திருகோணமலை)

தோற்றம் 23 . 07 . 1933



மறைவு 02 . 08 . 2015

கல்லுவம், கரணவாய், மேற்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் உடுவில் தெற்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் புண்ணியமூர்த்தி 02.08.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்- சிவகாமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாகராஜா- சிதம்பரம் தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெயநாயகியின் அன்புக் கணவரும் ஜெயரூபன், இன்பரூபி,(ஆசிரியர் திருகோணமலை), இன்பமலர்(ஆசிரியர், திருகோணமலை), ஜெயமூர்த்தி, ஜெயரங்கன், இன்பவேணி, ஜெயபவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் மாலினி, யோகராசா, சோமதாசன், நிரஞ்ஜனா, சர்மிளா, மேனேந்திரா,சாமந்தி ஆகியோரின் மாமனாரும் பவித்திரன், ஜெனுஷன், பிரகதன், ஹரிணி, நிஷாயினி,சாரங்கன், தருண்,கிருஜன், சஹானா, பாவனா, ஆரபி, ஹரிஷரன், அஸ்விதா, நாகார்ஜுனா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(04.08.2015) செவ்வாய்க் கிழமை நண்பகல்12.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"ஜெயவாசம்"
உடுவில் தெற்கு ,
மானிப்பாய்

தகவல்: குடும்பத்தினர்
0777 141769
077 359 1769

## மரண அறிவித்தல்

### திருமதி குலமணி (மணி) தம்பிராசா

(அராலி மத்தி - வட்டுக்கோட்டை)



தோற்றம் 20.05.1952
மறைவு 02.08.2015

கோயிலாக்கண்டி, மறவம்புலவைப் பிறப்பிடமாகவும் அராலி மத்தி, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குலமணி (மணி) தம்பிரான நேற்று (02.08.2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - செல்வ லஷ்மி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - செல்லம் தம்பதியரின் அன்பு மருமகளும் தம்பிராசாவின் அன்பு மனைவியும் நகுலேஸ்வரி, நாகரத்தினம், செல்லத்துரை, ராசசிங்கம் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் நடராசா (கனடா), மோகனராஜா (ஜேர்மனி) ஆகியோரின் சிறியதாயும் சூரியபாலன், சந்திரபாலன் (சந்திரன் - சாரதி S.L.T.B), பார்த்தீபன்(தீபன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் விமலராணி, யோகராணி(தயா), யசோதா ஆகியோரின் மாமியும் பாமினி, பானுகரன், சஜீவன், அனிற்ரா, சந்தியா, நித்தியா, கிசாரா ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்ற செல்லமணி மற்றும் முத்தையா, நாகேஸ்வரி ஆகியோரின் அன்புமைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2015) திங்கட்கிழமை காலை 9.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூனாவடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.
077 174 3966
021 790 1787

தகவல்:
குடும்பத்தினர்.


(63763)(3.9.7)

# நம்பிக்கையின் ஒளிக்கீற்று



**யாழ் மண்ணின் அதிமதிப்புக்குரிய மகா ஜனங்களே,**

கல்வி ஞானத்தில் கரைகண்டு புகழ்கொண்ட யாழ் தீபகற்ப மண்ணின் அரசியல் செழுமை ஆனந்த நடனமிட பாரெங்கும் புகழ் தவழ வாழையடி வாழையாக வீரமிகு அரசியல் வித்துவங்கள் பல புரிந்த சேர் பொன். இராமநாதன், மேன்மை மிகு மேதை ஜி.ஜி.பொன்னம்பலம், தரணிபேசும் தந்தை செல்வா, கோப்பாய்க் கோமான் வன்னியசிங்கம், அயல்நாட்டு நட்பை வளர்த்தெடுத்த அமிர்தலிங்கம் வழியில் தளிர்த்து வளர்ந்து செழித்த பெரும் அரசியல் விருட்சம்.



இன்று அந்தத் தடம்பதித்த அரசியல் செழுமை முதன்மை எல்லாம் கனவாய் மறைந்து மனமுடைந்து முதுகொடிந்து நிற்கின்றனவே. அந்த வெற்றிடத்தை நிரப்பி ஒளிமயமான எதிர்காலத்துக்கு யாழ் மக்களை அரவணைத்து அன்புடன் அழைத்துச் செல்ல அதிஷ்டவசமாக இறைவன் அருள் பொழிந்து அனுப்பியவரே சகலதுறை வல்லவர் சட்டமேதை சாணக்கியர் சுமந்திரன். உங்கள் குறைநிறைகளை எல்லாம் தன் தலைமேல் சுமந்து ஆறு குளம் மலை கடல் வனாந்தரம் அத்தனையும் தாண்டி வாதாடி வென்று தரும் வல்லமை வாய்ந்த சாணக்கியர்.



தேடி ஓடிவந்த பொன்னான வாய்ப்பை இறுகப் பற்றிக்கொள்ளுங்கள். நாடறிந்த திறமையோடு விடா முயற்சி அத்தனையும் நிறைந்த பார் புகழ் சுமந்திரனுக்கு ஒட்டு மொத்தமாய் வாக்களியுங்கள்.

யாழ் மண்ணைச் சூழ்ந்து நின்று நித்தம் நித்தம் வருத்தி நிற்கின்ற ஆறாத துன்பம் துயரம் அத்தனையும் மாயமாய் ஓடி மறைந்திடும். ஒட்டு மொத்தமாய் வாக்களியுங்கள் பார் புகழ் சுமந்திரனுக்கு.



நிறைவில்,
என் இனிய வாழ்த்துக்கள் ஆயிரமாயிரம்!

கதிர் பாலசுந்தரம்
யூனியன் கல்லூரி முன்னாள் அதிபர்
கனடா

ஆசிரியர்: சாணக்கியன் கோமான் வன்னியசிங்கம் 100வது நிறைவு ஆண்டு மலர்.
அமிர்தலிங்கம் சகாப்தம். அன்னாரின் அரசியல் வரலாறு பேசும் நூல்.
சத்தியங்களின் சாட்சியம், அமிர்தலிங்கம் அவர்களின் அரசியல் வித்துவங்கள், சாதனைகள் பேசும் நூல்

# பங்களாதேஷில் 14,856 பேர் இந்தியர்களாக மாற்றம்

புதுடில்லி,ஓக.3

இந்தியாவுக்குள் இருந்த பங்களாதேஷில் 51 கிராமங்களில் 14 ஆயிரத்து 856 பேர் வசித்து வருகிறார்கள். இவர்கள் அனைவரும் நேற்று முன்தினம் இரவு 12 மணி முதல் இந்தியர்களாக அதிகாரபூர்வமாக மாறியுள்ளனர். நேற்றுக் காலை அவர்கள் இந்தியர்கள் என்ற அந்தஸ்தைப் பெற்றுள்ளனர். இதனால் அவர்கள் 68 வருடங்களுக்குப் பின்னர் சுதந்திரம் பெற்றிருப்பதாகக் குதூகலம் அடைந்துள்ளனர். இரவு 12 மணிக்கு அவர்கள் இந்திய தேசியக் கொடியை ஏற்றியும், மெழுகுவர்த்தி ஏந்தியும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்தியர்களாக மாறியுள்ள சுமார் 15 ஆயிரம் பேரும், தங்களது 68 வருட காலக் கனவும், ஏக்கமும் தீர்ந்து விட்டதாகத் தெரிவித்துள்ளனர். இளைஞர்கள் தங்களுக்கு உண்மையான சுதந்திரம் கிடைத்து விட்டதாக வீதிகளில் விடிய, விடிய நடனமாடினர்.

இதேவேளை பங்களாதேஷிடம் இந்தியா ஒப்படைத்துள்ள 111 கிராமங்களில் 37 ஆயிரத்து 369 பேர் வசித்து வருகிறார்கள். இவர்கள் அனைவரும் பங்களாதேஷ் நாட்டவர்களாக மாறியுள்ளனர். இந்த மாற்றத்தை 162 கிராம மக்களும் மனப்பூர்வமாக ஏற்றுள்ளனர். பங்களாதேஷத்தில் உள்ள 111 இந்திய கிராமங்கள் நேற்று முன்தினம் இரவு முதல் பங்களாதேசத்துக்கு உட்பட்ட பகுதிகளாக மாறியுள்ளன. இந்த மாற்றம் காரணமாக பங்களா தேஷம் சுமார் 7 ஆயிரத்து 110 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலப் பகுதியை இந்தியாவுக்குக் கொடுத்துள்ளது. அதற்கு பதில் இந்தியா 17 ஆயிரத்து 160 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலப் பகுதியை பங்களாதேஷத்துக்கு விட்டுக் கொடுத்துள்ளது.

இந்தியாவின் பக்கத்து நாடுகளில் ஒன்றான பங்களாதேஷ் 1971 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றது. அப்போது இந்திய எல்லைக்குள் 51 வங்கதேசக் கிராமங்கள் இருந்தன. அதுபோன்று வங்கதேசத்துக்குள் இந்தியாவுக்குச் சொந்தமான 111 கிராமங்கள் இருந்தன. இந்தியாவில் இருந்த பங்களாதேஷ கிராமங்கள் நாலாபுறமும் இந்திய எல்லைகளால் சூழப்பட்டிருந்தது. அது போன்று பங்களாதேஷத்தில் இருந்த 111 இந்திய கிராமங்களும் பங்களாதேஷ எல்லை களால் சூழப்பட்டிருந்தது. இதனால் இந்த 162 கிராமங்களும் சுற்றிலும் வேறு நாடுகளால் சூழப்பட்ட தனித்தனி தீவுகள் போன்று இருந்தன. இந்த 162 கிராமங்களிலும் சுமார் 52 ஆயிரம் பேர் வசித்து வருகிறார்கள். அவர்கள் அனைவருக்கும் இந்திய குடியுரிமையோ அல்லது பங்களாதேஷத்தின் குடியுரிமையோ கிடைக்கவில்லை.




மேலும் இவர்களுக்கு எந்த நாட்டின் சலுகைகள், வசதிகள் உள்ளிட்ட எந்தப் பயனையும் பெற முடியாமல் இருந்தனர்.

கடந்த 1971 ஆம் ஆண்டு முதல் 44 வருடங்களாக 162 கிராமத்தினரும் எந்தப் பக்கமும் சேர முடியாமல் தவித்த படி இருந்தனர். இவர்களை அந்தந்த நாட்டுடன் சேர்க்க முயன்ற முதல் முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. கடந்த 2011 ஆம் ஆண்டு பிரதமராக இருந்த மன்மோகன்சிங் பங்களா தேஷத்துடன் இது குறித்துப் பேச்சு நடத்தினார்.

அப்போது இரு நாட்டு எல்லைகளுக்குள்ளும் இருக்கும் கிராமங்களை சுமுகமாக மாற்றிக் கொள்ள இரு தரப்பினரும் சம்மதித்தனர். இந்த நிலையில் கடந்த ஜூன் மாதம் பங்களாதேஷத்துக்கு சென்ற பிரதமர் நரேந்திர மோடி இது தொடர்பான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.

இதையடுத்து அந்தந்த நாட்டு எல்லைக்குள் இருக்கும் கிராமங்களை அந்தந்த நாட்டிடமே ஒப்படைக்கும் பணியை இந்தியாவும், பங்களா தேஷமும் தொடங்கின. இரு நாட்டு அதிகாரிகளும் ஆய்வு நடத்தி அதற்கான பணிகளைப் பூர்த்தி செய்தனர். இதன் தொடர்ச்சியாக இந்தியாவில் உள்ள பங்களாதேஷத்தின் கிராமங்கள் இந்தியக் கிராமங்களாக மாறியுள்ளன.

இதற்கிடையே பங்களாதேஷத்துக்குள் இருந்த 111 கிராமங்களில் வசிக்கும் 36 ஆயிரம் பேரில் 979 பேர் தாங்கள் பங்களாதேஷத்தவர்களாக மாற விருப்பம் இல்லை எனக் கூறி விட்டனர். இந்தியாவுக்குள் வந்து இந்தியர்களாக வாழ விரும்புவதாகவே தெரிவித்துள்ளனர். அதன் பேரில் அவர்கள் 979 பேருக்கும் இடமாற்றத்துக்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. முதலில் அவர்கள் இந்தியப் பகுதியில் தங்கியிருக்க முகாம்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பின்னர் அவர்கள் வேறு இடங்களில் குடியமர்த்தப்படுவார்கள். இந்தியாவும், பங்களாதேஷமும் நேற்று முதல் 162 கிராமங்களை மாற்றிக் கொள்வதால் இந்தியர்களாக மாறி யுள்ள 15 ஆயிரம் பேர் இனி மத்திய, மாநில அரசுகள் வழங்கும் கல்வி, மருத்துவம், வேலை வாய்ப்பு உள்ளிட்ட சகல சலுகைகளையும் பெறுவார்கள். அது போன்று பங்களாதேஷத்தவர்களாக மாறியுள்ள 37 ஆயிரம் பேருக்கு அந்த நாட்டின் சலுகைகள் கிடைக்கும். இதன் மூலம் கடந்த 68 வருடங்களாக இருந்து வந்த உலகில் மிகவும் சிக்கலான எல்லைப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. அடுத்த வருடம் ஜூன் மாதத்துக்குள் இந்த மாற்றங்களை முழுமையாகச் செய்து முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு வசதியாக இந்தியப் பகுதியாக மாறியுள்ள 51 கிராமங்களின் மேம்பாட்டுக்கும், அங்கு வசிக்கும் 15 ஆயிரம் புதிய இந்தியர்களை மேம்படுத்த பிரதமர் நரேந்திர மோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். (ஐ)

## கமரூனில் ஒரே நாளில் 2000 பேர் வெளியேற்றம்

போஹோஹராம் தீவிரவாதிகளின் அச்சுறுத்தல்



யவுன்டே,ஓக.3

நைஜீரியாவில் அட்டூழியம் செய்து வரும் போஹோஹராம் தீவிரவாதிகள் அண்டை நாடான கமரூனில் பெரிய அளவிலான தற்கொலைப் படைத் தாக்குதலுக்குத் திட்டமிட்டுள்ளதாக வந்த தகவலையடுத்து, உரிய ஆவணங்கள் இல்லாமல் கமரூனில் தங்கியிருந்த சுமார் 2 ஆயிரம் நைஜீரி யர்களை அந்த நாட்டின் அரசு ஒரே நாளில் வெளியேற்றியுள்ளது.

கடந்த மாதம் கமரூனில் நடைபெற்ற மூன்று தீவிரவாத தாக்குதல்களில் 44 பேர் உயிரிழந்தனர். இதையடுத்து, மேலும் சில பெரிய தாக்குதல்களை நடத்த போஹோஹராம் தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளதாக கமரூன் நாட்டு உளவுத் துறை வட்டாரங்கள் எச்சரித்தன.

இதையடுத்து, கவுசேரி என்ற நகரில் நைஜீரியர்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளில் அந்த நாட்டின் குடியுரிமை அதிகாரிகள் கடந்த வியாழக்கிழமை அதிரடிச் சோதனை நடத்தினர். உரிய ஆவணங்கள் இல்லாமல் அங்கு தங்கி இருந்த சுமார் 2 ஆயிரம் நைஜீரியர்கள் லொறிகளில் ஏற்றப்பட்டு, கமரூன் நாட்டு எல்லைப் பகுதிக்கு வெளியே இறக்கி விடப்பட்டதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நைஜீரியாவில் கடந்த 5 வருடங்களாக போஹோஹராம் தீவிரவாதிகள் நடத்திவரும் தாக்குதலுக்கு இதுவரை 15 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். தற்போது, நைஜீரியாவின் அண்டை நாடுகளான சாட், கமரூன் உள்ளிட்ட நாடுகளிலும் அவர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டி வருகின் றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும், தற்போது கமரூனில் இருந்து வெளியேற்றப்பட்ட அனைவரும் நைஜீரியாவில் அட்டூழியம் செய்துவரும் போஹோஹராம் தீவிர வாதிகளுக்கு பயந்து அண்டை நாடான கமரூனில் அடைக்கலம் தேடிவந்த அப்பாவி மக்களாவார்கள். அவர்களையே அந்த நாட்டு அரசு வெளியேற்றியுள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. (ஐ)

## வறுமையில் சிக்கியுள்ள பறவை முனியம்மா

புதுடில்லி,ஓக.3



வறுமையால் வாடும் நாட்டுப்புறக் கலைஞரும், திரைப்பட நடிகையுமான பறவை முனியம்மா வுக்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா 6 லட்சம் ரூபா (இந்திய) நிதியுதவி வழங்க உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக அ.தி.மு.க. தலைமைக்கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

பிரபல நாட்டுப்புற பாடகியும், திரைப்பட நடிகையுமான பறவை முனியம்மா தனது குடும்பத்தின் ஏழ்மை நிலையையும், தனது முதுமை காரணமாக தனக்கு ஏற்பட்டுள்ள வறுமைச் சூழலையும் விவரித்து பேட்டியளித்திருந்தார். அதில் தனக்கும், தனது குடும்பத்துக்கும் மறு வாழ்வு தருகின்ற வள்ளலாக தமிழக முதல்வர் ஜெயலலிதா மட்டும் தான் இருக்க முடியும் என்று நம்பிக்கை தெரிவித்திருந்தார்.

அவரின் ஏழ்மை நிலையையும், இயலாமையையும் உடனடியாக அறிந்த அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், முதல்வருமான ஜெயலலிதா, அவருக்கு நிதியுதவியும், குடும்ப செலவுகளுக்கென்று மாதந்தத் தொகையையும் வழங்க உத்தரவிட்டுள்ளார்.

மேலும், பறவை முனியம்மாவின் மருத்துவச் சிகிச்சைக்குத் தேவையான நிதியுதவியை புரட்சித் தலைவர் டாக்டர்.எம்.ஜி.ஆர். அறக் கட்டளை ஏற்கும் என்று அறிவித்துள்ளார் என்று அந்த செய்திக் குறிப் பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



## வானில் 164 பேர் ஸ்கை டைவிங்கில் சாதனை

ரொறன்ரோ,ஓக.3

கனடாவின் ஒட்டோவாவில் 164 பேர் வானில் செங்குத்தாக ஸ்கை டைவிங் செய்து சாதனை படைத்துள்ளனர்.

ஒட்டாவா புறநகர் பகுதியில் வான் வெளியில் இந்தச் சாதனை நிகழ்த்தப்பட்டது. பரசூட் உதவியுடன் 164 பேரும் ஒருவரது கையை ஒரு வர் கோர்த்து ஒரு ராட்சத மலர் வடிவில் சில நிமிடங்கள் நின்றனர். 240 கிலோ மீற்றர் வேகத்தில் 164 பேர் வானில் செங்குத்தாக ஸ்கை டைவிங் செய்து சாதனை புரிந்து உள்ளனர்.13 முறைக்கு மேல் முயற்சி செய்து இதற்கு முன் உள்ள சாதனையை முறியடித்துள்ளனர். 2012 ஆம்ஆண்டு138 பேரால் ஸ்கை டைவிங் சாதனை நிகழ்த்தப்பட்டது. (ஐ)

## பிரான்ஸ் மாலுமிகள் தொடர் போராட்டம்

பரிஸ்,ஓக.3

பிரான்ஸில் தனியார் நிறுவனம் ஒன்றின் தொழிலாளர் கள் தங்களது படகுகளை மற்றொரு நிறுவனத் துக்கு விற்பனைசெய்வதற்கு கடும்எதிர்ப்பு தெரிவித்து வந்தனர். இந்த நிலையில் நகரத்தின் முக்கிய துறைமுக வீதியில் 300 க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் உள்ளிட்ட மாலுமிகள் ஒன்றிணைந்து வாகன ரயர்களைத் தீயிட்டுக் கொளுத்தி தங்களது எதிர்ப்பைத் தெரிவித்தனர். இவர்களின் இந்தப் போராட்டம் கடந்த 3 தினங்களாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

மாலுமிகளின் இந்தப் போராட்டங்களால் பிரான்ஸில் இருந்து பிரிட்டன் செல்லும் பயணிகள் ரயில் சேவை நிறுத்தப்பட்டது.



தற்போது அந்தப் பகுதி முடக்கப்பட்டு மாலுமிகளால் போராட்டக் களமாக மாறியிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)



# சாட் நாட்டில் ஊடுருவல்

## 117 தீவிரவாதிகள் சுட்டுக்கொலை

லேக்சாட், ஓக.3
சாட் நாட்டில் லேக்சாட் தீவுகளில் ஊடுருவ போகோ ஹராம் தீவிர வாதிகள் தீவிர முயற்சி மேற் கொண்ட போது அவர்களைத் தடுக்கும் நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டனர். இதனால் கடந்த 2 வாரங்களாக இரு தரப்பினருக்கும் இடையே கடும் துப்பாக்கிப்பிரயோகம் இடம்பெற்றது. அதில் 117 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளதுடன், பலர் காயம் அடைந்துள்ளனர். இராணுவத் தரப்பில் 2 பேர் உயிரிழந்துள்ளதுடன், 2 பேர் காயம் அடைந்துள்ளனர். இந்தத் தகவலை சாட் இராணுவச் செய்தித் தொடர்பாளர் ஆசம் ஆகோனா தெரிவித்துள்ளார்.

இதேவேளை – நைஜீரியாவில் போகோ ஹராம் தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். அவர்கள் நைஜீரியா மட்டுமன்றி அதன் அண்டை நாடுகளான கமரூன், நைஜர், சாட் நாடுகளிலும் தாக்குதல் நடத்திய போது மக்களை கொன்று குவிக்கின்றனர். எனவே, இந்த 4 நாடுகளும் சேர்ந்து அவர்களை ஒடுக்கி அழிக்கும் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. (ஐ)

## ஜேர்மனியில் பிரதமர் பதவிக்கு ஏஞ்சலா நான்காவது முறையாகப் போட்டி



பேர்லின்,ஓக.3
ஜேர்மனியில் பிரதமர் பதவிக்கு, ஏஞ்சலா மெர்கெல் நான்காவது முறையாகப் போட்டியிடவுள்ளார். ஜேர்மனிப் பிரதமராக ஏஞ்சலா மெர்கெல் (வயது–61) கடந்த 2005 ஆம் ஆண்டு முதல் பதவியில் உள்ளார். இந்த நிலையில் எதிர்வரும் 2017 ஆம் ஆண்டில் ஜேர்மனியில் நாடாளுமன்றத் தேர்தல் நடை பெறுகிறது. அதில் பிரதமர் பதவிக்கு மெர்கெல் நான்காவது தடவையாக கிறிஸ்தவ ஜனநாயக கட்சி சார்பில் மீண்டும் போட்டியிட முடிவு செய்துள்ளார். ஜேர்மனியில் பிரதமர் பதவி வகிக்க கட்டுப்பாடுகள் இல்லை. எத்தனை தடவை வேண்டுமானாலும் போட்டியிடலாம். மெர் கெலுக்கு முன்னதாக கடந்த 16 வருடங் களுக்கு முன்பு ஹெல்மட் சோகி பிரதமர் பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மியன்மாரில் வெள்ளப்பாதிப்பு



யங்கூன், ஓக.3
மியன்மாரில்கடந்தஜூலைமாதம்புயல் தாக்கியது. இதன் காரணமாக பெரும் பாலான பகுதிகள் சேதம் அடைந்தன. அதனைத் தொடர்ந்து தற்போது பருவமழைதீவிரம் அடைந்துள்ளது. இதனால் ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. அணைகள் உடைந்ததால் ஊருக்குள் வெள்ளம் புகுந்துள்ளது. இரண்டு மாகாணங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது. இதனால் 56 லட்சத்து 25 ஆயிரம் ஏக் கர் விளை நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளது. மழையால் இதுவரை 27 பேர் உயிரிழந்துள்ளனர். 67 ஆயி ரம் முதல் ஒரு லட்சத்து 10 ஆயிரம் பேர் வரை வீடுகளை இழந்து தவிக்கின் றனர்.

தற்போது வெள்ள நிவாரணப் பணிகளில் இராணுவ வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். வெள்ளச் சேதப் பகுதிகளை மியன்மார் ஜனாதிபதி தெயின் செயின் விரைந்து சென்று பார்வையிட்டார்.

மேலும், வெள்ளச் சேதத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட சகேஜிங், கச்சின், போகோ மற்றும் ரகின் ஆகிய 4 மாகாணங்களில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. (ஐ)

# ஈராக் போரால் ஒரு மாதத்தில் 1,332 பேர் சாவு

## ஐ.நா. தகவல்



பாக்தாத், ஓக.3
ஈராக்கில்ஐ.எஸ்.தீவிரவாதிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே கடந்த ஜூலை மாதம் நடைபெற்ற போரால் ஆயிரத்து 332 பேர் கொல்லப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

இது குறித்து ஐ.நா.சபை வெளியிட்டுள்ள அறிக்கையில்; ஐ.எஸ். அமைப்புக்கும் இராணுவத்தினருக்கும் இடையே நடைபெற்ற சண்டையில் பொதுமக்கள் 844 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அத்துடன் இராணுவ வீரர்கள் 488 பேர் உயிரிழந்துள்ளனர். 2 ஆயிரத்து 108 பேர் காயமடைந்துள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது.

இந்தச்சண்டையில் பாக்தாத் நகர் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள ஐ.நா. சபை, அந்த நகரில் மட்டும் 335 பேர் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ளது.

கடந்த ஜூன் மாதத்தில் இரு தரப்புக்கும் இடையே நடைபெற்ற தாக்குதலில் ஆயிரத்து 466 பேர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சவூதியில் பாகிஸ்தானியருக்கு தலை துண்டித்துத் தண்டனை



ரியாத்.ஓக.3
றம்ழான் நோன்பை முன்னிட்டு சாவுத்தண்டனை நிறைவேற்று வதை தற்காலிகமாக ஒத்திவைத்திருந்த சவூதி அரேபியாவில் போதைப் பொருள் கடத்திய பாகிஸ்தானியரின் தலையை துண்டித்து கடந்த வெள்ளிக்கிழமை சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டது.

பாகிஸ்தானைச் சேர்ந்த ஷா பைசல் அலி என்பவர், கடந்த வருடம் கொடிய போதைப்பொருளைத் தனது உடலில் மறைத்துக் கடத்தி வந்ததாக சவூதி நாட்டுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அந்த நாட்டின் சட்டத்தின்படி அவருக்கு சாவுத் தண்டனை விதிக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை தலைநகர் ரியாத்தில் ஷா பைசல் அலியின் தலையைத் துண்டித்து, சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டதாக அந்த நாட்டின் உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவருடன் சேர்த்து இந்த வருடம் முதல் ஆறு மாதங்களுக்குள் மட்டும் சவூதியில் மொத்தம் 109 பேருக்குச் சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. கடந்த வருடம் முழுவதும் 87 பேருக்கு சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்ட நிலையில், இந்த வருடத்தின் முதல் ஏழு மாதங்களுக்குள் மட்டும் 109 பேருக்கு சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளமை, சர்வதேச மனித உரிமை ஆர்வலர்களைக் கொதிப்படையச் செய்துள்ளது.

சவூதி வரலாற்றிலேயே அதிகபட்சமாக கடந்த 1995 ஆம் ஆண்டு 192 பேரின் தலைகளைத் துண்டித்து சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டது. (ஐ)

## சூரிய குடும்பத்துக்கு வெளியே புதிய கிரகம் கண்டுபிடிப்பு

வொஷிங்டன்.ஓக.3
அமெரிக்காவின் நாஸா மையம் ஸ்பிட்சர் என்ற டெலஸ்கோப் மூலம் விண்வெளியில் ஆய்வு மேற்கொண்டு வருகிறது. அதன் மூலம் தற்போது சூரிய மண்டலத்துக்கு அருகே புதியதொரு கிரகம் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

அது பூமியை விட 1.6 மடங்கு பெரியது. 21 ஒளி ஆண்டு தூரத்தில் உள்ளது. இது பாறைகள் மற்றும் கியர்ஸ்களினால் ஆனது. நெப்டியூன், சனி மற்றும் ஜீபிடர் கிரகங்களை விட நிறை குறைந்தது. இந்தக்கிரகத்துக்கு எச்.டி. 219134 பி என பெயரிடப்பட்டுள்ளது. இது தனது நட்சத்திரத்தை மிக நெருக்கமாக சுற்றி வருகிறது என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)



## கனடாவில் பொலிஸாரைக் கண்டித்து பெண்கள் அரை நிர்வாணப் போராட்டம்

கனடாவில் பெண்கள் மூவர் மேலாடை அணியாமல் வீதியால் சென்றுள்ளனர். இதனைப் பார்த்த பொலிஸார் அந்தப் பெண்களைத் தடுத்து நிறுத்திக் கேள்வி கேட்டதைக் கண்டித்து, அண்டாரியோ நகரைச் சேர்ந்த சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கனடாவில் கிட்செனர் அருகே யுள்ள அண்டாரியோ நகரில் 3 பெண்கள் மேலாடை அணியாமல் மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளனர். அதனைக்கண்ட பொலிஸார் அவர்களைப் பின் தொடர்ந்து சென்று தடுத்து நிறுத்தியுள்ளனர். பாதுகாப்புக் காரணங்களைக் கருதி மேலாடை இன்றிச் செல்லக் கூடாது என பொலிஸார் அறிவுரை கூறியுள்ளனர். ஆனால் அதற்குப் பதில் அளித்த அவர்கள் கோடைகாலத் தில் கடும் புழுக்கமாக இருப்பதால் மேலாடையைகழற்றி விட்டுவாகனம் செலுத்தியதாகத் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாரின் இந்த நடவடிக்கைக்கு கனடாவில் பெண்கள் சிலர் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். அண்டாரியோ நகர் பகுதியில் பெண்கள் மேலாடையின்றி சுற்றித் திரியலாம் என கடந்த 1996 ஆம் ஆண்டில் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. எனவே, அந்தப் பெண்களை பொலிஸார் தடுத்து நிறுத்தியமை தவறு. மேலாடை இன்றி பெண்கள் சுற்றி திரிவது அவர்களது உரிமை. அதைத் தடுக்க யாருக்கும் உரிமை இல்லை என கூறிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்தில் 100 இற்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டனர். அவர்கள் அனைவரும் மேலாடை அணியாமல் அரை நிர்வாணமாக பங்கேற்றனர். முன்... இவர்கள் அண்டாரியோவில் ... வாட் டர்லூ என்ற இடத்தில் ... பேரணியாக புறப்பட்டனர். ... பேரணியில் நிர்வாணம் செக்ஸ் ... பெண்களிடம் வெடி குண்டு ... என்பன போன்ற கோஷ... எழுப்பப்பட்டன. பெண்களின் வினோத போராட்டத்தால் ... பெரும் பரபரப்பு ஏற்பட்டது. (ஐ)

# கல்விப்புல சாதனையாளருக்கு வலி.மேற்கில் பொன்விழா

■ செ.ரமேஷ்

வலி.மேற்கில் தொடர்ச்சியாக ஐந்து தசாப்த காலங்கள் முழுமையாக முன்பள்ளி ஆசிரியப் பணியை மேற்கொண்ட செல்வி லீலாவதிக்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை வலி.மேற்கு சமூகம் திரண்டு விழா எடுத்துள்ளது.

முன்பள்ளி பிள்ளை கல்வி அபிவிருத்தியில் தனித்துவமாக ஐம்பது ஆண்டுகள் கல்விப்புல சேவையாற்றிய செல்வி லீலாவதி மாரிமுத்துவின் சாதனைளை வலி.மேற்கு சமூகம் திரண்டு பொன்விழாவைக் கொண்டாடிப் பாராட்டியுள்ளது.

வடமாகாணத்தில் சித்தன்கேணி மாதர் கிராம அபிவிருத்திச் சங்க பாலர் பாடசாலையின் முதன்மையாசிரியரான செல்வி லீலாவதி மாரிமுத்து கடந்த 1965ஆம் ஆண்டு முதல் இன்றுவரை 50 ஆண்டுகளை மிக வினைத்திறனாகவும் நேர்த்தியாகவும் தமது பணியை மேற்கொண்டவர் என்றால் மிகையாகாது.

இவ்வாறாக கடந்த ஐந்து தசாப்த காலத்தில் முன்பள்ளிக் கல்விப்புல சாதனை படைத்த செல்வி லீலாவதி மாரிமுத்துவின் கை வழியாக கற்றுத்தேறிய மாணவர்கள் 5ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இன்று பல்வேறு உயர்பதவியில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் முழுச்சேவை செய்து வருகின்றனர்.



இதில் குறிப்பாக சட்டத்தரணிகள், நீதிபதிகள், இலங்கை நிர்வாக மற்றும் திட்டமிடல் சேவை அதிகாரிகள், ஆசிரியர்கள், உள்ளூராட்சி அலுவலர்கள், அரசியல் பிரமுகர்கள், பொறியியலாளர்கள், மருத்துவர்கள் என எண்ணற்ற பதவியியலார்கள், வர்த்தக மற்றும் கைத்தொழில் பிரமுகர்களை உருவாக்கி தனித்துவமாக சேவை படைத்துள்ளார் செல்வி லீலாவதி மாரிமுத்து ஆசிரியர்.

செல்வி லீலாவதி மாரிமுத்து ஆசிரியர் 50 ஆண்டுகளை சிறுவர்களின் அபிவிருத்தி வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணித்து செய்தமைக்காக ஆசிரியமணி, சுடர் ஆசிரியர் போன்ற விருதுகளையும், பட்டங்களையும் பெற்றவராவார்.

வலி.மேற்கில் உள்ள மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஊடாக தொடர்ச்சியாக கல்விப் பணி, சேவைப்பணி, ஆசிரியப்பணி என்ற முப்பணிகளை ஆற்றியமைக்காக வலி.மேற்கு உள்ளூராட்சி சபை, உள்ளூராட்சி வாரத்தில் சிறந்த முன் பள்ளி ஆசிரியை என்ற விருதை பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் வழங்கி கௌரவித்துள்ளார்.

மேலும், வலி.மேற்கில் இயங்கும் செல்வி லீலாவதி மாரிமுத்துவின் அயராத முயற்சியினால் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க முன்பள்ளியானது முழுமையான கட்டட வசதி, விளையாட்டு உப கரணங்கள், தொலைபேசி, கணினி வசதி, கற்பித்தல் உபகரணங்கள், சிறுநூலகம் உள்ளிட்ட வசதிகளைத் தன்னகத்தே கொண்டு இயங்குகின்ற ஓர் நிறுவனமாக உள்ளூராட்சி தவிசாளர், செயலாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மாகாண கல்வி திணைக்களம், வலய கல்வி திணைக்களம் மற்றும் வலி.மேற்கு பிரதேச செயலகம், முன்பள்ளி உதவி பணிப்பாளர் ஆகியோரது நன்மதிப்புக்களை பெற்ற ஒரு வினைத்திறன், செயற்றிறன் அர்ப்பணிப்புத்திறன் உள்ள ஆசிரியராக எல்லோர் உள்ளங்களிலும் இடம் பிடித்த ஓர் ஆசிரியராக செல்வி லீலாவதி மாரிமுத்து எல்லோராலும் பாராட்டப்படுகின்றார்.

பொன்விழா ஆசிரியை செல்வி லீலாவதியைப் பாராட்டுவதற்கான பொறுப்பை மாதர் பாடசாலை அபிவிருத்திச் சங்க முகாமைத்துவ குழுத் தலைவர்களான உமாபதி சர்மா வாசுகி தம்பதியினர் முழு உற்சாகமாக பொறுப்பேற்றிருந்தனர்.

இந்த நிகழ்வில் பாடசாலையின் பழைய மாணவனும், வீதி அபிவிருத்தி திணைக்கள வடமாகாண பிரதிப் பணிப்பாளருமான பூலோக கசிங்கம் சிவனேசன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

மேற்படி தினம் ஆசிரியை லீலாவதி மாரிமுத்து சார்ந்த பொன்விழா மலர் வெளியீடும், ஆவண நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வுக்கு சித்தன்கேணி சிவன் தேவஸ்தான பிரதம குருவும், மாநகர விருது சாதனையாளருமான சிவஸ்ரீ.சபா.வாசுதேவ குருக்கள், சிவஸ்ரீ.ச.மதுசூதனக் குருக்கள், பிரம்மஸ்ரீ.நா.கமலநாத சர்மா ஆகியோர் ஆசியுரையை வழங்கியிருந்தனர்.

வாழ்த்துரைகளை அரச அதிபர் நா.வேதநாயகன், தேசிய கல்வியியற் கல்லூரியின் உபபீடாதிபதி பா.தனபாலன், ஆரம்பப்பிள்ளைப் பருவ வடமாகாண பணிப்பாளர் செல்விஜெயாதம்பையா,வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நா.ஐங்கரன், ஆசிரியர் சங்கத் தலைவர் திருமதி அஜிதா சிவகரன், செல்வி யுகந்தினி லோகேஸ்வரன் ஆகியோர் வழங்கியுள்ளனர்.

நூல் வெளியீட்டுரையை பிரம்மஸ்ரீ. குமார சுவாமிநாத சர்மா (கவிஞர் வீரா) வழங்கினார்.

# தீவா காணி அதிர்ஷ்டம் திட்டத்தில் 2ஆவது வெற்றியாளர் கருணாதிலக




தொடர்ந்து ஐந்தாவது ஆண்டாக முன்னெடுக்கப்பட்டு வரும் தீவா காணி அதிர்ஷ்டம் திட்டத்தில் கொழும்பை அண்மித்து பெறுமதிமிக்க இரண்டாவது காணியை வென்ற அதிர்ஷ்டசாலியாக கருணாதிலக தெரிவு செய்யப்பட்டுள்ளார். கடந்த நான்கு ஆண்டு களாக வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைத்த அமோக வரவேற்பு காரணமாகவே ஐந்தாவது வருடமாகவும் இந்தத் திட்டத்தை தீவா முன்னெடுத்துள்ளது.

நான்கு கட்டங்களின் கீழ் இடம்பெற்ற இந்தத் திட்டத்தின் ஊடாக கொழும்பை அண்மித்து இதுவரை தலா ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான 16 காணித் துண்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தமுறை தீவா காணி அதிர்ஷ்டம் ஊக்குவிப்பு திட்டம் மூலமாக காணி வரத்தை வென்ற அதிர்ஷ்டசாலியாக தெரிவு செய்யப்பட்ட கருணாதிலக பிர்னாந்து சின்ன பாதுவ பிரதேசத்தை வதிவிடமாகக் கொண்டவராவார்.

பாடசாலை அதிபராகப் பணியாற்றி தற்போது ஓய்வு பெற்றுள்ள பிர்னாந்து நினைத்துப் பார்க்க முடியாத நேரத்தில் தமக்கு கிடைத்த இந்த வெற்றி குறித்து நம்மோடு இவ்வாறு பகிர்ந்து கொண்டார்.

தீவா காணி அதிர்ஷ்டம் குழுவினர் எமது வீட்டுக்கு வந்து அறிவித்த பின்னரே இந்த நற்செய்தியை நாம் தெரிந்து கொண்டோம். இத்தனையாண்டு காலம் நாம் அரசு வழங்கிய காணியிலேயே குடியிருந்தோம்.

நாம் வசிக்கும் பிரதேசம் கொழும்புக்கு மிக தொலைவில் இருப்பதால் எண்ணற்ற துன்பங்களுக்கு முகம் கொடுத்தோம். இதனால் கூடிய விரைவில் நகரத்தில் குடியேறுவதற்கான எதிர்பார்ப்பும் மனதில் இருந்தது.

அந்தக் கனவை நனவாக்கித் தந்த ஹேமாஸ் நிறுவனத்துக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

தாம் நீண்டகாலமாக தீவா உற்பத்திகள் மீது நம்பிக்கை வைத்திருந்ததாகவும், தீவா மூலம் அறிமுகம் செய்யப்பட்ட இரு புதிய நறுமணங்களையும் தமது வீட்டிலுள்ள அனைவரும் மிக விரும்பியதாகவும் பிர்னாந்து தெரிவித்தார்.

எதிர்காலத்திலும் அந்த விசுவாசத்தை வென்று மேலும் பல வெற்றியாளர்களை உருவாக்குவதற்காக சக்தி தீவா காணி அதிர்ஷ்டம் குழுவினருக்கு கிடைக்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன் என மேலும் தெரிவித்தார்.

தீவா காணி அதிர்ஷ்டம் செயற்றிட்டத்தின் முதலாவது காணியை கேகாலை துலீகா பிரியதர்ஷனி வென்றெடுத்ததுடன், கொழும்புக்கு அருகாமையில் காணியை சொந்தமாக்கிக் கொள்வதற்கான வாய்ப்பு மேலுமொரு அதிர்ஷ்டசாலிக்கு கிடைக்கவுள்ளது.

இந்த ஊக்குவிப்பு செயற்றிட்டம் ஜூலை மாதம் 31ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளதுடன், இதுவரை போட்டிக்கு விண்ணப்பிக்காத வாடிக்கையாளர்களுக்கு தற்போது சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதற்காக வாடிக்கையாளர்கள் செய்ய வேண்டியதெல்லாம் எந்தவொரு தீவா வெற்று மேலுறைகளையும் (புதிய மேம்படுத்தப்பட்ட தீவா, தீவா ஃபிளவர்ஸ் அல்லது தீவா சவர்க்காரம்) தீவா காணி அதிர்ஷ்டம் த.பெ.இல. 1289, கொழும்பு எனும் முகவரிக்கு தமது பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கத்தை குறிப்பிட்டு அனுப்ப வேண்டியது மட்டுமேயாகும். இதற்கு மேலதிகமாக மாதாந்தம் காணிகள், வாராந்தம் தங்க நாணயங்கள் மற்றும் நாளாந்தம் 10,000 ரூபா வீதம் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (த)

# தபால் திணைக்களத்தின் ஊடாக செலிங்கோ மூன்றாம் நபர் காப்புறுதி



செலிங்கோ பொதுக் காப்புறுதி நிறுவனம், நாட்டின் தபால் சேவை வலையமைப்பின் மூலமாக வாடிக்கையாளர்களுக்கு மூன்றாம் நபர்காப்புறுதி திட்டங்களை வழங்கும் முகமாக இலங்கை தபால் திணைக்களத்துடன் கைகோர்த்துள்ளது.

வாடிக்கையாளர்கள் இந்த சேவைகளை இலகுவாகப் பெற்றுக்கொள்வதற்கு, மூன்றாம் நபர் காப்புறுதித் திட்டங்கள் நாடெங்கிலுமுள்ள 4,610 இற்கும் மேற்பட்ட தபால் அலுவலகங்கள் மற்றும் உப தபால் அலுவலகங்கள் அத்தோடு 8,000 இற்கும் மேற்பட்ட தபாற்காரர்களின் மூலமாகக் கிடைக்கவுள்ளன.

மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகள், கையால் இயக்கும் டிராக்டர் வண்டிகள் மற்றும் மோட்டார் வாகனங்களுக்கான அனைத்து மூன்றாம் நபர் காப்புறு தித் திட்டங்களையும் இந்த சேவையின் மூலமாக செலிங்கோ பொதுக் காப்புறுதி நிறுவனம் வழங்கவுள்ளது.

செலிங்கோ பொதுக் காப்புறுதி நிறுவனம் வழங்கும் மூன்றாம் நபர் காப்புறுதித் திட்டம் தனித்துவமான ஒன்றாகக் காணப்படுவது ஏனெனில், மோட்டார் சைக்கிள் ஒன்று விபத்துக்கு உள்ளாகும் வேளையில் அது மீண்டும் பாவனைக்குதவாத நிலைமையில் காணப்படும் பட்சத்தில் அந்த மோட்டார் சைக்கிளின் முழுச் சந்தை விலைப் பெறுமதியை காப்புறுதித் திட்டத்தைக் கொண்டுள்ளவர் தனது காப்பீடாகப் பெற்றுக்கொள்ளும் ஒரேயொரு காப்புறுதித் திட்டமாக காணப்படுகிறது. அத்துடன் மேலதிகமாக, காப்புறுதித் திட்டத்தைக் கொண்டுள்ளவரும் தனிப்பட்ட விபத்துக் காப்பீடாக ரூபா 50,000 என்ற தொகையைப் பெற்றுக்கொள்கின்றார். (த)

# பூநகரிப் பிரதேச மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு - மாளாப்பூக்குளத்தை மறுசீரமைப்பதே

பூநகரி சாமிப்புலம், நல்லூர் ஆலங்கேணி , செல்வி புரம், தம்பிராய் கிராமங்களின் தெற்கு எல்லையில் கைவிடப்பட்ட குளங்கள் பல காணப்படுகின்றன. கடல்கோளினால் உவர்நீர் உட்புகுந்தமையே இதற்குக் காரணமாகும். இவற்றுள் மாளாப்பூக்குளம், கொக்குடையான்குளம் இரண்டும் பெரிய குளங்கள் ஆகும். இவை இரண்டையும் இணைத்து அணைக் கட்டுவதன் மூலம் உருவாக்கப்படும் நீர்த்தேக்கம் பூநகரிக்குளம் என அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

குளத்தின் உட்கட்டுமானம்

15 கிலோமீற்றர்நீளமானதும் 12 மீற்றர் நீர் பிடிக்கக்கூடியதுமான அணைக்கட்டைக் கட்டுதல்.

300 அடி நீளமான வானை அமைத்தல்.

பூநகரி – பரந்தன் வீதி 15 – 14 கிலோமீற்றரில் குடமுருட்டி ஆற்றை மறித்து உவர்நீர் புகாத கட்டுமானம் அமைத்தல்.

பூநகரி – மன்னார் வீதியில் மண்டைக்கல்லாறு செம்மண் குன்றில் உவர்நீர் புகாத தடுப்பணை அமைத்தல்.

நீர் சுத்திகரிப்பு நிலையம், நீர்த்தாங்கி, நீர்க்குழாய் வலைப்பின்னல் உருவாக்கல்.

வானம் பார்த்த பூமியான பூநகரிக்கு இந்தக்குளம் இயற்கை கொடுத்த பெருங்கொடையாகும்.

1964 இல் இராமேஸ்வரம் தலை மன்னாரைத் தாக்கிய கடும்புயல் பூநகரியையும் தாக்கியது. இதேவேளை கடல் பெருக்கெடுத்துப் பெருகி மேற்குறித்த குளங்கள் தாழ்நிலங்களை ஆக்கிரமித்து முற்றிலும் உவராக்கி விட்டன. கடல்நீர்த் தடுப்பணை இன்மையால் கடல்நீர் உட்புகுதல் சகஜமான நடவடிக்கையாக மாறியுள்ளது.

பூநகரிக் குள நிர்மாணம் என்பது பெரிய திட்டம் ஒன்றாதலால் இது மத்திய அரசால் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது. மக்களின் ஜீவனோபாயம், குடிதண்ணீர்ப் பிரச்சினை, இயற்கை வளம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நிலத்தடி நீர்க்காப்பு, உவர் நீர் உட்புகாமை, கால்நடைக் குடிதண்ணீர் போன்ற பல்நோக்கு விடயங்களோடு தொடர்புடைய இந்தக் குள நிர்மாண வேலைத்திட்டம் விரைவில் நிறைவேற்றப்பட வேண்டும் என்பது மக்களின் கோரிக்கையாகவுள்ளது.

பூநகரி பிரதேச செயலர், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், கிளி/ கமநல சேவைகள் திணைக்களம், நில அளவைத் திணைக்களம் போன்றோரின் முயற்சியால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பேசு பொருளாக இருந்த இந்தத் திட்டம் இப்பொழுது தொடக்கப் புள்ளியுடன் நின்று விட்டிருப்பது கவலை அளிக்கும் விடயமாக உள்ளது. கொள்கலனில் குடிதண்ணீரைப் பெறும் அவலத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுமா?

பூநகரி மக்கள் குடி பெயர்ந்து போவதற்கு பிரதான காரணம் குடிதண்ணீர்ப்பிரச்சினையே. இதனால் வவுனியா, கிளிநொச்சி போன்ற இடங்களில் குடிபெயர்ந்து வாழ்பவர்கள் குளம் கட்டியபின் மீள உள்ளீர்க்கப்படுவார்கள். கால்நூற்றாண்டுகாலமாக பொது அமைப்புக்கள், நலன்விரும்பிகள் பலராலும் வலியுறுத்தப்படும் இந்தத்திட்டம் முன்னெடுக்கப்படுமா? விடிவு கிட்டுமா? *கா.கார்திகேசு (பூநகரி)*

## வாசகர் திருமுகம்




# குருநகர் பகுதி “அற்ஹோம்” கொண்டாட்டம்

குருநகர் பகுயில் குருநகர் ஐக்கிய முன்னணி அமைப்பின் அனுமதியுடன் அற்ஹோம் கொண்டாட்டங்கள் (பணச் சடங்குகள்) உரிய குடியிருப்பாளர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கென உரிய குடியிருப்பாளர்கள் தமது வீட்டின் முன்னால் உள்ள வீதிகளில் பந்தல் அமைத்து கொண்டாட்டத்தை முன்னெடுக்கிறார்கள். இந்தக் கொண்டாட்டம் மூன்று நாள்கள் வரை நடைபெறும்.புந்தலுக்கு அருகில் பொதுமக்கள் போக்குவரத்துக்கென ஒரு சிறிய பாதை விடப்படும். இந்த மூன்று நாள்களிலும் இந்த ஒடுங்கிய பாதையூடாகவே பொதுமக்கள் சிரமங்களுடன் பயணிக்க வேண்டிய நிர்ப்பந்தம். இந்த ஊர்ச் சம்பிராதயம் அப்படி. அத்துடன் முதலாம் நாள் முழுவதும் ஒலிபெருக்கி மூலத் திரைப்படப் பாடல்கள் ஒலிக்க விடப்படுவதனால் இந்தப் பகுதியிலுள்ள பொதுமக்கள், சிறார்கள் சிரமங்களை அனுபவித்து வருகின்றார்கள். இரண் டாம், மூன்றாம் நாள்களில் சில நல்ல மனம் படைத் தவர்கள் இந்த இசை ஒலிபரப்புக்களை நிப்பாட்டி விடுகிறார்கள். ஆனால் சிலர் தொடர்ந்தும் இரண்டாம், மூன்றாம் நாள்களிலும் தேவையில்லாமல் திரைப் படப் பாடல்களை ஒலிக்கவிடுவதுடன், தங்களால் அமைக்கப்பட்ட பந்தல்களுக்குள் இருந்து நடனமாடுவதையும் கடைப்பிடித்து பொதுமக்களை வீணான அசௌகரியங்களுக்கு உள்ளாக்கி வருகின்றார்கள். இதற்கான அனுமதி பொலிஸாரால் வழங்கப்பட்டுள்ளதா என்பதை அறியமுடியாமல் உள்ளது. அப்படி வழங்கினால் அது தேவையற்றதென கூறமுடியும். ஒரு சிலரின் இப்படியான செயலினால் பாடசாலை செல்லும் மாணவர்கள் இந்த நாள்களில் தமது கல்வியை மீட்ட முடியாத நிலை உருவாகிறது. எனவே இந்தப் பகுதி பொதுமக்கள், மாணவர்கள் பாதைகளில் பயணிப்போர் நன்மை கருதி இந்த அற்ஹோம் கொண்டாட்டம் நடைபெறும் இடங்களில் உள்ள பந்தல்கள் ஊடாக இரண்டாம் நாள் தொடக்கம் போக்குவரத்துச் செய்ய நடவடிக்கை எடுப்பதுடன், திரைப்படப் பாடல்களை உச்ச தொனியில் ஒலிக்கவிடுவதையும் தடை செய்ய குருநகர் ஐக்கிய முன்னணி அமைப்பும், பொலிஸாரும் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்.

*திலிப், குருநகர்.*

## கேலிச் சித்திரம்



நன்றி: லங்காதீப

# ரணிலின் தந்திரம்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வடக்கு கடந்த வெள்ளிக்கிழமை பயணம் மேற்கொண்டிருந்தார். முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, யாழ்ப்பாண மாவட்டங்களில் தேர்தல் பரப்புரைகளில் பங்கெடுத்திருந்தார். தேர்தல் பரப்புரைகளின்போது, அவர் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் எதனையும் எங்கும் சொல்லவில்லை.

அதனை விட யாழ்ப்பாணத்தில் அவர் உரையாற்றும் போது பல விடயங்களைக் குறிப்பிட்டார். அடிப்படைப் பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பில் கருத்துக்களை அவர் முன்வைத்தார். அதிலும் குறிப்பாக முக்கியமான விடயம், வலி.வடக்கு மீள் குடியேற்றம் தொடர்பில் அவர் தெரிவித்த கருத்துக்கள்.

மக்களின் காணிகள் மக்களுக்கே வழங்கப்படும். தேசிய பாதுகாப்புக்கு ஒரு சில பகுதிகளை மாத்திரம் வைத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்திருந்தார். கடந்த ஜூன் மாதமளவில், தெற்கிலிருந்து சிங்கள ஊடகவியலாளர்கள் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டிருந்தனர். அவர்களுக்கு பலாலி இராணுவ முகாமில் வைத்து ஊடக சந்திப்பு நடத்தப்பட்டது. அந்தச் சந்திப்பில், இராணுவப் பேச்சாளர் புதிய காணி விடுவிப்புக்கள் தொடர்பில் ஒரு கருத்தை தெரிவித்திருந்தார். காணி விடுவிப்புக்கள் தொடர்பில் அரசே தீர்மானம் எடுக்க முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

ஆனால் இந்தக் கருத்து வெளியாகி இரு வாரங்களில், நாடாளுமன்றக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, புதிய காணி விடுவிப்புக்கள் தொடர்பில் இராணுவமே முடிவு செய்ய முடியும் என்று தெரிவித்தார். இராணுவம், அரசையும், அரசின் தலைவராக இருந்த பிரதமர் இராணுவத்தையுமாக, மாறி மாறிப் பந்தடித்துக் கொண்டிருந்தனர்.

ஆனால் தேர்தல் வந்தவுடன் மாத்திரம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால், மக்களின் காணிகள் மக்களுக்குத்தான் என்று சொல்ல முடிகின்றது. இதனை நாடாளுமன்றத்தில் கொஞ்சக் காலத்துக்கு முன்னர் சொல்லி, அரசியல் ரீதியாக இதனைத் தீர்மானமாக எடுத்திருக்கலாமே? தீர்மானமாக எடுத்திருந்தால் வலி.வடக்கில் காணி விடுவிக்கப்பட்டிருக்கும்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பஸ்நாயக்கா தலைமையில், பலாலியில் கடந்த மாத இறுதியில் நடைபெற்ற கூட்டத்தில் கூட, சிறு காணித் துண்டுகள் விடுவிப்புக்கே இராணுவத்தினர் விடாப்பிடியாக நின்றுள்ளனர். வல்லை - அராலி வீதியில், தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு மக்கள் செல்வதற்காக, இராணுவப் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள வீதியை விடுவிக்குமாறு கேட்கப்பட்டதற்கு இராணுவத்தினர் மறுத்துரைத்துள்ளனர்.

இவ்வாறான நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சொல்லும், மக்கள் காணி மக்களுக்கே என்ற மந்திரம் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படும்? அந்த மந்திரம் உண்மையில் நடைபெற்றால், தமிழ் மக்கள் சந்தோஷமடைவர். இந்த மந்திரத்தை பதவியிலிருந்த 6 மாதத்தில் முழுமையாக உபயோகப்படுத்தியிருக்கலாம். வெறும் தேர்தல் வாக்குக்காகவே ரணில் இதனைச் சொல்லியிருக்கின்றார்.

இராணுவத்தினர் வலி.வடக்கில் சொகுசாக வாழ்ந்தபடியினால் உடனடியாக வெளியேற மறுக்கின்றனர். அவர்களைத் தந்திரமாகத்தான் வெளியேற்ற வேண்டும் என்று, மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், பிரதமர் பங்கேற்ற குறித்த கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.

இங்கே மீள்குடியேற்ற அமைச்சர் தெரிவித்த கருத்துக்கள் நியாயமானவை. ஆனால், அவரால், பிரதமரை மீறி இராணுவத்தை வெளியேற்றுவது என்பது சாத்தியமற்றது. பல தடவைகள் மீள்குடியேற்ற அமைச்சர், வலி.வடக்கு மீள்குடியமர்வு தொடர்பில் இராணுவத்தினருடன் பேசியிருந்தாலும் எதுவும் நடைபெறவில்லை என்பதுதான் உண்மை.

வெறும் வாக்கு வேட்டைக்காக, தேசியக் கட்சியாக இருக்கின்ற ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் வாக்குறுதியை அள்ளி வீசியிருக்கின்றது.

அந்த வாக்குறுதி நடைமுறைப் படுத்தக்கூடியதா என்பதையும் மக்கள் சிந்திக்க வேண்டும்.

பத்தி எழுத்து

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நிரந்தரத் தீர்வுக்கு அரசு விரைந்து வழிதேட வேண்டும்

தமிழர் தொடர்பாக ஒரு பிரச்சினை இருக்கிறது என்பதை, நாட்டில் உள்ள குறிப்பாக தென்னிலங்கையில் செயற்படும் அனைத்து பிரதான கட்சிகளும் ஏற்றுக்கொண்டுள்ளன. ஆனால் அதனை எவ்வாறு தீர்த்துக் கொள்வது அல்லது எவ்வாறு தீர்த்து வைப்பது என்பதிலேயே இழுபறிகளும், முரண்பாடுகளும் பல வருட காலமாக நீடித்து வந்துள்ளன.

தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரை ஒரு நிலைப்பாட்டைக் கைக்கொண்டு அதனை நாட்டு மக்கள் முன்வைத்து நியாயமான தீர்வைப் பெற்றுக்கொள்ள தமிழ் மக்களின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்றிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னின்று செயற்பட்டு வந்தது. அதன் அடிப்படையிலேயே இப்போதும் தேர்தல் களத்தில் அது இறங்கி நிற்கின்றது.

கடந்த காலத்தில், தமிழ் மக்கள் தரப்பில் அமைதியான முறைகளில் நடத்தப்பட்ட போராட்டங்களை, தென்னிலங்கையின் அரசியல் பேரின சக்திகள் புறந்தள்ளியது மட்டுமன்றி, தமது ஆயுத பலத்தைப் பிரயோகித்து நியாயமான அமைதிப் போராட்டங்களை ஒடுக்கித் தமிழ் பேசும் மக்களை நிரந்தரமாக அடக்கு முறையிலும் அடிமைத் தனத்திலும் வைத்திருக்க, அதற்கான வழிமுறைகளையும் வகுத்துச் செயற்படத் தொடங்கினர். அந்த வகையில் அமைந்தவையே மொழியுரிமை பறிக்கப்பட்டமை, கல்வியில் விகிதாசாரத்தை திணித்தமை இன்னும் சொல்வதானால் தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ் பேசுவோரின் விகிதாசாரத்தை சிதறடிக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட குடியேற்றங்களும் ஆகும். இவைபோன்ற இனம் மற்றும் பிரதேச வாரியான எண்ணிறந்த பாகுபாடுகளே தமிழ் இளைஞர்களை ஆயுதம் ஏந்தத் தூண்டின.

தமிழர் தரப்பில் அதுவே விடுதலைக்கான ஒரு திருப்பு முனையாக அமைந்தது. அதன் விளைவாக, நாட்டின் அமைதியும் பொருளாதாரமும் சீர்குலைய நேர்ந்தது மட்டுமன்றி, இரு தரப்பிலும் ஏராளமான பொதுமக்கள் கொலையுற நேர்ந்தது. அதன் உச்சமாக 30 ஆண்டுகால குரூர போர் நடந்து முடிந்தது. அந்தப் போரில் முன்னின்று போராடிய தமிழீழ விடுதலைப் புலிகளை முற்றாக அழித்து விட்டதாக அறிவித்துக் கொண்டு, அப்போதைய அரசு பெருமை அடித்துக் கொண்ட அளவுக்கு, போருக்குக் காரணமாக அமைந்துவிட்ட, சிக்கல்களைத் தீர்த்து வைத்து நாட்டில் அமைதியை தோற்றுவிக்க முயலவில்லை.

முற்றிலும் மாறாக பக்கத்து நாட்டின் அனுசரணையில் உருவான 13ஆவது திருத்தத்தைத் தானும் முறையாகச் செயற்படுத்தவில்லை. அதன் காரணமாகவே, தமிழர் தரப்பில் ஒரு நியாயமான தீர்வு வேண்டும். அது பிரிக்கப்படாத இலங்கைக்குள் வடக்கு, கிழக்கு இணைந்த சுயநிர்ணய உரிமையுடனான சமஷ்டியாக அமைய வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை முன்வைத்துள்ளது.

முன்னர் பிரிவினை நாடி போரிட்ட அமைப்புக்கள் சிலவும் இதில் இணைந்து கொண்டிருப்பது அவர்கள் பிரிவினையைக் கைவிட்டுள்ளார்கள் என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

தமிழீழ விடுதலைப்·புலிகள் பிரிவினை கோரி நடத்திய போர் ஒடுக்கப்பட்டு விட்டாலும், அந்தப் போரின் விளைவாக இலங்கைத் தமிழர் விவகாரம் சர்வதேச மயமாகியுள்ளதை. மறுக்க முடியாது அதன் ஓர் அம்சமே, இலங்கையில் நடந்த போரின் இறுதிகாலச் செயற்பாடுகள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமை பேரவையில், செப்ரெம்பரில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட உள்ளது.

அந்த அறிக்கை எவ்வாறு இருக்கும் என்பது குறித்து இப்போது நாட்டில் பலவிதமான ஏறுக்குமாறான கருத்துகள் பரவி வந்தாலும், சர்வதேசம் இதில் கரிசனை கொண்டிருப்பதையும், அதனால் இலங்கை மீதான நெருக்குதல்கள் அதிகரிக்கும் என்பதை தென்னிலங்கைத் தலைவர்கள் புறக்கணித்து விட முடியாது.

எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாட்டை பிரிக்க முயல்கிறது, இனவாதத்தைக் கிளப்புகிறது என்றெல்லாம் பரப்புரை செய்வதை ஒரு புறம் ஒதுக்கிவிட்டு, தமிழ் மக்கள் சார்பில் முன் வைக்கப்படும் கோரிக்கைகள் தொடர்பாகப் பொதிந்துள்ள உள்ள நியாயத்தை ஆராய்வதற்கும் அவர்கள் ஏற்றுக்கொள்ளும் விதத்தில், தீர்வொன்றை முன்வைக்க ஆயத்தமாக வேண்டும். அதுவே நாட்டுக்கும், நாட்டின் நிரந்தர அமைதிக்கும் உதவுவதாக அமையும்.

# ஐ.தே.க. பக்கம் சாய்வதால் தமிழர்களுக்கு கிடைக்கப் போவதென்ன?



● சேரலாதன்

தற்போது ஐக்கிய தேசியக் கட்சி சிறுபான்மையின மக்களின் வாக்குகளைச் சேகரிப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. மஹிந்த ராஜபக்ஷ மீது சிறுபான்மையின மக்கள் கொண்டுள்ள வெறுப்பை அந்தக்கட்சி தனக்குச் சார்பானதாகத் திருப்பிவிடுவதற்கு முயற்சி செய்வது அரசியலில் புதிதான ஒன்றல்ல. ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் ஐ.தே.க. ஆட்சிக் காலத்தில் அவர்கள் அனுபவித்த கொடுமைகள் மிகக் கடினமானவை. இலங்கையின் முதலாவது பிரதம மந்திரியாகப் பதவி வகித்த டி.எஸ்.சேனநாயக்கவினால் கிழக்கு மாகாணத்தில் ஏற்படுத்தப்பட்ட சிங்களக் குடியேற்றங்களால் ஏராளமான தமிழ் மக்கள் தமது வாழ்விடங்களை இழந்து வெளியேறினர். பொன் கொழிக்கும் பல ஆயிரக் கணக்கான விவசாய நிலங்களும் அவர்களிடமிருந்து பறித்தெடுக்கப்பட்டன. இன்று தமிழர்களின் பூர்வீக தாயக மண்ணின் பெரும் பகுதியில் சிங்கள மக்கள் குடியமர்ந்துள்ளனர்.

வடபகுதியில் கூட ஆனையிறவை அண்டிய பிரதேசத்தில் சிங்கள மக்களைக் குடியமர்த்துவதற்கான ஒரு திட்டம் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் ஆட்சிக் காலத்தில் இருந்தது. ஐ.தே.க.அரசில் முக்கிய அமைச்சர் பொறுப்பை வகித்த லலித் அத்துலத்முதலி இதற்குப் பொறுப்பாகவும் நியமிக்கப்பட்டார். ஆனால் விடுதலைப் புலிகளின் எதிர்ப்புக் காரணமாக இந்தத் திட்டம் பிசுபிசுத்துப் போனது.

மேலும், தமிழ் மக்களுக்கு எதிரான இனக் கலவரங்கள் ஐ.தே.க. ஆட்சிக் காலத்திலேயே அதிகளவில் இடம்பெற்றுள்ளன. 1977, 1981, 1983 ஆகிய ஆண்டுகளில் இடம் பெற்ற கலவரங்களால் ஏராளமான தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டனர். அப்போது நாட்டின் ஆட்சித் தலைவராக இருந்த ஜே.ஆர் ஜெயவர்த்தனா கலவரங்களை அடக்குவதற்கு எதுவுமே செய்யாது இருந்ததோடு மட்டுமல்லாது அவற்றைத் தூண்டிவிடுவதிலும் கண்ணும் கருத்தாக இருந்தார். 1983 ஆம் ஆண்டு ஜுலை மாதம் ஐ.தே.க அரசின் ஆசீர்வாதத்துடன் நிறைவேற்றப்பட்ட கறுப்பு ஜுலையைத் தமிழர்களின் நெஞ்சங்கள் என்றுமே மறக்காது. ஆண், பெண், முதியவர்கள், சிறுவர்கள் என்ற பேதம் பார்க்கப்படாது தமிழ் மக்கள் துடிதுடிக்கப் படுகொலை செய்யப்பட்டனர். தமிழர்களுக்குச் சொந்தமான வீடுகள், வியாபார நிலையங்கள் என்பன காடையர்களால் தீக்கிரையாக்கப்பட்டன. தமிழினத்தை முற்றாக அழிக்கும் நோக்குடன் அரசினால் ஏவி விடப்பட்ட காடையர்கள் தமக்கு இடப்பட்ட கட்டளையைக் கச்சிதமாக நிறைவேற்றி வைத்தனர். கறுப்பு ஜுலை என்றாலே தமிழ் மக்கள் இன்றும்கூட அஞ்சி நடுங்கும் நிலைதான் காணப்படுகின்றது.

அது மட்டுமல்லாது தமிழர்களின் அறிவுப் பொக்கிசமாகத் திகழ்ந்த யாழ்ப்பாணப் பொது நூலகம் 1981 ஆம் ஆண்டு தீயிட்டுச் சாம்பலாக்கப்பட்டதும் ஐ.தே.க. ஆட்சிக் காலத்தில் தான். முக்கிய அமைச்சர் ஒருவரின் வழிகாட்டலின்கீழ் இனவெறி கொண்ட காடையர் கூட்டத்தினால் நூலகத்தில் வைக்கப்பட்டிருந்த நூல்கள், சுவடிகள், ஆவணங்கள் என்பன எரியூட்டி அழிக்கப்பட்டன. இது தொடர்பாக ஐ.தே.க.அரசு அலட்டிக் கொள்ளவேயில்லை.


இது மட்டுமல்லாது புரையோடிப் போயிருந்த இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் ஐக்கிய தேசியக் கட்சி அரசுகள் அக்கறை காட்டவில்லை. மாறாகத் தமிழர்களை அடக்கி ஒடுக்கி வைப்பதிலேயே குறியாக இருந்து செயற்பட்டன.



தமிழ் இளைஞர்கள் தமிழர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்பதற்காக ஆயுதம் ஏந்திப் போராடிய போது அதனையொரு பயங்கரவாதப் பிரச்சினை எனப் பரப்புரை செய்வதில் ஐ.தே.க. அரசுகள் முன்நின்றனவே தவிர போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதற்கான உண்மையான காரணத்தை அறிந்து கொள்வதற்குக் கூட முயற்சி செய்யவில்லை. தற்போதைய பிரதம மந்திரியானரணில் விக்கிரம சிங்க கூட இரண்டுதடவைகள் அந்தப் பதவியில் அமர்ந்த போதிலும், அவர்கூட தமிழர் பிரச்சினையில் அக்கறை காட்டவில்லை. மாறாக விடுதலைப் புலிகளை இரண்டாக உடைத்து அவர்களைப் பலவீனப் படுத்தியது தாமேயென மார்தட்டவே அவரால் முடிந்தது. இன்றும் கூட ஐக்கிய தேசியக் கட்சி இனப் பிரச்சினைக்கான தீர்வுக்குத் திட்டங்கள் எவற்றையும் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. மாறாக ஒற்றையாட்சிக்குள் தீர்வு வழங்கப்படுமெனக் கூறுகின்றார்களே தவிர, அதைக்கூட என்னவென்று இதுவரை கூறவில்லை. தமிழர் வாக்குகளை அபகரிப்பதற்கு முயல்கின்ற அவர்கள் அந்த மக்களின் பிரச்சினைகளை மறந்து விட்டவர்களைப் போன்று நடிப்பது எந்த வகையிலும் நியாயமாகத் தென்படவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியில் அங்கம் வகிக்கின்ற தமிழ் அரசியல்வாதிகள் கூட இதனைக் கவனத்தில் கொண்டதாகத் தெரியவில்லை. மலைநாட்டு தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் கூட அவர்களின் வாக்குரிமையைப் பறித்த பெருமையும் ஐக்கிய தேசியக் கட்சிக்கே உரியது.

ஆகவே சிறுபான்மைத் தமிழர்களைப் பொறுத்த வரையில் ஐக்கிய தேசியக் கட்சியால் விளைந்த நன்மைகளை விட தீமைகளே மிக அதிகம் எனக் கூறலாம். இந்த நிலையில் அந்தக் கட்சி எதிர்வரும் தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சி அமைத்தாலும், தமிழர்களுக்கு எந்தவித நன்மையும் கிடைத்து விடாது என்பதுதான் யதார்த்தமாகும். ஏனென்றால் தென்பகுதி மக்களின் மனங்களில் மாற்றமொன்று ஏற்படாதவரை பெரும்பான்மையின அரசியல்வாதிகளால் எதையும் சாதித்துவிட முடியாது. இந்த அளவுக்கு அவர்களின் மனங்களில் இனவாத விதைகள் ஆழமாக ஊன்றப்பட்டுவிட்டன.

எனவே, மஹிந்தவை எதிர்க்கின்றோம் எனக் கூறிக்கொண்டு ஐ.தே. க.பக்கம் சாய்வதால் தமிழ் மக்களுக்கு ஒன்றுமே கிடைக்கப் போவதில்லை.



**"சமஷ்டி சுயநிர்ணயம் ஒன்றும் சரி வராது. இலங்கைக்கு உகந்ததல்ல தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்றெல்லாம் கதைவிடும் தென்னிலங்கைக் கட்சிகளால் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடி யதான ஒரு தீர்வை முன்வைக்க முடியுமா? புலிக்குப் புல்லுப்போட்ட கதையாகத்தானிருக்கும் அவர்கள் கூறும் தீர்வுகள்.**

# அன்றைய தமிழ்த் தலைமைகளே இன்றைய இழிநிலைக்குக் காரணம்


வந்தியத்தேவர்

ஒற்றை ஆட்சிக்குள் தமிழர் பிரச்சினைக்கு அதி உயர் தீர்வு கிடைக்கும் என ஐ.தே. கட்சி தெரிவித்துள்ளது. ஆனால் நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு சமஷ்டிமுறை பொருத்தமற்றது எனத் தெரிவித்து தென்னிலங்கையில் சமஷ்டிக்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. வடக்கு –கிழக்கு மக்களின் பிரச்சினைக்கு சமஷ்டி மூலம் தீர்வு காணமுடியாது என ஜே.வி.பியின் ரில்வின் சில்வாவும் கூறியுள்ளார். தமது பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காண முடியும் என்பதைத் தமிழ் மக்களே தீர்மானிக்கமுடியும். தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இணைந்த வடக்கு–கிழக்கு மாகாணங்களை அடிப்படையாகக் கொண்ட சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டி முறைதான் எங்களுக்கான நியாயமான தீர்வு என்பதை தமிழ் மக்கள் வலியுறுத்துகின்றனர் என்று கூறியுள்ளது. பிரதமராக இருந்த எஸ். டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கவும் கூட முதலில் சமஷ்டித் தீர்வை ஏற்றுக்கொண்டிருந்தார். ஆட்சியைக் கைப்பற்ற அவர் கொண்டுவந்த சிங்களம் மட்டும் என்பதுதான் இந்த நாட்டில் சிக்கல்கள் உருவாகக் காரணமாக இருந்து விட்டது.


பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் கிடைத்த காலம் முதல் இன்று வரை தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் இன்னல்களுக்கு பாகிஸ்தானைப் பிரித்துக் கேட் ட ஜின்னா போன்ற தீர்க்க தரிசனம்மிக்க அரசியல் தலைமை தமிழ் மக்களுக்கு கிடைக்காததே காரணம். இன்றைக்கு சிங்கள மக்கள் முழுமையான இறைமையுடன் கூடிய மக்களாக வாழ்வதற்குக் காரணமாக இருந்தவர்கள் அன்றைய தமிழ்த்தலைவர்களே. சுதந்திரம் கிடைத்ததும் சிங்களத் தலைமைகள் படிப்படியாக தமிழர்களே அடிமைப்படுத்தி இந்த நாட்டை ஒரு சிங்கள நாடாக மாற்ற வேண்டும் என்ற உள்நோக்குடன் தமிழ்த் தலைவர்களைத் தேரில் வைத்து இழுத்துக் கொண்டே தங்கள் சதி வேலைகளில் மறைமுகமாக ஈடுபட்டனர். சிங்கள மக்கள் எங்களைத் தேரில் வைத்து இழுத்து கௌரவித்தனர் என்பதால் தொடர்ந்தும் தேரில் வைத்து இழுத்து தமிழர்களுக்கு என்றும் மரியாதையுள்ளவர்களாக இருப்பார்கள் என அன்றைய தமிழ்த்தலைவர் கள் போட்ட தப்புக்கணக்குதான் இன்று தமிழ் மக்களின் அழிவுக் கான மூலகாரணமாகும்.

ஐ.தே.கட்சி ஒற்றையாட்சியின் கீழ்தான் தமிழர்களுக்கான தீர்வு என்கிறது. ஐ.ம.சு.முன்னணி இன்னும் கீழே இறங்கி தமிழ் மக்களுக்கான தீர்வு இதுதான் என்றும் அறிவிக்கலாம். ஒற்றை ஆட்சியின் கீழான அதிஉச்சத் தீர்வை நாங்கள் ஏற்கமுடியாது எனத் திட்டவட்டமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உறுதிபடக் கூறியுள்ளார். தென்பகுதியில் உள்ள இரண்டு பெரிய அரசியல் கட்சிகளும் தமிழர்கள் விடயத்தில் கூட்டமைப்புக் கோரும் சமஷ்டி ஆட்சியை வழங்கப்போவதில்லை. எந்த ஒரு சாராருக்கும் அறுதிப்பெரும்பான்மை கிடைக்காத நிலையில் பேசப்போகும் பேரம் எடுபடுமா? கடந்த காலங்களில் பேசிய பேரங்களும் எழுதிய ஒப்பந்தங்களும் என்னாச்சு என்பதையெல்லாம் நன்கு தெரிந்து வைத்திருக்கும் சம்பந்தர் இனி யாரை நம்பிப் பேரத்தில் இறங்கப்போகிறார் மைத்திரியை நம்பியா?

சமஷ்டி சுயநிர்ணயம் ஒன்றும் சரி வராது, இலங்கைக்கு உகந்ததல்ல, தேசியப்பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்றெல்லாம் கதைவிடும் தென்னிலங்கைக் கட்சிகளால் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடி யதான ஒரு தீர்வை முன்வைக்க முடியுமா? புலிக்குப் புல்லுப்போட்ட கதையாகத்தானிருக்கும் அவர்கள் கூறும் தீர்வுகள். தமிழ்மக்களின் பிரச்சினைகள் குறித்த உண்மை நிலையைப் புரிந்து சாதாரண அப்பாவிச் சிங்கள மக்கள் புரிந்து கொள்ள முன்வருவதுமில்லை. தமிழ் மக்களின் பிரச்சினைகளை எடுத்துக்கூறி அவர்களின் ஒத்துழைப்புடன் தீர்ப்பதற்குஅங்குள்ள அரசியல்வாதிகள் விரும்புவதுமில்லை. குரங்கு பலாக்கொட்டையை எடுத்தது போன்று அப்பாவிச் சிங்கள மக்களின் வாக்குகளை ஏமாற்றிப் பெற்றுக் கொண்டு சுகபோக வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு சிறுபான்மை இனமும் நாடும் முக்கியமாகத் தெரியாது.



தமிழர்களின் பிரச்சினையில் உண்மைத்தன்மைகளையும் அடிப்படை உரிமைகளுடன் கூடிய சமஷ்டி சுயநிர்ணயம் என்றால் அதன் அர்த்தம் என்ன என்பதை சிங்கள மக்களுக்கு விலாவாரியாக எடுத்துக்காட்டி, இந்த உரிமைகளுடன் கூடிய ஒன்றுபட்ட இலங்கையில் பெரும்பான்மையும் சிறுபான்மையும் எவ்வாறு ஐக்கியத்துடனும் அபிவிருத்தியுடனும் கூடிய முன்னேற்றத்தை எட்டமுடியும் என்பதை உணர்தக்கூடியதாக தமிழ் அரசியல் கட்சிகள் ஒருங்கிணைந்து தெளிவுபடுத்த வேண்டும். வெறுமனே இணக்க அரசியல் நல்லாட்சிக்கான மாற்றம் என்று புலம்புவதில் இணக்கமும் வரப்போவதில்லை. நல்லாட்சிக்கான அறிகுறியும் தென்படப்போவதில்லை. இப்போதெல்லாம் முன்னரைப்போன்று பெருமளவில் இனவாதத்துக்கு ஆதரவு இல்லை என்பதே பரவலான கருத்தாக உள்ளது. மைத்திரியின் அரசியல் நகர்வுகள் எதிர்காலத்தில் இனவாதக் கருத்துக்களுக்கு ஒரு தடைக்கல்லாகவும் அமையலாம். தென்பகுதியில் புத்திஜீவிகள், ஒன்றுபட்ட நாட்டில் அனைத்து மக்களும் சமத்துவமாக வாழவேண்டும் என விரும்புபவர்கள், எல்லோரதும் ஒத்துழைப்புடன் தமிழர்களின் நியாயமான கோரிக்கைக்கு அரசியல் பலம் சேர்க்க தமிழ்த் தலைமைகள் முயலவேண்டும். தவறின் உலகப் பார்வையில் தொடர்ந்தும் அன்று ஏற்றிவிட்டவன் தமிழன் இன்று எட்டி உதைபடுபவனும் தமிழன்தான் என்றிருக்கும்.



ஆயுதப் போராட்டமும் தோல்வியடைந்த பின்னர் தமிழர் தரப்பின் கோரிக்கைகளுக்கு அரசுத் தரப்பினர் செவி சாய்ப்பார்கள் என்பதை எதிர்பார்க்கமுடியாது. ஏனென்றால் தமிழர்களை ஒரு தோற்ற இனமாகக் கருதும் மனப்பான்மைதான் அங்கு காணப்படுகின்றது. மேலும், தற்போது இனவாதப் பரப்புரைகளில் தென்பகுதி அரசியல் வாதிகள் ஈடுபட்டுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது. இந்த நிலையில் தமிழர் தரப்பின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்குமென எவருமே எதிர்பார்க்க முடியாது.

ஆகவே தமிழ்த் தலைமைகள் நிதானத்துடனும், விவேகத்துடனும் செயலாற்ற வேண்டிய தருணத்தில் உள்ளனர். மேலும் நிறைவேறக் கூடிய வாக்குறுதிகளை அவர்கள் தமிழர்களிடத்தில் வழங்குவதே அவர்களின் நம்பகத் தன்மைக்குப் பெரிதும் உதவும் என்பதை உறுதியாகக் கூற முடியும்.

எனவே எதிர்வரும் பொதுத் தேர்தலில் எந்தக் கட்சி ஆட்சியமைத்தாலும் தமிழர் தரப்பின் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வை நாம் எதிர்பார்க்க முடியாது என்பதே யதார்த்தமாகும்.

# மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 80 | 40 | 60 | 60–80 | 80 | 60 | 40 |
| கத்தரி | 80 | 50 | 90 | 70 | 40–60 | 100 | 80 | 50 |
| கரட் | 120 | 130 | 100–120 | 120 | 180 | 200 | 200 | 120 |
| மரவள்ளி | 60 | 50 | 60 | 50 | 50 | 60 | 60 | 45 |
| பயிற்றை | 70 | 50 | 60 | 50 | 80–100 | 60 | 140 | 50 |
| பாகல் | 120 | 140 | 100 | 120 | 100–120 | 120 | 120 | 100 |
| கருணைக்கிழங்கு | 120 | 80 | 100 | 120 | 140 | – | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 120 | 120 | 100 | 80–90 | 120 | 120 | 90 |
| சி.வெங்காயம் | 80 | 100 | 100 | 120 | 110–130 | 140 | 120 | 70–80 |
| பூசணி | 40 | 40 | 50 | 40 | 30 | 60 | 80 | 40 |
| தக்காளி | 120 | 120 | 120 | 120 | 120 | 120 | 140 | 100 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 | 60 | 40 | 40 | 60 | 35 |
| கீரை | 20 | 30 | 30 | 10 | 20 | 30 | 40 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 30 | 20 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 250 | 250 | 250 | 220 | 160 | 200 | 400 | 120–150 |
| புடோல் | 50 | 50 | 40 | 40 | 40 | 60 | 80 | 50 |
| கோவா | 60 | 100 | 70 | 80 | 100 | 100 | 120 | 70 |
| வெண்டி | 50 | 50 | 40 | 60 | 60 | 120 | 80 | 30–40 |
| போஞ்சி | 140 | 220 | 180 | 180 | 160–180 | 200 | 200 | 180 |
| லீக்ஸ் | 80 | 210 | 120 | 120 | 100–120 | 120 | 120 | 90 |
| தேங்காய் | 40 | 40 | 50 | 40 | 40–60 | 40–50 | 35–45 | 35 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 80 | 90–100 | 90 | 100 | 120 |
| தேசிக்காய் | 100 | 60 | 70 | 60 | 60–70 | 60 | 120 | 80–90 |
| வல்லாரை | 25 | 20 | 10 | 10 | 40 | 20 | 20 | 10 |
| கறிமிளகாய் | 140 | 200 | 120 | 160 | 220–240 | 200 | 220 | 130 |
| இராசவள்ளி | 120 | 100 | – | 160 | 140–160 | – | 180 | 90 |
| முருங்கைக்காய் | 150 | 120 | 120 | 120 | 140–160 | 120 | 120 | 120 |

# நோயற்ற வாழ்வு தரும் சாறுகள்

**❋ அறுகம்புல் சாறு:** நரம்புகளுக்கு புத்துணர்ச்சி அளிக்கும். மலச்சிக்கலைத் தீர்க்கும். குருதியில் உள்ள சிவப்பு அணுக்களை அதிகரிக்கும். வாய்துர்நாற்றம், பல் நோய்கள், சர்க்கரை நோய் வராமல் தடுக்கும். ஆஸ்துமா இரத்த அழுத்தத்தைக் குறைக்கும். தாய்ப் பாலை அதிகரிக்கச் செய்யும்.

**❋ துளசி இலைச்சாறு:** காய்ச்சல், இருமல், ஜீரணக்கோளாறு, ஈரல் சம்பந்தமான நோய்கள் காதுவலி ஆகியவற்றறை நீக்கி குருதியைச் சுத்தம் செய்யும்.

**❋ தூதுவளை இலைச்சாறு:** மார்புச் சளியை அகற்றும். நரம்புத் தளர்ச்சி மறையும். மூளை வளர்ச்சி நினைவாற்றல் அதிகரிக்கும். தோல் நோய் கள் மறையும்.

**❋ பொன்னாங்கண்ணிச் சாறு:** உடலுக்கு வலிமை ஊட்டும். பொன் போல் உடல் பளபளப்பாகும். கண்ணொளி அதிகரிக்கும். வாதநோய்கள் மறையும். உடல்சூடு குறையும்.

**❋ வல்லாரை இலைச்சாறு:** நினைவாற்றல் அதிகரிக்கும். நரம்புத் தளர்ச்சி அகலும். வயிற்று நோய்கள், குடல் நோய்கள், நீங்கும். இதயம் வலுவாகும்.

**❋ வில்வம் இலைச்சாறு:** காய்ச்சல், நீரிழிவு குறையும். வயிற்று புண்கள் ஆறும். நல்ல பசி எடுக்கும். மந்த புத்தி மாறும். மஞ்சள் காமாலையை போக்கும். கொலாரா நோயைக் குறைக்கும்.

**❋ நெல்லிக்காய்ச் சாறு:** தலை முடி உதிர்வது குறையும். தும்மல், இருமல், சளி, கண் நோய், பல் நோய்கள், குறை யும். நன்கு பசி எடுக்கும். இதயநோய்கள், நீரிழிவு நோய், தோல் நோய் என்பன குறையும். உடல் பலமடையும்.

**❋ வாழைத்தண்டுச் சாறு:** சிறுநீர் அடைப்பு, சிறுநீரக சம்பந்தமான நோய்கள் குறையும். இரத்த அழுத்தம், அமிலத் தன்மை போன்றவற்றைக் குறைக்கும். உடல், கை, கால் வீக்கத்தைக் குறைக்கும்.

**❋ கரட் சாறு:** கண் பார்வை ஒளி பெறும். கண் நோய்கள், பல் நோய்கள் குறையும். அமிலத்தன்மையைக் குறைக்கும்.

**❋ அரச இலைச்சாறு:** மலச்சிக்கல், உடல் சூடு, கர்ப்பப்பை நோய்களைக் குறைக்கும்.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### இறைவன் உள்ளத்தில் காணப்படுகிறார்

இதோ! ஓர் அற்புதமான உருவகம்! உடலைத் தேராகவும், ஆன்மாவைச் சவாரி செய்பவராகவும், புத்தியைத் தேரோட்டியாகவும், மனதைக் கடிவாளமாகவும், புலன்களைக் குதிரைகளாகவும் கற்பனை செய்து கொள்ளுங்கள். யாருடைய குதிரைகள் நன்கு பழக்கப்பட்டு இருக்கின்றனவோ, கடிவாளம் உறுதியாக உள்ளதோ, தேரோட்டி (புத்தி) அதை நன்றாகப் பிடித்திருக்கின்றானோ, அவனே எங்கும் நிறைந்திருக்கின்ற நிலையான தனது குறிக்கோளை அடைவான். யாருடைய குதிரைகள் (புலன்கள்) அடக்கப்படாமலும், கடிவாளம் (மனம்) உறுதியாகப் பிடிக்கப்படாமலும் இருக்கின்றனவோ, அவன் அழிவை நோக்கிப் போகின்றான்.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | | 8 | 6 | | | 5 | |
| | 8 | | | | | 7 | | |
| | | | | 1 | 5 | 9 | | |
| | 9 | | 6 | | | | | |
| 2 | | | | | | | | 8 |
| | | | | | 1 | | 6 | |
| | | 6 | 3 | 9 | | | | |
| | | 8 | | | | | 3 | |
| | 3 | | | 4 | 8 | | 2 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங் கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட் டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க் கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 1 | 3 | 5 | 7 | 4 | 8 | 9 | 6 |
| 4 | 6 | 5 | 9 | 8 | 3 | 7 | 2 | 1 |
| 9 | 8 | 7 | 2 | 1 | 6 | 4 | 5 | 3 |
| 3 | 9 | 8 | 1 | 5 | 7 | 6 | 4 | 2 |
| 5 | 7 | 4 | 3 | 6 | 2 | 9 | 1 | 8 |
| 6 | 2 | 1 | 8 | 4 | 9 | 5 | 3 | 7 |
| 1 | 5 | 9 | 6 | 2 | 8 | 3 | 7 | 4 |
| 7 | 3 | 6 | 4 | 9 | 1 | 2 | 8 | 5 |
| 8 | 4 | 2 | 7 | 3 | 5 | 1 | 6 | 9 |

## நாளை

**ஆடி-19**
**செவ்வாய்க்கிழமை**
**04.08.2015**

திதி: பஞ்சமி பி.இ. 05.57 வரை
நட்சத்திரம்: உத்தரட்டாதி பி.இ.03.58 வரை
சுபநேரம்: 10.34–12.04 வரை
இராகுகாலம்: 03.04–04.34 வரை

# கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 700 | 800 | 800 | 700 | 600 |
| நண்டு | 250 | 400 | 400 | 300 | 250 | 400 |
| கலவாய் | 600 | 600 | 700 | 600 | 600 | 600 |
| பாரை | 600 | 500 | 600 | 600 | 450 | 450 |
| சுறா | 600 | 500 | 500 | 700 | – | 500 |
| சீலா | 300 | 450 | 400 | 450 | 400 | – |
| விளை | 700 | 450 | 450 | 500 | 500 | 400 |
| முரல் | 300 | 400 | 300 | 300 | 300 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | – | – |
| கிழாக்கன் | 550 | 800 | 700 | 400 | – | – |
| ஒரா | 400 | 300 | 300 | 300 | – | 350 |
| திரளி | 250 | 300 | 200 | 250 | – | 300 |
| நகரை | 200 | 400 | 300 | 300 | 200 | 350 |
| சூடை | 150 | 200 | 150 | 200 | 150 | 100 |
| ஒட்டி | 300 | 300 | 300 | 200 | 150 | 300 |
| திருக்கை | 150 | 400 | 200 | 300 | – | 150 |
| பாலை | 400 | 350 | 400 | 400 | – | – |
| வாழை | 100 | 300 | – | 200 | 300 | – |
| கொய் | 100 | 200 | 150 | 100 | 50 | – |
| மதனம் | 150 | 300 | 200 | 250 | 300 | 300 |

# ஆங்கில எழுத்துக்களின் பெயர்ப் பலன்கள்



**யாரையும் தன் வசப்படுத்தும் B**

பெயரின் முதல் எழுத்தாக B எழுத்தைக் கொண்டவர்களது இயல்புகள் எப்படியிருக்கும் எனப் பார்க்கலாம். சூரியனின் கதிர்கள் இந்த எழுத்தின் மீது பட்டுச் சிதறுவதால் இவர்களின் உடலுக்குப் போதுமான வெப்பம் கிடைப்பதில்லை. ஆனால் அன்புடன் நடவடிக்கைகளைத் தொடங்கும் இவர்களின் உள்மனதை ஆண்டவனால் மட்டுமே அறிந்துகொள்ள முடியும்.



பேச்சில் அன்பைப் பிசைந்து கொடுப்பதால் இவர்களைத் திரும்பத் திரும்பச் சந்திக்க வேண்டும் போலிருக்கும். மக்கள் மத்தியில் மிகப் பிரபலமானவர்களாக இருப்பார்கள். வாயுவேகம், மனோவேகம் என்பார்களே. அது இவர்களுக்குத் தான் பொருந்தும். ஒரு நொடியில் இந்தியாவிலிருந்து இந்தோனேஷியா வரை பேச்சிலேயே சென்று வந்து விடுவர். கற்பனைக் கடலான இவர்கள் அடிக்கடி நீர் சம்பந்தமான சின்ன நோய்களால் அவதியுறுவர். இவர்களது மனதைப் போலவே உடலும் குளிர்வானதாகவே இருக்கும்.

உடல் உழைப்பை விரும்பாத இவர்கள், அறிவுபூர்வமான விடயங்களை எப்பொழுதும் அலசிக்கொண்டேயிருப்பர். மிக மென்மையாகப் பேசி யாரையும் தன்வசம் கொண்டு வந்து விடுவர். தண்ணீர் கலந்த உணவு நிரம்பப் பிடிக்கும். வெப்பமானவற்றை உதறித் தள்ளி விடுவர். செயலாற்றத் திட்டமிடுவர். ஆனால் செயல் புரிய சோம்பேறித்தனப்படுவர். இதனால் இவர்களின் பல வேலைகள் பாதியிலேயே நிற்கும். பெரும்பாலும் நிழல் இருக்கும் இடத்தில் மட்டுமே இவர்கள் தனது கருத்தை வெளியிடுவர். பகல்பொழுது இவர்களுக்குப் பிடிப்பதில்லை. மாலையிலிருந்து சிந்தனைச் சிற்பிகளாகி விடுவர். பெண் தெய்வத்தின் பேரில் அதிக நாட்டம் உண்டு. பின்னர் நடப்பவற்றை முன்பே கூறிவிடுவர். பல கலைகளை அறிந்தவர்கள். இதில் காதலும் ஒன்று. வெள்ளை ஆடைகளை விரும்பி அணிவர். குளிர்பானங்கள், புளிப்புச் சுவைகளை விரும்புவர். அடக்கத்துடன் நடந்துகொள்ளும் இவர்கள் அனைவருக்கும் பிடித்தவர்கள். விண்வெளி போன்று பரந்த மனப்பாங்கு உடையவர்கள். எந்த ஒரு தீய செயலுக்கும் பழக்கப்படாமல் இருப்பதற்குத் தன்னைப் பழக்கப்படுத்திக் கொண்டால் இவர்களை வையகம் போற்றும்.

# இன்றைய புதுமைப் பெண்கள்



அடுப்பு ஊதும் பெண்ணுக்குப் படிப்பு எதற்கு என்ற காலம் மலையேறிப் போய், இன்று பெண்கள் கல்வித் துறை யில் ஆண்களை மிஞ்சிவிட்டனர். பழைய காலங்களில் வீட்டுக்கு வெளியே வந்தாலே அதிசயமாகப் பார்க்கப்பட்ட பெண்கள், இன்று விண்வெளிப் பயணம் வரை செல்லுமளவுக்கு முன்னேற்றம் அடைந்துள்ளனர்.

ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் வெளியே சென்று வேலை செய்வதால் வீட்டு வேலைகளில் பெண்களுடன் சேர்ந்து ஆண்களும் பங்கெடுக்க வேண்டும். எவ்வளவுதான் கல்வியில் முன்னேறி விட்டாலும் அமெரிக்கா உள்ளிட்ட பொருளாதாரத்தில் செழிப்பான நிலையிலுள்ள நாடுகளில் பணியாற்றினாலும், ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு வரதட்சணை கேட்டுக் கொடுமைகளை நிகழ்த்தும் வக்கிர புத்தியுள்ளவர்களின் கொடூரங்களிலிருந்து பெண்ணினத்தைக் காப்பாற்ற என்ன வழி?

சமுதாயத்தில் சம அந்தஸ்து எனக் கருதப்படக் கூடிய வேலை வாய்ப்புக்களில் பெண்களின் பங்கு கணிசமாக இருந்தாலும் வேலை செய்யும் இடத்திலும் அதற்கு வெளியேயும் பெண்களுக்கு இழைக்கப்படும் தொல்லைகளிலிருந்து பெண்ணினம் விடுபட என்ன தீர்வு உள்ளது?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் விடையைத் தேடாமல் வெறும் கோஷங்களுடன் முன்னேற்றம் என மார்தட்டிக் கொள்வதில் எந்தவிதப் பயனுமில்லை என்று தான் சொல்ல வேண்டும். நாம் வாழக் கூடிய காலச் சூழ்நிலையில் நம்முடைய சமுதாயப் பெண்களுக்கும் நிறையவே பொறுப்பு இருக்கிறது.

இன்றைய பெண்மணிகள் சமுதாயத்தின் கல்வி நிலையை மேம்படுத்த எல்லாவித முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். இத்துயர நிலையிலிருந்து சமுதாயம் விடுபட பெண்களின் பங்கு மிகவும் அவசியமானது. இன்னும் சில பெண்கள் பெற்றதை விட இழந்தது அதிகம். சுயமாய் காலில் நின்று, சுய தொழில் செய்து, கால் கடுத்துப்போனது தான் மிச்சம்.



சிலர் இழந்த இன்பங்களையும், தொலைத்த சந்தோஷங் களையும் தேடிக்கொண்டுதான் இருக்கிறார்கள். கணவனுக்கு அடிமையாய் இருந்த காலம் போய் கணினிகளுக்கு அடிமைகளான அவலம் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. சில காலங்கள் கழித்து பார்த்தால் தற்போது பெண்களுக்கு கிடைக்கும் கொஞ்ச நஞ்ச மரியாதையும் மிச்ச மிருக்குமா? என்பது ஏட்டில் எழுதப்படாத நிதர்சனம்.

## கர்ப்ப காலத்தில் செய்யக் கூடாதவை

கர்ப்பகாலத்தின் முதல் மூன்று மாதங்களில், பெண்கள் தங்களைக் கவனமாகப் பார்த்துக் கொள்வது முக்கியம். ஏனெனில் இந்த நேரத்தில் தான் கருச்சிதைவுக்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளது. அதுமட்டுமன்றி கர்ப்பிணிகள், முதல் மூன்று மாதங்களில் அதிகபட்ச ஓய்வு எடுக்க வேண்டும். கர்ப்பத்தின் போது பெண்களின் உடல் பல மாற்றங்களுக்கு உள்ளா கிறது என்பதால், அவை மிக கடினமான மாதங்கள் ஆகின்றன. கர்ப்பிணிகளுக்கு ஆரோக்கியமான உணவுப் பழக்கம் இருக்க வேண்டியது மிகவும் முக்கியம். அதிலும் உட்கொள்ளும் சரியான ஊட்டச்சத்தும் மிகவும் முக்கியம். ஏனெனில் கர்ப்பமாக இருக்கும் பெண் என்ன சாப்பிடுகிறாளோ அதுதான் குழந்தைக்கும் செல்லும். கர்ப்ப காலத்தில் தினமும் உடற்பயிற்சி செய்வதால் பல நன்மைகள் உள்ளன. அதுவும் முதல் மூன்று மாதங்களில் தொடர்ச்சியாக உடற்பயிற்சி செய்வது, கருச்சிதைவு ஏற்படும் வாய்ப்புகளைக் குறைக்கிறது. மேலும், கர்ப்ப காலத்தில் ஒரு பெண்ணின் நிறை அதிகரிப்பதைக் கட்டுப்பாட்டில் வைக்கிறது.

கர்ப்பிணிப் பெண் புகைப்பதோ அல்லது மது அருந்துவதோ கூடாது. இந்த இரண்டும் குழந்தைக்கு மிகவும் ஆபத்தானவை: ஒரு கர்ப்பிணிப் பெண் உட்கொள்ளும் மது குழந்தைக்குச் செல்கிறது. அது குழந்தைக்கு கடுமையான சேதம் விளைவிக்கும். குறிப்பாக இதனால் குழந்தைக்குப் பிறப்பிலேயே குறைபாடுகள் ஏற்படலாம். கர்ப்பிணிகள் புகைப்பிடிப்பவர்கள் அருகில் இருக்கக்கூடாது. அந்தப் புகை கூட உங்களையும், வயிற்றில் இருக்கும் குழந்தையையும் பாதிக்கும் ஆபத்து உள்ளது. ஆகவே நன்கு விழிப்புடன் இருக்க வேண்டும். கர்ப்பிணிகளுக்கு குமட்டல், வாந்தி, சோர்வு போன்றவை இருப்பது இயற்கை. இதற்காக மருந்துகளை எடுத்துக் கொள்ள கூடாது. அதற்கு பதிலாக இயற்கையாகத் தீர்வு பெற முயற்சிக்க வேண்டும். அதிக நீர் உட் கொள்வது முக்கியம். தினமும் குறைந்தது ஆறு முதல் எட்டு டம்ளர் தண்ணீர் குடிக்க வேண்டும்.

# தோட்டக்காரனும் குரங்கும்



ஒரு தோட்டத்தில் ஏராளமான குரங்குகள் இருந்தன.

பல வருடங்கள் அங்கேயே இருந்ததால் தோட்டக்காரனுக்கும் நண்பர்களாகி விட்டன. தோட்டக்காரன் செய்யும் காரியங் களைப் பார்த்துப் பார்த்து குரங்குகளும் அவற்றைச் செய்து விளையாடும்.

ஒருமுறை தோட்டக்காரன் பக்கத்து ஊருக்குப் போக வேண்டியிருந்தது. குரங்குகளைச் அழைத்து விடயத் தைக் கூறினான். குரங்குகளுக்குசந்தோஷம். ஆனால், அவற் றுக்கு ஒரு பிரச்சினை இருந்தது. எந்தச் செடிக்கு எவ்வளவு தண்ணீர் ஊற்றுவது என்று தெரியவில்லை. அது ஒன்றும் பெரிய பிரச்சினையில்லை. வேர் பெரிதாக இருந்தால் அதிகளவு தண்ணீர் ஊற்றுங்கள், சின்ன வேராக இருந்தால் கொஞ்சமாக ஊற்றுங்கள் என்று குரங்குகளுக்கு தோட்டக்காரன் யோசனை சொன்னான்.

வெளியூர் சென்று திரும்பி வந்து தோட்டத்தைப் பார்த்த தோட்டக்காரனுக்கு அதிர்ச்சி. அத்தனை செடிகளும் பிடுங்கப்பட்டுக் காய்ந்து கிடந்தன. என்னாச்சு? என்றான் தோட்டக்காரன். வேர் பெரிதாக இருக்கிறதா? சின்னதாக இருக்கிறதா? எனப் பார்ப்பதற்கு செடியெல்லாவற்றையும் பிடுங்கினோம் என்றன குரங்குகள். தோட்டக்காரன் பதில் எதுவும் சொல்லாமல் மௌனமானான்.

# வர்ணம் தீட்டலாம் வாங்க





# அணில்ப் பாடல்



அழகு மிக்க பிள்ளையே
அங்கும் இங்கும் ஓடியே
பழங்கள் தேடிப் பிடிக்கிறாய்
பையப் பையக் கொறிக்கிறாய்

வளைந்து வாலைத் தூக்குவாய்
மரத்தின் உச்சி ஏறுவாய்
கிளைகள் தோறும் தாவுவாய்
கெடுதி ஏதும் செய்திடாய்

மூன்று கோடு முதுகிலே
முன்பு ராமர் தந்ததோ?
நான்கு முகத்துப் பிரமனால்
நன்கு படைக்கப்பட்டதோ?

கேட்ட கேள்வி கேட்டதும்
கீச்சுக் கீச்சுக் என்கிறாய்
ஓட்டம் பிடிக்கப் பார்க்கிறாய்
ஒளிந்து கொள்ள நினைக்கிறாய்

பிள்ளைஎன்றே உன்னை நான்
பிரியமாக அழைக்கிறேன்
கிள்ளிக் கிள்ளிப் பழங்களைக்
கீழே எனக்கும் போடுவாய்.

*பா.தாட்சாயினி,*
*யா/கொக்குவில் இந்து கல்லூரி.*

## இளவல்கள் வட்டம்



# வாழ்க்கையில் வெற்றி பெற ...

- எந்த விடயத்தையும் இலவசமாகப் பெறாதீர்கள். விலை கொடுக்கும்போது தான் உங்களுக்குத் தேவையான தரத்தை நீங்கள் நிர்ணயிக்கிறீர்கள்.

- வாழ்வில் எல்லா அம்சங்களுமே உங்களுக்கு வாய்ப்பாக அமைந்துவிடாது. போராடவும், புதிய வழிகளை உருவாக்கவும் எப்போதும் தயாராக இருங்கள்.

- புதிய யோசனைகளை உருவாக்குங்கள். அவற்றை உங்களுடன் இருப்பவர்களுக்கும் புரியும் விதமாக எடுத்துச் சொல்லுங்கள். ஆதாயம் என்பது பணம், மனிதர்கள், புதிய உத்திகள் ஆகிய அம்சங்களை உள்ளடக்கியது என்பதை மறவாதீர்கள்.

- காரணங்கள் சொல்லிப் பழகிவிட்டால் உங்கள் எல்லாத் தவறுகளுக்கும் நியாயம் கற்பிக்கத் தொடங்குவீர்கள். இது தர்க்கரீதியாக உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்வது ஆகும். தவறுகளை ஒப்புக்கொண்டு திருத்திக் கொள்ளுங்கள்.

- உங்கள் லட்சியங்களை உயிராக மதியுங்கள். அவற்றை எட்டுவதற்கான எல்லாப் போராட்டங்களையும் உற்சாகமாக எதிர்கொள்ளுங்கள். சோம்பலாலோ, சலிப்பாலோ, அவ நம்பிக்கையாலோ சற்றும் பின்வாங்காதீர்கள்.

- உங்களுடன் நெருங்கிப் பழகுபவர்கள், உங்களையும் அறியாமல் உங்கள் குணாதிசயங்களைப் விமர்சிக்கக்கூடும். எவரோடு பழகினாலும் எச்சரிக்கையோடு பழகுங்கள்.

- உங்களின் குறைகளை மற்றவர்கள் மறக்கச் செய்வது, உங்களின் உற்சாகம் தான். எனவே உங்களின் உற்சாகம் ஒரு போதும் குறையாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

- ஊட்டச்சத்து மிக்க உணவு, உடற்பயிற்சி, ஓய்வு இவை மூன்றும் உங்கள் ஆரோக்கியத்துக்கான அடித்தளங்கள். அதனால் உணவு விடயத்தில் அலட்சியமாக இருந்துவிடாதீர்கள்.

- போதிய நிதி ஆதாரங்களோ, செயல்திறனோ, சந்தைப்படுத்தும் சக்தியோ இல்லாமல் எந்தப் வியாபாரத்தையும் புதிதாகத் தொடங்காதீர்கள்.

- உங்கள் தொழிலில் ஏதாவது ஒரு அம்சத் துக்காக எவரையாவது சார்ந்திருக்கிறீர்கள் என்றால், நீங்கள் ஏமாரத் தயாராகி விட்டதாக அர்த்தம். அதனால் எந்தத் துறையில் இருக்கிறீர்களோ, அதில் எல்லாவற்றையும் தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள்.

- உங்கள் பக்கம் நியாயம் இருக்கிறதென்றால் சற்றும் சமரசம் செய்து கொள்ளாதீர்கள். அச்சமில்லாமல் வாதாடுங்கள். உங்கள் உரிமையை நிலை நாட்டப் போராடுங்கள்.

- எதையும் நீண்ட காலக் கண்ணோட்டத்தோடு பாருங்கள். காலப்போக்கில் சில விடயங்கள் ஒத்துவராது என்று தோன்றினால் ஆரம்பத்திலேயே அதனைத் தவிர்த்து விடுங்கள்.

- நிர்ப்பந்தங்களுக்கு ஆட்பட்டோ, சபலங்களுக்கு உட்பட்டோ முதலீடு செய்யாதீர்கள். முழுமையாக ஆராய்ந்த பின்னர் எடுக்கும் முடிவுகள் தான் உங்களைக் காப்பாற்றும்.

- உங்கள் போட்டியாளரால் நினைத்துப் பார்க்க முடியாத எல்லைகளில் செயல்படுங்கள். போட்டி என்று வரும்போது போர்க்குணமும், விடாமுயற்சியும் வெளிப்படும் விதமாகக் கிளர்ந்தெழுங்கள்.

- உங்களைப் பற்றிய முதல் அபிப்பிராயத்தை ஏற்படுத்த இரண்டாவது வாய்ப்பு ஏற்படாது. முதல் வாய்ப்பிலேயே முழு வீச்சில் இயங்குங்கள்.

- தரமான மனிதர்களோடு, பரஸ்பர நம்பிக்கையுடன் இணைந்து செயல்படும் போது நீண்ட கால வெற்றி நிச்சயமாகச் சாத்தியமாகும்.

- உங்கள் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட விடயங்கள் பற்றி அதிகம் கவலைப்படாதீர்கள். நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று எடுத்துக் கொள்ளுங்கள்.

(தொடரும்)



# தொண்டமான் யார் பக்கம்? மைத்திரியா? மஹிந்தவா?

*கேள்வி எழுப்புகிறார் ரணில்*

கொழும்பு, ஓக.3
ஆறுமுகன் தொண்டமான, தான் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன வின் பக்கமா அல்லது மஹிந்த ராஜபக்ஷவின் பக்கமா என்பதை மக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதியுடன் யார் வேண்டுமானாலும் தேநீர் அருந்தலாம். அதற்குத் தடை இல்லை. தேநீர் அருந்துபவர்கள் சொல்வதெல்லாம் உண்மையாகாது. சம்பளப் பேச்சு தொடர்பாக ஒருசிலர் கூறுகின்ற கருத்துகளை பெருந்தோட்ட மக் கள் கணக்கெடுக்கவேண்டிய அவசியமில்லை – எனவும் பிரதமர் குறிப்பிட்டார்.

தலவாக்கலையில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில், தேர்தலின் பின்பு பெருந் தோட்டக் கம்பனி களுடன் பேச்சு நடத்தி தொழிலாளர் களுக்கு சாதாரண சம்பளத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு புதிய அரசு நடவடிக்கை எடுக்கும்.

இந்தப் பேச்சுகளில் தோட்டக் கம்பனிகளுடன் எம்முடன் இணைந்திருக்கும் தொழிற் சங்கங்களையும், மலையகத்தில் பிரதிநிதித்துவப் படுத்தும் அனைத்து தொழிற்சங்கங்களையும் ஒன்றிணைத்து முன்னெடுக்கப்படும்.

மலையகத்தைப் பொறுத்த மட்டில் நுவரெலியாவை ஓர் உல்லாச மையமாக மாற்று வதற்கும் இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பு ஏற்படுத்துவதற்கும், பண்ணைத் தொழிலாளர்களுக்குப் புதிய தொழில் வாய்ப்பை ஏற்படுத்து வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசு எந்தெந்தக் காலத்தில் எல்லாம் ஆட்சி செய்ததோ அந்தக் காலத்தில் எல்லாம் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நலன்சார்ந்த விடயங்களையும் கருத்திற் கொண்டு செயற்பட்டுள்ளது. எனவே, இந்தத் தேர்தலில் மலையக மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியையும் அதனுடைய வேட்பாளர்களையும் வெற்றியடையச் செய்வதற்கு அனைத்து வழிகளையும் மேற்கொள்ள வேண்டும் – என்றார். (ற–சி)

# ஐ.ம.சு.முன்னணி தோல்வியடையும்

*இப்படிக் கூறுகின்றார் ராஜித*

கொழும்பு, ஓக.3
நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் மஹிந்த தலைமையில் செயற்பட்டு வரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி படுதோல்வியடையும் என அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் உடனான சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி படுதோல்வி அடையும்.

கட்சியால் ஒரு கொள்கைக்கு ஏற்பட செயற்பட முடியவில்லை என்றால் கட்சிக்காரர்களுக்கு கட்சி குறித்து தெளிவில்லை என அர்த்தப்படும்.

எனவே நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் மஹிந்த தலைமையில் செயற்பட்டு வரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி படுதோல்வியடையும் என்பது நிதர்சனமான உண்மை.– என்றார்.

இதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி எதிர்ப்புத் தெரிவித்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (ற)

# மஹிந்தவின் பாதுகாப்பை பலப்படுத்துமாறு கோரிக்கை

கொழும்பு, ஓக.3
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கோரிக்கை விடுத் துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் உடனான சந்திப்பின் போதே முன்னாள் அமைச்சர் டிலான் பெரேரா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

மஹிந்த ராஜபக்ஷவின் குருணாகல் தேர்தல் அலுவலகத்துக்குள் சந்தேகத்திற்கிடமான நபர் சென்றிருந்த சம்பவத்தை சிறிய சம்பவமாக எடுத்துக் கொள்ள முடியாது. முன்னாள் ஜனாதிபதியின் அலுவலகத்திற்கு சென்றவர்களின் அடையாளங்கள் குறித்து விசாரித்த போது, ஒருவர் தப்பிச் சென்றிருந்தார். சில தினங்களாக அந்த நபர் குறித்த அலுவலகத்திற்குள் வந்து சென்றதாகவும் தகவல் உள்ளது.

குருணாகல் மாவட்டத்தில் போட்டியிடும் எம்.கே. சிவாஜிலிங்கம், பிரபாகரனின் இறுதி ஆசையை நிறைவேற்றவே தான் குருணாகல் மாவட்டத்திற்கு வந்ததாக கூறியிருந்தார். இவை அனைத்தையும் நோக்கும் போது, மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு குறித்து மீண்டும் சிந்திக்க வேண்டியேற்பட்டுள்ளது. அந்த சம்பவத்தை சிறிய சம்பவ்மாக எடுத்துக் கொள்ள முடியாது எனவே அவரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட வேண்டும். – என்றார். (ற)

# பரப்புரைக் கூட்டங்களுக்கான பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது

கொழும்பு, ஓக.3
நடைபெறவுள்ள பொதுத்தேர்தலை முன்னிட்டு கொழும்பு மாவட்டத்தில் இடம்பெறும் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களுக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸ் மா அதிபர் என்.கே. இளங்கக்கோனின் உத்தரவிற்கு அமையவே இவ்வாறு பாதுகாப்பு அதிகரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரும், நிதி அமைச்சருமான ரவி கருணாநாயக்கவின் ஆதரவாளர்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தினைத் தொடர்ந்து இந்த விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்களின் பாதுகாப்புக் குறித்து உரிய கவனம் செலுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் வேட்பாளர்களுக்குரிய மேலதிக பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து கொள்ளுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார். (ற)

பாராளுமன்றத் தேர்தல் - 2015

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாபெரும் தேர்தல் பிரசாரக் கூட்டம்

இடம் : யாழ். பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரிக்கு அருகில் அமைந்துள்ள பாரத்தனை ஐயனார் ஆலய முன்றில்
காலம் : 04.08.2015 செவ்வாய்க்கிழமை
நேரம் : மாலை 6.00 மணி

தலைவர்
வி.சுப்பிரமணியம்
(தலைவர், பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்)

பிரதம பேச்சாளர்கள்

மாவை சோ.சேனாதிராசா (முதன்மை வேட்பாளர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)
ந.ஸ்ரீகாந்தா (பிரபல சட்டத்தரணி,முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)
சுரேஸ் பிரேமச்சந்திரன் (ஊடக பேச்சாளர், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)
த.சித்தார்த்தன் (மாகாணசபை உறுப்பினர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)
சி.சிறிதரன் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)
ம.ஆ.சுமந்திரன் (பிரபல சட்டத்தரணி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)
ஈ.சரவணபவன் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)
க.அருந்தவபாலன் (அதிபர், ஸ்கந்தா கல்லூரி)
ந.அனந்தராஜ் (முன்னாள் தவிசாளர், நகரசபை, வல்வெட்டித்துறை)
திருமதி மதினி நெல்சன் (முன்னாள் நகரசபை உறுப்பினர்,வல்வெட்டித்துறை)
பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் (முதல்நிலை தேசிய பட்டியல் வேட்பாளர், தமிழ்த்தேசிய கூட்டமைப்பு))

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

X

ஏற்பாட்டாளர்கள்
பிரான்பற்று கிராம அபிவிருத்திச் சங்கம்,
பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச் சங்கம்,
வடலியடைப்பு மக்கள்.

பாராளுமன்றத் தேர்தல் - 2015


அ. அமிர்தலிங்கம்


ஜி.ஜி. பொன்னம்பலம்


தந்தை செல்வா


சௌ. தொண்டமான்


மு. சிவசிதம்பரம்

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்

X

தமிழர் விடுதலைக் கூட்டணியை

உருவாக்கிய உத்தமர்களான இவர்களின் இலட்சியப் பாதையில் இளைப்பாறிய நீதிபதி விக்னராசாவின் விலை போகாத தலைமையின் கீழ் தமிழர் விடுதலைக் கூட்டணி யின் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்க வாரீர்


முதன்மை வேட்பாளர்
இ.த. விக்னராசா
(ஓய்வுநிலை மேல் நீதிமன்ற நீதிபதி)

1

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

### செல்லையா சச்சிதானந்தன்

(அண்ணா தாசன்-ஓய்வு பெற்ற கிராம அலுவலர்)



18.07.2015 இப் பூவுலக வாழ்வை நீத்த எமது குடும்பத் தலைவர் அமரர் செல்லையா சச்சிதானந்தன் அவர்களின் மரணச் செய்தி கேட்டு இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசியில் ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் 04.08.2015 அன்று மு.ப 11 மணியளவில் தியாகி அறக்கொடை நிறுவனத்தில் (TCT) நடைபெற இருப்பதால் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கலந்து கொள்ளுமாறு மிக அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

107, நாயன்மார் வீதி,
நல்லூர். (63774) குடும்பத்தினர்.


# தேர்தல் வன்முறைகள் மேலும் அதிகரிக்கும்

## கண்காணிப்பாளர்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 3

தேர்தல் விதிமுறைகளை மீறும் நடவடிக்கைகள் கடந்த வாரம் பல மடங்காக அதிகரித்துள்ளதை தொடர்ந்து மேலும் வன்முறைகள் இடம்பெறலாம் என தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் எச்சரித்துள்ளன.

தேர்தல் வன்முறைகள் தொடர்பாக 301 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள பொலிஸார் இவர்களில் 151 பேர் இந்தவாரமே கைதுசெய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த நான்கு நாள்களில் தேர்தல் வன்முறைகள் தொடர்பான பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபே தெரிவித்துள்ளது.இதில்கொழும்பிலேயே அதிகளவு முறைப் பாடுகள் கிடைத்துள்ளன. 767 முறைப்பாடுகளில் 131 கொழும்பி லிருந்தே கிடைத்துள்ளது என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

எனினும் தற்போதைய நிலை கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு தீவிரமடையும் என தாங்கள் கருதவில்லை என அந்த அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார். நிலைமையை சமாளிப்பதற்கு தேர்தல் சட்ட ஒழுங்கு அதிகாரிகள் தயாராக உள்ளனர் என கருதுகின்றோம் –என்றார் .

இதேவேளை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வரை 804 சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக கபே தெரிவித்துள்ளது.இதில் 750 சம்பவங்கள் தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பானவை ஏனையவை தேர்தல் வன்முறைகள் குறித்தவை.கொழும்பு, குருநாகல்,கம்பஹா , அம்பாறை,புத்தளம் ஆகிய இடங்களிலேயே தீவிர வன்முறைகள் இடம்பெற்றுள்ளதாக கபே குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை கொழும்பு மற்றும் குருநாகல் பகுதிகளிலேயே அதிகளவான வன்முறைகள் இடம்பெற்றுள்ளதாக மற்றுமொரு தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் தெரிவித்துள்ளது.கொழும்பில் 72 சம்பவங்களும் குருநாகலில் 57 சம்பவங்களும் இடம்பெற்றுள்ளதாக அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

தேர்தல் வன்முறைகள் காரணமாக இதுவரை 28 பேர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# இனவாதம் பேசி வாக்குகள் திரட்டும் நடவடிக்கையில் தமிழ் கூட்டமைப்பு

## சாடுகின்றது ஜே.வி.பி.

"தமிழ் மக்களிடம் இனவாதம் பேசி வாக்கு திரட்டும் நடவடிக்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இறங்கியுள்ளது" – என்று ஜேவிபியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஜே.வி.பியின் செய்தியாளர் மாநாடு நேற்று முற்பகல் அக்கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. இதன் போது கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்படி குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இது பற்றி அவர் மேலும் கூறியவை வருமாறு:

நாட்டில் பிரச்சினைகளைத் தோற்றுவிப்பதற்காக சில குழுக்கள் இனவாதத்தைக் கையிலெடுக்கின்றன. அந்த வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது வேலைத் திட்டத்தில் அதிகாரப்பரவலாக்கல் பற்றிப் பேசுகிறது. இந்த விடயமானது தெற்கிலுள்ள இனவாதிகளுக்குசிறந்த பரப்புரை ஆயுதமாக இருக்கிறது. கூட்டமைப்பின் இந்தத் திட்டத்தால் இனவாதம் பரப்பும் மஹிந்த தரப்பே நன்மையடையவுள்ளது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை அரசு தீர்ப்பதில்லை என்று கடந்த காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடும் விமர்சனங்களை முன்வைத்து வந்தது. இன்று 'வட மாகாண சபை அவர்களின் ஆளுகையின்கீழ் உள்ளது. இதனூடாகவும் தங்களது மக்களுக்கு கூட்டமைப் பால் எதையும் செய்யமுடியாமல் போனது. இதனால் மக்களைக் கவர்வதற்காக தற்போது அதிகாரப்பரவலாக்கல் பற்றி பேசுகின்றனர். இனவாதத்தைப் பரப்புகின்றனர். அரசியல் மேடைகளில் பேசுவதற்கு எந்தவொரு விடயமும் இல்லாதிருந்த விமல், மஹிந்த ஆகியோருக்கு கூட்டமைப்பு பேசுவதற்குரிய விடயத்தை எடுத்துக் கொடுத் துள்ளது" – என்றார்.(ற–சி)

# தெஹிவளை முஸ்லிம் மயானத்துக்கு பாதுகாப்பு

கொழும்பு, ஓக. 3

பற்களையும் விலா எலும்பையும் உடைத்துக் கடும் சித்திரவதைகளுக்குள்ளாக்கி படுகொலை செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படும் பிரபல றகர் விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீனின் உடல் அடக்கம் செய்யப்பட்டுள்ள தெகிவளை முஸ்லிம் மயானத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

தாஜுதீன் 2012ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆம் திகதி கொலை செய்யப்பட்டார். அவர் வாகன விபத்தில் இறந்ததாக பொலிஸார் அப்போது கூறியிருந்தனர்.

இந்தக் கொலையுடன் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வர் யோஷித்த ராஜபக்ஷ வுக்குத் தொடர்பிருப்பதாகவும் பேசப்பட்டது.

அதையடுத்தே சடலம் அடக்கம் செய்யப்பட்டுள்ள இடத்திற்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.(ற)


## மரண அறிவித்தல்கள்

### அருட்தந்தை J.P.E.செல்வராஜா



அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட யாழ் மறைமாவட்ட முன்னாள் குருமுதல்வர் அருட்தந்தை J.P.E.செல்வராஜா அடிகளார் 01.08.2015 சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அடிகளார் காலஞ்சென்றவர்களான யோசப் பொன்னையா ஞானாபரணம் முத்தம்மா தம்பதியரின் அன்பு மகனும் அருட் சகோ.ஜெரோம் AC(முன்னாள் யாழ் புனித ஜோன் பொஸ்கோ பாடசாலை அதிபர்), நவமணி(கனடா), ஆன்சபீனா(கனடா), காலஞ்சென்றவர்களான அன்ரன் ஜெயராஜா, மேரி அக்னஸ், சிங்கராஜா், ரெஜினா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் பிலமினா (கொழும்பு) காலஞ்சென்றவர்களான பெனடிக்ற், நல்லம்மா, மோத்தா, எட்மன் பொன்னையா, பிலிப்பு நவரட்ணம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அடிகளாரின் பூதவுடல் யாழ் ஆயர் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 04.08.2015 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ் மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அருட்பணியாளர்,துறவியர் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :-
SR.ஜெரோம் AC (சகோதரி)
MRS.பிலமினா ஜெயராயா(மைத்துனி)
021 222 5872
(63771)

### J.P.E. செல்வராஜா அடிகளார்



யாழ்ப்பாண மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை J.P.E செல்வராஜா அடிகளார் 01.08. 2015 சனிக்கிழமை இறைபதமடைந்தா ர்.

அடிகளாரின் இறுதி அடக்கத் திருப்பலி நாளை (04.08.2015) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.ஆயர் தலைமை யில் புனித மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் நல்லடக்கத் துக்காக புனித மரியன்னை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அருட்தந்தையர்கள், துறவியர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள், இறைமக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம். (c 11934)
தகவல் :-
குரு முதல்வர்
அருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம்.


# கொழும்பில் சிறுநீரக மாற்றம்: இந்தியாவில் 5 பேர் கைது

கொழும்பு, ஓக.3

கொழும்பு மருத்துவமனை ஒன்றில் சட்டவிரோதமான சிறுநீரக மாற்றம் தொடர்பாக ஒரு பெண் உட்பட ஒரே குடும்பத்தை சேர்ந்த ஐவர் இந்தியாவில் கைது செய்யப்படுள்ளனர்.

இது தொடர்பில் தெரிவிப்பதாவது:–

குறித்த குடும்பத்தை சேர்ந்த ஒருவரின் சிறுநீரக தேவைக்காக 20 வயதுள்ள காணு எனும் இளைஞரின் சிறுநீரகம் இந்திய ரூபாய் 3.5 லட்சத்துக்கு விற்கப்பட்டுள்ளது என்று கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் ஜூலை மாதம் விசாரணை ஆரம்பிக்கப்பட்டது என்று இந்தியாவின் புலன் விசாரணை பிரிவு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து இந்திய குற்றப் பிரிவு அதிகாரி பி.கே.சர்மா தெரிவித்துள்ளதாவது:–

காணுவின் சிறுநீரகம் குற்றம் சுமத்தப்பட பட்னாயக்கவுக்கு இடம் மற்றப்பட்டுள்ளது.சிறுநீரகம் பெறுபவரின் மனைவியும் , அவரின் சகோதரரும் இந்த சட்ட விரோத சிறுநீரக இடமாற்றத்துக்கு உடந்தையாவர்.

காணு, பட்னாயக்கவின் தாயாரின் வளர்ப்பு மகன் எனும் போலி ஆவணங்களும், காணுவிற்கான நுழைவிசைவுக்காக போலி ஆவணங்களும் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் மனித உறுப்பு மாற்றத்துக்கு எதிராக கடுமையான சட்டங்கள் கடைப்பிடிக்கின்றமையால் இந்தியாவுக்கு வெளியே சிறுநீரக அறுவை சிகிச்சை நடத்த தீர்மானித்து இலங்கையில் நடத்த திட்டமிட்டுள்ளனர். இலங்கை சட்டங்களின் அடிப்படையில் இதுகுறித்து விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன.

சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்கு கொழும்பை ஏன் தேர்ந்தெடுத்தார்கள் என்பது தொடர்பாக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

குற்றவாளிகள் கைது செய்யப்பட்ட உடன் அவர்களின் சுகாதார அடிப்படையில் பிணை வழங்கப்பட்டது. குற்றவாளிகளின் போலி ஆவண உருவாக்கத்துக்கு துணைபோன அரச உத்தியோகத்தர்கள் தொடர்பிலும் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.– என்றார். (ற–5)


## மரண அறிவித்தல்

### துரைராசா கிருஷ்ணகோபால்



மண்ணில் 21.02.1952
விண்ணில் 02.08.2015

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் மேற்கு சிவகுல வீதியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட துரைராசா கிருஷ்ணகோபால் 02.08.2015 ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
(63773)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# கௌரவமாக ஒதுங்குவதற்கு வாய்ப்புக் கேட்கும் மஹிந்த

### அதற்கும் அசைந்து கொடுக்காத மைத்திரி

கொழும்பு, ஓக.3
மஹிந்த ராஜபக்ஷ தரப்பினர் கோரிய மூத்த அரசுத் தலைவர் பதவியை வழங்குவதற்கு ஜனாதிபதி மைத்திரி மறுத்துள்ளார். இந்த நிலையில், சிறிது காலத்துக்கு பிரதமராக பதவியிலிருப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுக்கு அனுமதி வழங்க வேண்டும் எனவும், அதன் பின்னர் அவர் கௌரவமாக அரசியலிலிருந்துவெளியேறி விடுவார் எனவும், மைத்திரிபாலவிடம் மீளவும் மஹிந்த தரப்பினர் கோரிக்கை முன்வைத்துள்ளதாக, கொழும்பு சிங்கள வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.
மஹிந்த தரப்பினர் சார்பில் இந்தக் கோரிக்கையை, கோத்தபாய ராஜபக்ஷவே முன்வைத்துள்ளதாக குறித்த சிங்கள வார இதழ் ராஜபக்ஷ குடும்பத்தினரை மேற்கோள் காட்டி செய்தி வெளியிட்டுள்ளது.
குறைந்தபட்சம் ஆசன பெரும்பான்மையுடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெற்றால், மஹிந்த ராஜபக்ஷவுக்கு குறுகியகால அடிப்படையில், பிரதமர் பதவியை வழங்குமாறு மைத்திரிபால சிறிசேனவிடம் கோரப்பட்டுள்ளது. சில மாதங்கள் கழித்து மஹிந்த கௌரவமான முறையில் அரசியலில் இருந்து விலகிக் கொள்வார் என்றும், கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள்ளார்.
அவர் விரைவிலேயே அரசியலில் இருந்து ஒதுங்கி விடுவார் என்றும், பிரதமராக இருக்கும் குறுகிய காலத்தில் ஜனாதிபதிக்கு எந்த வகையிலும் குறுக்கீடோ, தொந்தரவோ செய்யமாட்டார் என்றும் கோத்தாபய ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.
அதேவேளை, மஹிந்த ராஜபக்ஷ தரப்பால், முன்வைக்கப்பட்ட மற்றொரு திட்டம் ஜனாதிபதியால் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின்படி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மூத்த அரசுத் தலைவர் என்ற பதவியை வழங்குவதற்கு யோசனை சமர்ப்பிக்கப் பட்டது.
மூத்த அரசுத் தலைவர் என்பது, பாதுகாப்பு முன்னுரிமை, அமைச்சரவை அந்தஸ்துடைய அமைச்சர் ஒருவருக்கு இருக்கும் அதிகாரங்கள், இராஜதந்திர விவகாரங்களில் ஒரு அரசுத் தலைவருக்குள்ள சலுகைகளைக் கொண்டதாக இருக்கும்.
இவ்வாறு மூத்த அரசுத் தலைவர் என்ற பதவியை உலகில் இரண்டு நாடுகளின் தலைவர்கள் வகித்துள்ளனர். ஒருவர் மலேசியாவின் முன்னாள் பிரதமர் மகதீர் முகமத், மற்றவர், சிங்கப்பூரின் முன்னாள் பிரதமர் லி குவான் யூ.
மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமிக்கமாட்டேன் என்று, அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அறிவித்த பின்னரே, மூத்த அரசுத் தலைவராக நியமிக்கும் திட்டம் முன்வைக்கப்பட்டது. மஹிந்த ராஜபக்ஷ அமைச்சராக நியமிக்கப்படாவிட்டால், நாடாளுமன்றத்தில் பின்வரிசையில் அமர வேண்டிய நிலை அவருக்கு ஏற்படும். இது அவரது கௌரவத்துக்கு எதிர்மறையான பாதிப்பை ஏற் படுத்தும் என்றும் அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.(ற-5)

# வாக்கிடுவது தொடர்பான சுருக்க முறை விளக்கம்

எதிர்வரும் நடாளுமன்றத் தேர்தலில் வாக்கடையாளம் இடுவதும், விருப்பு வாக்குகளை அடையாளமிடுவதும் தொடர்பான சுருக்க முறையான விளக்கத்தை தேர்தல்கள் திணைக்களம்வெளியிட்டுள்ளது.
நாடாளுமன்றத் தேர்தலில் தான் விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் பெயருக்கும் சின்னத்துக்கும் முன்னால் அல்லது சுயேட்சைக் குழுவின் இலக்கத்துக்கும் சின்னத்துக்கும் முன்னால் புள்ளடியை (×) இட்டு வாக்குச் சீட்டை அடையாளமிடுதல் வேண்டும்.
அதன்பின்னர் அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினால் அல்லது சுயேட்சைக்குழுவினால்பெயர் குறித்துள்ள மூன்று வேட்பாளர்களை விஞ்சாத எண்ணிக்கையான வேட்பாளர்களுக்கு விருப்பு இலக்கம் குறிப்பிட்டுள்ள கூட்டினுள் உரிய இலக்கங்களின் மீது புள்ளடி (×) அடையாள மொன்றை இடுவதன் மூலம் தனது விருப்பு வாக்கை அடையாளமிட முடியும்.
வாக்கெண்ணும் போது நிராகரிக்கப்படும் வாக்குச் சீட்டுக்கள்,
எந்த வொரு அரசியற் கட்சிக்கும் அல்லது சுயேச்சைக் குழுவுக்கும் வாக்களிக்கப்படாத அல்லது, அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றுக்கு அதிக எண்ணிக்கையான கட்சிகளுக்கு வாக்கு அடையாள மிடப்பட்டிருப்பின் அல்லது,ஒன்றுக்குமேற்பட்ட சுயேச்சைக் குழுக்களுக்கு வாக்கு அடையாளமிடப்பட்டிருப்பின் அல்லது, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒன்றுக்கு அதிக எண்ணிக்கையான கட்சிகளுக்கு அல்லது சுயேச்சை குழுக்கள் ஒன்றுக்கு அதிக எண்ணிக்கையான குழுக்களுக்கு கலப்படமாக வாக்கு அடையாளமிடப்பட்டிருப் பின் அல்லது, வாக்காளரை இனங்கண்டு கொள்ள முடியுமான வித்த் தில் வாக்குச் சீட்டின் மீது ஏதேனும் எழுதப்பட்டிருப்பின் அல்லது வரையப்பட்டிருப்பின் அல்லது, வாக்கு அடையாளமிடப்பட்டிருப் பின் எந்தக் கட்சிக்கு/ சுயேச்சைக்கு குழுவுக்கு என்பதுசந்தேகத்துக்குஉரியதெனில், இவ்வாறான வாக்குச் சீட்டுக்கள் நிராகரிக்கப்படும்.
உரியவாறு வாக்கு அடையாளமிடப்படாத வாக்குச் சீட்டுக்கள், விரும்பு வாக்கு எண்ணப்படும் போது கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.
விரும்பு வாக்குகள் எண்ணும் போது செல்லுபடியற்ற வாக்கு சீட்டுக்கள்,எந்தவொரு வேட்பாளருக்கும் விரும்பு வாக்கு அடையாளமிடப் படாத அல்லது, மூன்று வேட்பாளர்களுக்கு அதிக எண்ணிக்கையானவர்களுக்கு விரும்பு வாக்குகள்அடையாளமிடப்பட்டிருப்பின்,வாக்கு அடையாளமிடப்பட்டிருப்பது எந்த வேட்பாளருக்கெனும் சந்தேகம் எழும் வாக்குச் சீட்டுக்கள் விரும்பு வாக்குகள் எண்ணப்படுவதற்கு செல்லுபடி அற்றவைகளாகும். (ற)

# மத்தள விமான நிலையம் நெல் களஞ்சியமாக மாறும்

### பிரதமர் ரணில் திட்டம்



கொழும்பு, ஓக. 3
நெல்லை களஞ்சியப்படுத்த இடம் போதாது போனால், மத்தள விமான நிலையத்தில் அவற்றை களஞ்சியப்படுத்த போவதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். ஹசலக பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.
மத்தள விமான நிலையத்திற்கு விமானங்கள் வரவில்லை என்றால், நெல்லை அங்கு களஞ்சியப் படுத்துவோம். நாங்கள் இந்த போகத்தில் ஒரு கிலோ நெல்லை 50 ரூபாவுக்கு கொள்வனவு செய்வோம். கிராமங்களுக்கு உதவ வேண்டும் என்பதே எனது தேவை. 60 மாதங்களில் புதிய நாட்டை உருவாக்க எதிர்ப்பார்த்துள்ளோம். பொருளாதாரத்தை முன்னேற்றவே நாட்டில் முதல் இடம் வழங்கப்படும். இந்த போகத்தில் ஒரு கிலோ நெல்லை 50 ரூபாவுக்கு கொள்வனவு செய்ய நிதி ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார். (ற)

# கொழும்பு-கண்டி அதிவேக நெடுஞ்சாலை அமைக்கும் பணி ஆரம்பம்

கொழும்பு, ஓக.3
கொழும்பு–கண்டி அதிவேக நெடுஞ்சாலை அமைக்கும் பணிகள் இன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.
குறித்த வீதியமைக்கும் பணியின் முதலாவது பிரிவான கடவத்தையிலிருந்து மீரிகம வரையிலான பாதையே ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாக, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் சமன் பண்டார தெரிவித்துள்ளார்.
இதன் இரண்டாம் கட்ட பணிகள் மீரிகமையிலிருந்து குருநாகல் வரையும், மூன்றாம் கட்ட பணியானது குருநாகலையிலிருந்து கண்டி வரையும் நடைபெறவுள்ளதாக அதிகார சபையின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.
அத்துடன், குருநாகலையிலிருந்து தம்புள்ள வரையான பாதையும் விரைவில் அமைக்கப்படுமென அவர் மேலும் தெரிவித்துள் ளார். (ற)

# நல்லாட்சியில் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது

### அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

கொழும்பு, ஓக.3
நல்லாட்சிக்கான அரசில் கடத்தல் சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லை. நாட்டின் தேசிய பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது என்று அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.
மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெற்றியடைந்த பின்னர் புலிகள் அமைப்பு அதிகாரத்திற்கு வரும் என்று பரவிய கருத்து இன்று போலியாகியுள்ளது. தமிழ் தேசிய கூட்டமைப்பு புலிகளுடன் செயற்படுவதாக குறிப்பிட்டார்கள். இன்று புலிகள் அமைப்புக்கு நெருக்கமானவர்கள் தனியாக தேர்தலில் போட்டியிட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.
நாங்கள் இருக்கும் இடத்தில் தீவிரவாதிகளுக்கு இடமில்லை. தமிழீழ விடுதலை புலிகள், வெள்ளை வான் தீவிரவாதம் என்ற எவ்வித தீவிரவாதத்துக்கும் இடமில்லை.
கடந்த 160 நாள்களுக்குள் ஒருவரும் கடத்திச் செல்லப்பட வில்லை. ஒருவரும் வெள்ளை வான் கலாசாரத்தில் கொலை செய்யப்படவில்லை. தேசிய பாது காப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.– என்றார்.(ற)

# நீரில் மூழ்கி இரட்டை சகோதரிகள் சாவு

கொழும்பு, ஓக.3
மத்துகம அகலவத்தை பிரதேசத்தில் ஆற்றில் குளிக்கச் சென்ற பெண்கள் இருவர் நீரிழ் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.
நேற்றுமுன்தினம் பிற்பகல் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இவ்வாறு உயிரிழந்த இருவரும் இரட்டைச் சகோதரிகள் எனவும் 23 வயதுடையவர்கள் எனவும் கூறப்படுகின்றது.
உயிரிழந்த யுவதிகளின் சடலங்கள் வெத்தேவ வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ற)

**விற்பனையாளர் தேவை**
நடமாடும் பாண் விற்பனை வானில் பாண் விற்பனை செய்வதற்கு வேலையாள் தேவை.
தொடர்பு:- 077 6747277

**SPOKEN ENGLISH**
6 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க பயில மாதக்கட்டணம் 500/= ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி. நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானை.
Tel:- 077 6751649

**சிறுநீரகம் தேவை**
24 வயதுடைய இளைஞனுக்கு O+ சிறுநீரகம் உடனடியாக தேவை. 50 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
தகுந்த சன்மானம் தரப்படும்
Tel: 075 2585918, 0777 004347

**கண்ணீர் அஞ்சலி**



யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியா லயத்தின் முன்னாள் அதிபர் அருட் சகோதரி M.ஜெறோம் அவர்களின் பாசமிகு சகோதரனும் எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியவருமாகிய அருட்தந்தை J.P.E செல்வராஜா அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அருட்சகோதரிக்கும் அவரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அவரின் ஆன்மா இறைவனில் சாந்திபெறப் பிரார்த்திகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
பெற்றோர்கள், பழையமாணவர்கள்.
யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

(C 11936)

**காணாமல் போனவர்களின் உறவுகளுக்கு அவசர அழைப்பு**

யாழ் மாவட்டம்,கிளிநொச்சி மாவட்ட காணாமல் போன வர்களின் விவரங்கள் புகைப் படத் துடன் அடங்கிய கோவை ஒன்றில் பதிவு மேற்கொள்ளப்படுகின்றது. ஆகவே எமது உறவுகளை வந்து
இடம்:- Green Grass Hotel
காலம்:- Tuesday (04.08.2015)
நேரம்:- 8.00 - 11.00 am
மேற்குறிப்பிட்ட இடத்தில் வந்து பதிவு செய்யுமாறு காணாமல் போனோர் சங்க தலைவி அறியத்தருகின்றார்.

K. ஸ்ரீகாந்தி

## ஐ.தே.கட்சி

சுன்னாகம் கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள யாழ்.மாவட்ட வேட்பாளர் அலுவலகம் மீதே இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை வாகனத்தில் வந்த சிலர், அலுவலகத்திற்கு சேதம் ஏற்படுத்தியதோடு, மின்குமிழ்கள் மற்றும் வேட்பாளரின் பதாதைகள் ஆகியவற்றை சிதைத்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் இதுவரை யாரும் கைதுசெய்யப்படவில்லையென தெரிவித்துள்ள சுன்னாகம் பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்ற னர். (ற-86)

## தீர்வுக்கு

குழுவை அமைத்திருந்தது. இன ஐக்கியத்தை ஏற்படுத்தும் விடயத் தில் வெற்றிப்பாதையில் பயணிப்பதற்கு இந்தப் பொறிமுறை பெரிதும் உதவியது.

இதைக் கருத்திற்கொண்டுதான் இலங்கையிலும் அத்தகையதொரு குழுவை அமைத்து இன ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி முயற்சிக்கிறது. இதனை உறுதிப்படுத்தும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வெள்ளியன்று முல்லைத் தீவில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கருத்து வெளியிட்டிருந்தார்.

"இன ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். தென்னாபிரிக்காவில் அமைக்கப்பட்டது போல் உண்மை நல்லிணக்க ஆணைக் குழுவொன்று தேர்தலின் பின் அமைக் கப்படும்" ? என்று அவர் அங்கு குறிப்பிட்டிருந்தார்.

பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி வெற்றிபெறும் பட்சத்தில், செப்ரெம்பர் மாத நடுப்பகுதியளவில் இது தொடர்பான செயற்றிட்டத்தை மேற்கொள்ள அக் கட்சி உத்தேசித்துள்ளது என அறிய முடிகிறது.

பொதுத்தேர்தலுக்கு பிறகு அமையவுள்ள புதிய நாடாளுமன்றத்தின் முதல்நாள் அமர்வு செப்ரெம்பர் முதலாம் திகதி நடைபெறவுள்ளது.

அதேபோல், பொறுப்புக் கூறலை வெளிப்படுத்து வதற்காகவும் உள்ளகப் பொறி முறையொன்றை சர்வதேச ஆலோசனைகளை உள்வாங்கி அமைப்பது பற்றியும் ஐக்கிய தேசியக் கட்சி பரிசீலித்துவருகிறது. இது தொடர்பான உறுதிமொழி தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன் வைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை மையப்படுத்தி உச்சபட்ச அதிகாரத்தை வழங்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாராக இருந்தாலும் வடக்கு, கிழக்கு இணைந்த சுயாட்சித் தீர்வை அது வழங்கத் தயாரில்லை. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசும் 13ஐ மையப்படுத்தியே நகர்வுகளை முன்னெடுக்கத் தயாராக இருக்கிறது.

அதேவேளை, மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியிலும் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கு தென்னாபிரிக்க பாணியில் உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவொன்றை அமைப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. இதற்காக தென்னாபிரிக்காவின் உப ஜனாதிபதி சிறில் சமபோஷ, பிரதி வெளிவிவகார அமைச் சர் ஆகியோர் இலங்கைக்குப் பயணங்களை மேற்கொண் டிருந்தனர்.

இலங்கை விவகாரத்தைக் கையாள்வதற்கான சிறப்புப் பிரதிநிதியாக சிறில் சமபோஷவை அந்நாட்டு ஜனாதிபதி நியமித்திருந்தார். எனினும், இது சர்வதேச தலையீடு எனச் சுட்டிக்காட்டி அதற்கு இலங்கையில் எதிர்ப்புகளும் வலுத்திருந்தது. (ற-சி),

## போர்க் குற்ற

ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் சமர்ப்பிப்பார்.

அந்த அறிக்கையில், போர் தொடர்பான சாட்சியங்கள், போர்க்குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களின் பெயர்கள் உள்ளிட்ட விடயங்கள் வெளிப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த மாதம் 30ஆம் திகதி, சமர்ப்பிக்கப்படும், ஐ.நா விசாரணை அறிக்கை தொடர்பாக அன்றைய கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற-ரி,5)

## 13ஐ தாண்டி

மைப்பு, தான் இனப்பிரச்சினை பற்றி பேசுகிறது.

அவர்கள் வடக்கு – கிழக்கை இணைத்து சுயாட்சி கோருகின்றனர். அதனை அனுமதிக்க முடியாது. 13க்கு அப்பால் எதையும் கொடுப்பதற்கு நாம் தயாராக இல்லை.

மாகாண சபைகளையும், உள்ளூராட்சி சபைகளையும் வலுப்படுத்துவதே, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் திட்டம். – என்றும் அவர் தெரிவித்தார். (ற-5)

## தேர்தலில் எந்தக்

தெரிவிக்கின்றன.

புலனாய்வு பிரிவினரால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளதாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் புலனாய்வு பிரிவினரால் ஒப்படைக்கப் பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

எந்தவொரு கட்சியும் பெரும்பான்மை ஆசனங் களைப் பெற்றுக் கொள் ளாது. மாவட்ட ரீதியில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கும் இடை யில் கடுமையான போட்டி நிலவும். எவ்வாறெனினும் ஐக்கிய தேசியக் கட்சி ஓரளவு முன்னணியில் உள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி மொத்தமாக 90 ஆசனங்களையும், தேசியப் பட்டியல் மூலம் 12 முதல் 14 வரையிலான ஆசனங்களையும் பெற்றுக் கொள்ளும். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 81 ஆசனங்களையும் தேசியப் பட்டியல் ஊடாக 10 முதல் 12 வரையிலான ஆசனங்களையும் பெற்றுக்கொள்ளும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 14 ஆசனங்களையும் தேசியப் பட்டியல் ஊடாக 2 முதல் 3 ஆசனங்களையும் பெற்றுக் கொள்ளும் மக்கள் விடுதலை முன்னணி 12 ஆசனங்களையும், தேசியப் பட்டியல் ஊடாக 2–3 ஆசனங்களையும் பெற்றுக்கொள்ளும் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் தலா ஒன்பது மாவட்டங்களையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நான்கு மாவட்டங்களையும் கைப்பற்றும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வெளிநாட்டு தூதரங்களினால் மேற்கொள்ளப்பட்ட விரிவான கருத்துக் கணிப்பின் அடிப்படையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 11 மாவட்டங்களிலும் ஐக்கிய தேசியக் கட்சி 8 மாவட் டங்களிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 3 மாவட்டங்களிலும் வெற்றியீட்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினால் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பின் போது 14 மாவட்டங்களில் தமது கட்சி வெற்றியீட்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எது எவ்வாறெனினும் எந்தவொரு அரசியல் கட்சியும் 113 ஆசனங்களைப் பெற்றுத் தனித்து அரசாங்கமொன்றை அமைக்கக் கூடிய சாத்தியம் இல்லை என்பதே அனைத்து கருத்துக் கணிப்புக்களினதும் தற்போதைய முடிவாக அமைந்துள்ளது என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ற)

## வெள்ளைவான்

பாக்கியை, இராணுவச் சட்டங்களின் படி, இன்னொருவர் கொண்டு செல்ல முடியாது. அந்த அடிப்படையிலேயே, கொமாண்டோ படைப் பிரிவின் கட்டளை அதிகாரி பதவியில் இருந்து மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வாவை இராணுவத் தளபதி நீக்கியுள்ளார். (ற-5)

## தபால் மூல

மற்றும் பொலிஸ் திணைக்கள அதிகாரிகள் தபால் மூலம் வாக்களிக்கவுள்ளனர். ஏனைய தபால் மூல வாக்காளர்கள் எதிர்வரும் 5 ஆம் 6ஆம் திகதிகள் வாக்களிப்பார்கள் என உதவித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் தெரிவித்துள்ளார். (ற-ரி)

## மஹிந்தவின்

பேரிலேயே அங்கு சென்றிருந்தார் என்றும், பொலிஸ் தலைமையக மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இது மஹிந்த ராஜபக்ஷவை படுகொலை செய்வதற்கான சதி என்றும் அதற்காகவே அரச புலனாய்வு சேவை அதிகாரி அனுப்பப்பட்டதாகவும் மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் அரசு மீது குற்றம்சாட்டியுள்ளனர். (ற-5)

## பாதுகாப்புக்குப்

மென தெரிவித்துள்ள அவர், தேசிய பிரச்சினைக்கு தீர்வுகாணும் அடிப்படையிலேயே அதிகாரங்கள் பகிரப்பட வேண்டு மென குறிப்பிட்டுள்ளார்.

குறித்த அதிகாரங்கள் எவ்வாறு பகிரப்பட வேண்டுமென நாடாளுமன்றமே தீர்மானிக்க வேண்டுமெனவும் அதிகாரப் பகிர்வுக்கு அனைத்துக் கட்சிகளும் இணங்கியுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் நெருக்கடி மிக்க அரசியல் சூழ்நிலைக்கு தீர்வாக உடன் தேர்தலை நடத்த வேண்டுமென வலியுறுத்தி வந்த சோபித தேரர், தேர்தலில் மஹிந்த போட்டியிடுவதற்கு தொடர்ந்தும் எதிர்ப்பை வெளியிட்டு வந்ததோடு, மஹிந்தவை தோற்கடிக்க இணைந்து செயற்பட தயாரெனவும் குறிப்பிட்டு வந்தார். (ற-ரி)

## குடும்பஸ்தர்

குறித்த நபர் வாசிகசாலையின் மேல் தளத்தில் இருந்து தடுமாறி கீழே விழுந்து உயிரிழந்திருக்கக் கூடும் என்று சந்தேகம் வெளியிடப்படுகின்றது.

குருநகர் வாசிகசாலைக்கு அண்மையில் உள்ள கலைகலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இரவு குறித்த பகுதியைச் சேர்ந்த மக்களாலும் இளைஞர்களாலும் கலைவிழா ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. கலைவிழா நடைபெற்றுக்கொண்டிருக்கையில் அந்தோனிப்பிள்ளை கமல் அளவுக்கு அதிக மதுபாவனையில் இருந்ததாகவும் வாசிகசாலையின் மேல்தளத்தில் ஏறுவதும் இறங்குவதும் ஆடுவதுமான இருந்தார் என்றும் நேரில் பார்த்த மக்கள் சிலர் பொலிஸாருக்கு சாட்சி தெரிவித்தனர். ஆயினும் கமல் கீழே விழுந்ததையோ அல்லது அவர் உயிரிழந்ததையோ எவரும் காணவில்லை என்றும் தெரிவித்தனர்.

வாசிகசாலைக்கு பத்திரிகை விநியோகிப்பவரே வாசிகசாலையின் வளவுக்குள் சடலம் ஒன்று காணப்பட்டதை காலை 6.45 மணியளவில் அவதானித்துள்ளார். அவர் ஊர் மக்களுக்கு தெரியப்படுத்தியதையடுத்து ஊர் மக்களால் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரின் விசாரணைகளின் பின்னர் சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு நேரில் வந்த யாழ். மேல் நீதிமன்ற நீதிவான் சிவகுமார் சடலத்தைப் பார்வையிட்டதுடன் பிரேத பரிசோதனைக்காக சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார். (ம-ரி5)

## உயர்தரப்

யங்களில் பரீட்சைக்குத் தோற்றுவர்.

இதேவேளை, இம்முறை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை இம்மாதம் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

நாடளாவிய ரீதியில் 2907 பரீட்சை நிலையங்களில் மொத்தம் 3 லட்சத்து 40 ஆயிரத்து 926 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். இவர்களில் 2 இலட்சத்து 54 ஆயிரத்து 373 மாணவர்கள் சிங்கள மொழி மூலமும் 86 ஆயிரத்து 553 மாணவர்கள் தமிழ் மொழி மூலமும் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். (ற-ரி)

## பிரபாகரனின்

படையினர் வாகனங்களை மோட்டார் வாகனத் திணைக்களத்திடம் ஒப்படைத்து, பதிவு செய்த பின்னரே மீளப் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால், விடுதலைப் புலிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட வாகனங்கள் இவ்வாறு முறைப்படி பதிவு செய்யப்பட்டுள்ளனவா என்று விசாரணைகள் நடத்தப்படுகின்றன.

இந்த விசாரணைகளின் போதே புலிகளின் தலைவர் பிரபாகரன் பயன்படுத்திய பிராடோ வாகனத்தை, இராணுவ அதிகாரி ஒருவர் பயன்படுத்திய விவகாரம் வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது. இந்த விசாரணைகளை அடுத்து, இராணுவ அதிகாரிகள் பலர் குழப்பமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)

## த.தே.ம.

வோம் என தமிழ் தேசிய மக்கள் முன்னணி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்துள்ளது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் வல்வெட்டித்துறை கடற்கரை மைதானத்தில் நேற்று மாலை 6 மணியளவில் பரப்புரை கூட்டமும் தேர்தல் விஞ்ஞாபன வெளியீடும் நடைபெற்றது. அதிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் வல்வை தீருவிலுக்கு சென்ற கட்சி அங்கத்தவர்களும் வேட்பாளர்களும் அங்கு மலரஞ்சலி செலுத்தினர். பின்னர் பரப்புரைக் கூட்டம் ஆரம்பமானது.

வெளியிடப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

இன்று இலங்கைத் தீவினை மையமாக வைத்து பூகோள அரசியல் போட்டி இடம்பெறுகிறது. இந்த பூகோள அரசியலில் தமிழ் மக்களுக்கும் காத்திரமான இடம் உண்டு. அந்தப் போட்டியூடாக தமிழ் மக்களுக்கு கிடைக்கும் முக்கியமானது பேரம் பேசும் சக்தியாகும். அதனை அடிப்படையாக வைத்தே தமிழ் மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி சர்வதேச அரசியலை கையாளுமிடத்து தமிழர் தேசத்துக்கான அங்கீகாரத்தை பெறலாம் என்பது எமது நிலைப்பாடாகும். தமிழ் மக்களின் நலன்கள் அவர்களது தாயகம் தேசியம், சுய நிர்ணய உரிமை என்பவற்றின் மூலம் தமிழ் தேசத்தின் இறைமை அங்கீகரிக்கப்படுவதன் மூலமே அடைய முடியும்.

இதனை சிறிலங்கா என்கின்ற வலுவான இனவாத மயப்பட்ட தற்போதைய அரச கட்டமைப்புக்குள் பெறமுடியாது. இங்கு அரசு மீளுருவாக்கம் இடம்பெற்று தேசங் களின் கூட்டாக ஆகக்குறைந்த தமிழ் சிங்கள தேசங்களின் இறைமைகளை கூட்டுச்சேர்ந்த இரு தேசங்கள் கொண்ட நாடாக இலங்கை அரசு உருவாக்கப்படுவதன் மூலமே தீர்வை அடையமுடியும்.

தமிழர் தேசம் எனும் அந்தஸ்து அங்கீகரிக்கப்பட வேண்டுமென்பதிலும் அது சமரசத்துக்கு அப்பாற்பட்டது என்பதிலும் நாம் உறுதியாக இருக்கிறோம். மேற்கூறியதன் அடிப்படையில் தமிழ் மக்கள் தாயகம் தேசியம் சுய நிர்ணய உரிமை அடிப்படையில் தனித்துவமான இறைமை கொண்ட தேசம் என்பது அங்கீகரிக்கப்பட்டு ஒரு நாட்டுக்குள் இரண்டு தேசங்களின் கூட்டு என்பதை இனப்பிரச்சனைக்கான தீர்வுத்திட்டமாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி முன்மொழிகிறது.

இங்கு இரு தேசம் ஒரு நாடு என்பதன் மூலம் முஸ்லிம் மலையக மக்களின் உரிமைகளை மறுப்பதாக அர்த்தம் கொள்ளகூடாது. இறைமையின் உறைவிடம் என்பது சிங்கள பௌத்த சிறிலங்கா அரசிடமே உள்ளது என சிங்கள் தேசம் கூறுகிறது. எனவே அதை ஏற்றுக் கொண்டு செய்யப்படும் எந்த அதிகாரபகிர்வும் சிங்கள பௌத்தத்தின் ஏகபோக உரிமையை ஏற்றுக் கொள்வதற்கு நிகரானது அத்துடன் 13 ஆம் திருத்தச் சட்டமோ அதன் கீழான மாகாண சபையோ தீர்வுக்கான ஆரம்ப புள்ளியாக கூட அமையாது என்பது எமது நிலைப்பாடாகும்.

எனவே இத்தீர்வை அடைய பின்வரும் வழிகளை அமைத்திருக்கிறோம். தாயகத்திலும் புலம்பெயர்ந்தும் தமிழகத்திலும் வாழும் தமிழ் மக்களை அரசியல் மயப்படுத்தி அணிதிரட்டி போராடுதல், சிங்கள முஸ்லிம் முற்போக்கு சக்திகளை ஒன்றிணைத்து செயற்படுதல், பூகோள அரசியலையும் அதன் வகிபாகத்தையும் சரிவரப்பாவித்து தமிழ் நலன்கள் நோக்கி நகர்த்தல், சர்வதேச மத்தியஸ்தத்துடன் இலங்கை அரசுடன் பேச்சு நடத்தல் என்பதே அந்த வழிகளாகும்.

நிலஅபகரிப்பு, மக்கள் மீள் குடியமர்வு, தாயகத்தில் நிலைகொண்டிருக்கின்ற அரச படைகளை வெளியேற்ற அரசியல் போராட்டங்களை மேற்கொள்ளுதல், கைதுகள் கடத்தல்கள், பயமுறுத்தல்கள் என்பவற்றை தடுத்து நிறுத்த அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். இன அழிப்பு தொடர்பில் குற்றவாளிகளை விசாரிக்க வேண்டும் என்பன உட்பட பல உறுதிப்பாடுகள் விஞ்ஞாபனத்தில் உள்ளன.

விஞ்ஞாபன வெளியீட்டில் அக் கட்சியின் யாழ்.மாவட்ட மற்றும் பிற மாவட்ட வேட்பாளர்கள் கலந்து கொண்டனர். விஞ்ஞாபனத்தை கட்சியின் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் வெளியிட்டு வைக்க வேட்பாளர்கள் பெற்றுக்கொண்டனர். (த-109)

# இலங்கையில் ஒன்றரை இலட்சம் விழிப்புலனற்றோர்

கொழும்பு, ஓக.3
இலங்கையில் சுமார் ஒன்றரை லட்சம் விழிப்புலனற்றவர்கள் உள்ளதாக ஆய்வு அறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது.
கண்ணில் ஏற்படும் கட்ராக் காரணமாகவே இலங்கையில் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் பார்வைக் குறைபாட்டுடன் உள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.
கட்ராக் குறைபாடு உடையவர்களுக்கு மிக எளிமையான சத்திர சிகிச்சையின் மூலம் பார்வையை திரும்பக் கொணடுவர முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



விழிப்புலனற்றவர்களுக்குச் சிகிச்சையளிக்க ஒவ்வொரு ஆண்டும் சுகாதார அமைச்சு இரண்டு மில்லியன் ரூபாவைச் செலவிட்டு வருவதாகவும், நாட்டில் 58 தகுதியுடைய கண் சத்திர சிகிச்சை நிபுணர்கள் சேவையாற்றி வருவதாகவும் சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.
அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் 90வீதமானவர்கள் விழிப்புலனற்றவர்கள் இருப்பதோடு இவர்களில் 60 சதவீதமானவர்களைச் சிகிச்சை மூலம் இலகுவில் குணப்படுத்த முடியும் என ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## தேசத்துக்கு மகுடம் மூலம் ரூ. 500 மில்லியன் மோசடி

### இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு

கொழும்பு, ஓக.3
மஹிந்த ஆட்சியில் நடத்தப்பட்ட தேசத்துக்கு மகுடம் கண்காட்சி மூலமாக சுமார் 500 மில்லியனுக்கும் அதிக பணம் மோசடி செய்யப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
தேசத்துக்கு மகுடம் செயலகத்தின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி, வழக்கறிஞர் ஊடாக இந்த முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார்.
இந்த மோசடியுடன் மூவர் தொடர்புபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டே இந்த முறைப்பாடு பதிவாகியுள்ளது.
முன்னாள் நிதி அமைச்சரும் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சருமான ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய, முன்னாள் பிரதம செயலாளரும் தேசத்துக்கு மகுடம் திட்டமிடல் குழு தலைவருமான எஸ்.அமரசேகர, தேசத்துக்கு மகுடம் மதிப்பீட்டுக் குழுவின் தலைவரும் தொலைத் தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சின் முன்னாள் செயலாளருமான எச்.எம். குணசேகர ஆகிய மூவருமே இந்த மோசடியின் குற்றவாளிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.
அநுராதபுரம் ஓயாமடுவ மற்றும் அம்பாறை ஹார்டி கல்லூரியில் 2012 மற்றும் 2013 ஆண்டுகள் இரண்டில் இடம்பெற்ற கண்காட்சியின் போதே இந்த 500 மில்லியன் ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.
இதேவேளை, தேசத்துக்கு மகுடம் கண்காட்சிகள் நாடு முழுவதிலும் 2007ஆம் ஆண்டில் இருந்து 2014 வரை தொடர்ந்து நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த)

## பதவியை விரும்பின் பெரிய கட்சிகளுடன் இணைந்திருப்பேன்

### பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு, ஓக.3
பதவிகளுக்கு விரும்பி இருந்தால் பெரிய கட்சிகளுடன் இணைந்து தேர்தலில் களமிறங்கி இருப்பேன் என ஜனநாயகக் கட்சியின் தலைவர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றத்துக்குச் செல்லவோ? அமைச்சுப் பதவிகளை பெறவோ? தனக்கு அவசியம் இல்லை என இதன்போது அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.
நாட்டில் உள்ள அனைத்து மக்களையும் சரியான பாதையில் கொண்டு சென்று, அவர்களின் வளர்ச்சியில் கைகொடுக்கவே தான் நாடாளுமன்றத் தேர்தலில் தனித்து, தனியான சக்தியைக் கட்டியெழுப்ப எண்ணியதாக கேகாலை மாவனல்லை பிரதேச பரப்புரைக் கூட்டத்தில் அவர் தெரிவித்துள்ளார்.
நாட்டு மக்கள் பிரதான கட்சிகளில் சார்ந்திருந்து ஆயுள்கால கைதியாக மாறி அரசியலில் தமது விருப்பு வாக்குகளைப் பயன்படுத்துவதால், வாழ்க்கையை கட்டியெழுப்ப முடியாமல், எதிர்கால திட்டங்கள், எண்ணங்கள் அனைத்தும் சீர்குலைந்துபோகும் நிலைமை உருவாகியுள்ளதாகவும் பொன்சேகா தெரிவித்தார்.
வாழ்க்கைக்குத் தேவையான பெறுமதி கிடைக்கவும் இரண்டு கால்களில் நிற்கவும் எவரிடமும் கையேந்தாது, எவருக்கும் அடிப்பணியாது கௌரவமாகவும் சுய கௌரவத்துடனும் வாழ வேண்டுமாயின் நன்றாகச் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என பொன்சேகா கேட்டுக் கொண்டார். (த)

## தோண்டி எடுக்கப்படவுள்ள வஸீம் தாஜுதீனின் சடலம்

கொழும்பு, ஓக.3
பிரபல ரகர் வீரர் வஸீம் தாஜுதீனின் சடலம் தோண்டி எடுக்கப் படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.
எதிர்வரும் வாரமளவில் அவரது சடலம் தோண்டி எடுக்கப்படவுள்ளது எனக் குறிப்பிடப்படுகிறது.
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வர் யோசித ராஜபக்ஷவிடம் இது குறித்து விசாரணை நடத்தப்படவுள்ளது என்றும் உயர் பொலிஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
வசீம் தாஜுதீன் மரணம் விபத்து அல்ல எனவும், அது படுகொலைச் சம்பவம் எனவும் கடந்த ஜூலை மாதம் 27 ஆம் திகதி நீதிமன்றில் புலனாய்வுப் பிரிவினர் அறிவித்திருந்தனர்.
எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதிக்கு முன்னதாக தாஜுதீனின் உடற்கூற்றுப் பரிசோதனைஅறிக்கையை சமர்ப்பிக்குமாறு கொழும்பு மேலதிக நீதி வான் நிசாந்த பீரிஸ் கடந்த 28ஆம் திகதி உத்தரவிட்டிருந்தார்.
2012ஆம் ஆண்டு மே மாதம் தாஜுதீனின் சடலம் கொழும்பு – நாரஹேன்பிட்டியில் மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## துப்பாக்கிச்சூட்டு சம்பவம் ரவியே முழுப் பொறுப்பு

### குற்றஞ்சாட்டுகிறார் சுமதிபால



கொழும்பு, ஓக.4
கொழும்பு, புளுமெண்டல் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தூப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துக்கு நிதி அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான ரவி கருணாநாயக்கவே முழுப் பொறுப்பும் கூறவேண்டும்.
இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் திலங்க சுமதிபால.
ஐ.தே.க. வேட்பாளர்களுக்கிடையில் உள்ள விருப்பு வாக்கு பிரச்சினையே இதற்குக் காரணம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
கொழும்பில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அக்கட்சி ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் கூறியதாவது:–
கொழும்பு, புளுமெண்டல் பகுதியில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தூப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பெண் ஒருவர் உயிரிழந்ததுடன், 13 பேர் காயங்களுக்குள்ளாகியிருந்தனர். இந்தச் சம்பவம் இடம்பெற்ற பின்னர் ரவி ஊடகவியலாளர் சந்திப்பொன்றைக் கூட்டி அதில் மஹிந்த ராஜபக்ஷவின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆதரவாளர்களினாலேயே இது முன்னெடுக்கப்பட்டதாகக் குற்றஞ்சாட்டியிருந்தார். இதனை நாங்கள் முற்றாக மறுக்கின்றோம்.
இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், பொய் கருத்துக்களை ஐ.தே.க. பரப்புவதை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.
ஒரு அசாதாரண சம்பவம் இடம்பெறும்போது அதனை வைத்து அரசியல் நடத்துவது ரவியின் வங்கரோத்து அரசியலை எடுத்துக் காட்டுகின்றது.
மஹிந்த ஆட்சியில் வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்ற பாதாள உலகச் சண்டியர்களை ஐக்கிய தேசியக் கட்சி இத்தேர்தலுக்காக வரவழைத்துள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, மக்கள் மத்தியில் தற்போதுள்ள செல்வாக்கை இல்லாது செய்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சி இவர்களைப் பயன்படுத்தி பல திட்டங்களை முன்னெடுத்துள்ளது. அதில் ஒன்றாகவே இதனை நாங்கள் கருதுகின்றோம்.
தேர்தல் ஆணையாளர், பொலிஸ்மா அதிபர் இந்த விடயத்தில் விரைந்து செயற்பட வேண்டும். இல்லாவிட்டால் ஓகஸ்ட் 17ஆம் திகதிக்கு முன்னர் பல உயிர்களை நாங்கள் இழக்கவேண்டிய ஆபத்தான நிலை உள்ளது.
துப்பாக்கிச்சூடு நடைபெற்ற சம்பவதினம் தேர்தல் பரப்புரைகளில் ஈடுபட்டிருந்த ரவியின் ஆதரவாளர்களிடம் ஆயுதங்கள் இருந்துள்ளன.
அதற்கான ஆதாரங்கள் எம்மிடம் இருக்கின்றன. இந்தச் சம்பவத்துக்குப் முழுப் பொறுப்பும் ரவியே கூற வேண்டும்.
கொழும்பு மாவட்டத்தில் ஐ.தே.க. சார்பில் பல முக்கிய உறுப்பினர்கள் போட்டி யிடுகின்றனர். அவர்களுக்கிடையில் தற்போது விருப்பு வாக்குக்கான போட்டி நிலவுகின்றது. இந்தச் சம்பவத்தின் பின்னணியில் இதுவும் பிரதான காரணமாக உள்ளது–என்றார். (த)

## நாட்டில் இனவாதத்தை தூண்டுகின்றார் மஹிந்த

### சாடுகிறது ஜே.வி.பி.



கொழும்பு, ஓக.3
மக்களால் நிராகரிக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த இனவாதத்தை ஊக்குவித்து தேர்தலில் வெற்றி பெற முயற்சிப்பதாக மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.
வெற்றிலைக்கு புள்ளடியிடுவது மோசடிக்காரர்களுக்கும் திருடர்களுக்கும் எதிராக விசாரணை வேண்டாம், தண்டனை வேண்டாம் என அங்கீகரிப்பதேயாகும் என்றும் அவர் கூறினார்.
மொறட்டுவை பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
45 வருடங்களுக்கு முன்னர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்காகத் தேர்தலில் போட்டியிட்டு அமைச்சரான ராஜபக்ஷ பதவி ஆசையில் இன்று தாத்தாவாகிய பின்னரும் தேர்தலில் போட்டியிடுவதாகவும் நாட்டின் வளங்கள், நிதி முதலிய வற்றை கொள்ளையடித்த விசாரணையின் இறுதியில் ராஜபக்ஷவே சிக்கப்போவதாகவும் அதிலிருந்து தப்பவே அரசியலுக்கு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (த)

# விசேட தேவையுடையவர்களுக்கான ஒலிம்பிக் தொடர்
# சிவபூமி மாணவர்கள் பதக்க வேட்டை

யாழ்ப்பாணம், ஓக. 3
விசேட தேவையுடைய வீரர்களுக்காக நடைபெற்ற ஒலிம்பிக் தொடரில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி களமிறங்கிய ஜெயச்சந்திரன் மனோஜன், அரசகுல சூரியன் மயூரன் என்னும் இரு மாணவர்கள் முறையே வெள்ளிப் பதக்கத்தையும் வெண்கலப்பதக்கத்தையும் கைப்பற்றி சாதனை படைத்துள்ளனர்.
அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்றுவந்த விசேட தேவையுடைவர்களுக்கான ஒலிம்பிக் தொடர் நேற்றுடன் நிறைவடைந்துள்ளது. குறித்த தொடருக்காக இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஜெயசந்திரன் மனோஜன்,


அரசகுலசூரியன் மயூரன், ஹெற்றி பாதுர பெர்னாந்து, பிரீத்திகா

கமகே, சுரோகா கம்மடகே, அக்கோ ஜெயவர்த்தன, ஆகியோர் சுவட்டு நிகழ்வுகளிலும் திலான் விதாரண பூப்பந்தாட்டப்போட்டியிலும் கலந்துகொண்டனர். இவர்களில் யாழ்ப்பாணம் சிவபூமி பாடசாலையில் இருந்து கலந்து கொண்ட ஜெயச்சந்திரன் மனோஜன் என்ற மாணவன் 200 மீற்றர் ஓட்டத்தில் வெள்ளிப்பதக்கத்தையும் அரசகுல சூரியன் மயூரன் என்ற மாணவன் 100 மீற்றர் ஓட்டத்தில் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.
165 நாடுகளில் இருந்து 6 ஆயிரத்து 500 போட்டியாளர்கள் விசேட தேவையுடையவர்களுக்கான ஒலிம்பிக் தொடரில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## போராடி வெற்றிபெற்றது யங்கம்பன்ஸ்

யாழ்ப்பாணம், ஓக. 3
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் வடமாகண ரீதியாக நடந்தும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
குறித்த தொடரில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதிக்கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் ஏதுவித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்து. வெற்றி, தோல்வி காண்பதற்காக வழங்கப்பட்ட சமநிலைத் தகர்ப்பு உதைகளை கச்சிதமாகப் பயன்படுத்திய கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)



## சென்.ஜேம்ஸ் வி.கழகத்தின் உதைபந்தாட்டத்தொடர்
## சம்பியனானது இருதயராஜா அணி



யாழ்ப்பாணம், ஓக. 3
அருட்தந்தை சாள்ஸ் கொலின்ஸ் அடிகளரின் குருத்துவத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஊர்காவற்றுறை சென். ஜேம்ஸ் விளையாட்டுக்கழகமும் சென்.ஜேம்ஸ் சனசமூக நிலையமும் இணைந்து அழைக்கப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையில் நடத்திய விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் ஐயனார் அணியை 1:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி சம்பியனானது இருதயராஜா விளையாட்டுக்கழகம்.
நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஊர்காவற்றுறை பொதுவிளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற குறித்த ஆட்டத்தில் மெலிஞ்சிமுனை இருதயராஜா அணியை எதிர்த்து துறையூர் ஐயனார் அணி மோதிக் கொண்டது. இரு அணியாலும் எதுவித கோல்களையும் பதிவு செய்யாத நிலையில் ஆட்டத்தின் முதல்பாதி முடிவடைந்தது. இரண்டாவது பாதியிலும் சமநிலைத் தன்மை பேணப்படவே செய்தது. முதல் கோலைப் பதிவுசெய்வது யார்? என்ற மும்முரமான போட்டிகளுக்கு மத்தியில் இரண்டாவது பாதியின் 17ஆவது நிமிடத்தில் மெலிஞ்சிமுனை இருதயராஜா அணியின் விசோ தமது அணிக்கான முதலாவது கோலினை பதிவு செய்ய அதுவே ஆட்டத்தின் வெற்றிக்கோலாகவும் ஒரே கோலாகவும் அமைந்தது.
சிறந்த வீரனாக மெலிஞ்சிமுனை இருதயராஜா அணியின் விசோவும் சிறந்த விளையாட்டுக்கழகமாக நாரந்தனை அண்ணா விளையாட்டுக்கழகமும் தெரிவானது.(ம-23)

## இன்றைய ஆட்டங்கள்

**உதயசூரியன் வி.கழகத்தொடர்**
யாழ்ப்பாணம், ஓக. 3
வத்திராய் உதயசூரியன் விளையாட்டுக்கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட (12 பந்துப் பரிமாற்றங்கள்) துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இந்தத்தொடரில் இன்று திங்கட்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவ ரங்கள் வருமாறு. காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வெள்ளி நிலா அணியை எதிர்த்து றம்போ அணியும் காலை 10.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உதயசூரியன் அணியை எதிர்த்து சென்.மேரிஸ் அணியும் பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் செல்வா அணியை எதிர்த்து சக்திவேல் அணியும் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பிரதேச செயலக அணியை எதிர்த்து கலைமகள் அணியும் மோதவுள்ளன.

**கழுகுகள் வி.கழகத் தொடர்**
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இந்தத்தொடரில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து விடத்தல் தீவு அணி மோதவுள்ளது. பிற்பகல் 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தொண்டமானாறு ஒற் றுமை அணியை எதிர்த்து மனோகரா அணி மோதவுள்ளது. (ம-108-23)

**பாரதி வி.கழகத்தொடர்**
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பொலிகண்டி பாரதி விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்கு பற்றும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.
இந்தத் தொடரில் இன்று பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வல்வை ஆதிசக்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. பி.ப 4.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதவுள்ளது. (ம-108)

## பளுதூக்கும் பயிற்சிப்பட்டறை





வலி வடக்கு, ஓக. 3
தேசியமட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெறவுள்ள பளுதூக்கும் போட்டியில் கலந்து கொள்ளவுள்ள வடமாகாண வீர வீராங்கனைகளுக்கான இரண்டு நாள் செயல்முறை பயிற்சிப்பட்டறை வடமாகாண கல்வித் திணைக் களத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகி நடைபெற்றது.
இலங்கைத் தேசிய அணியின் பயிற்றுநரும் முன்னாள் தேசிய சம்பியனுமான அத்துல கலந்து கொண்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கான பயிற்சிகளை வழங்கினார். குறித்த பயிற்சிப் பட்டறையில் கிட்டத்தட்ட 75 வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது. (ம-86)

## சென்.லூட்ஸை வீழ்த்தியது
## சென்.மைக்கல்

யாழ்ப்பாணம், ஓக. 3
யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் சென்.மைக்கல் அணியை எதிர்த்து சென்.லூட்ஸ் அணி மோதிக் கொண்டது. இறுதிவரை கடுமையாகப் போராடியபோதிலும் இரண்டு அணியினாலும் ஆட்டநேர முடிவில் எதுவித கோல்களையும் பெற முடியவில்லை. இதனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்து. வெற்றி, தோல்வி காண்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதைகளில் சென்.மைக்கல் அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் வதிரி டைமன்ஸ் அணியை எதிர்த்து உரும்பிராய் சரஸ்வதி அணி மோதிக்கொண்டது. இதில் வதிரி டைமன்ஸ் அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.(ம-23)

## பாகிஸ்தானில் தொடர்கள் நடத்தப்படும்

எதிர்வரும் காலங்களில் பாகிஸ் தானில் துடுப்பாட்டத் தொடர்கள் நடத்தப்பட அதிக வாய்ப்பிருக்கிறதாக இலங்கை அணியின் முன்னாள் வீரர் ஜெயசூரிய கருத்துத் தெரிவித்துள்ளார்.
பாகிஸ்தானில் இலங்கை அணிமீது தாக்குதல் நடத்தப்பட்ட இடத்தை நேரில் சென்று பார்வையிட்ட சனத் செய்தியாளரிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் தற்பொழுது பாகிஸ்தான் மிகவும் பாதுகாப்பாக உள்ளது. இங்குள்ள மக்கள் ஏனைய நாட்டு மக்களைப்போல் இயல்பானதும் சுமுகமானதுமான வாழ்க்கையை வாழுகின்றனர். இதே நிலைமை தொடரப்படும் பட்சத்தில் ஏனைய நாடுகள் பாகிஸ்தானில் வந்து விளையாட துணிந்து விடும் என்றார். (ம)

# எர்வின் மிரட்டலில் நியூஸியைப் பந்தாடியது சிம்பாப்வே



சிம்பாப்வே நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று ஒரு நாள் ஆட்டங்களைக்கொண்ட தொடரின் முதலாவது ஆட்டத்தில் 7 இலக்குகள் வித்தியாசத்தில் நியூஸிலாந்தை வீழ்த்தி 1-0 என்ற கணக்கில் தொடரில் முன்னிலை வகிக்கிறது சிம்பாப்வே.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே முதலில் துடுப் பெடுத்தாடத் தீர்மானிக்க நியூஸிலாந்து சார்பாக களத்தில் ஆரம்பவீரர்களாக குப்திலுடன் லாதம். இருவருமே பதின்ம ஓட்டங்களைவிட்டுத் தாண்டவில்லை. தலைமை இன்னிங்ஸிற்காக களத்தில் வில்லியம்சன். மறுமுனையில் ரெய்லர். இலக்குச் சரிவை உணர்ந்து இருவருமே ஆரம்பத்தில் சற்று நிதானிக்கத்தான் செய்தனர். பந்துப்பரிமாற்றங்கள் உருண்டோடி பந்துகள் பழக்கப்பட படிப்படியாக அதிரடி ஆரம்பமாகியது. வில்லியம்சன் வெளுத்து வாங்க ஆரம்பித்தார். ஆனபோதிலும் ரெய்லரின் இன்னிங்ஸில் மாற்றமில்லை. அதே நிதானம் ஆட்டத்தில் தொடர்ந்தும் நிலைத்திருந்தது. வில்லியம்சனின் அதிரடியில் வீணடிக்கப்பட்ட பந்துகள் ஓரளவு சமன்செய்யப்பட்டன. இருவரும் ஆளுக்கொரு அரைச்சதத்தை பதிவுசெய்ய நியூஸிலாந்தின் மத்திய வீரர்களுக்கான பதட்டமற்ற சூழ்நிலை ஆட்டத்தில் ஏற்பட்டது. சதத்தை நோக்கி விரைந்துகொண்டிருந்த வில்லியம்சன் 97 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சதத்தைத் தவறவிட்டார். வில்லியம்சனின் தவறைத் தானும்செய்யாது சதம் தாண்டினார் ரெய்லர். எலியாட் பின்வரிசையில் அதிரடி காட்ட முடிவில் நியூஸிலாந்து 303-4.
300 பந்துகளில் 304 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி. நியூஸிலாந்தை எதிர்த்து சிம்பாப்வேயால் சாதிக்க முடியாதென்றாலும் சொந்த மண், பழக்கப்பட்ட ஆடுகளங்கள், அதிகப்படியான ரசிகர்கள் என்பவற்றின் பலம் கைகொடுக்க களத்தில் மசகட்ஷாவுடன் சிப்ஹபா. பலமான அணியொன்றின் அனுபவ வீரர்களைப்போல மிகவும் சர்வசாதாரணமாக துடுப்பெடுத்தாடினர். இலக்கினை எட்டக்கூடிய சராசரியில் இணைப்பாட்டமாக 50 ஓட்டங்களைக் கடந்து இருவரும் பயணித்துக்கொண்டிருந்தனர். 42 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் சிப்ஹபா. சிம்பாப்வே 94-1. முதல் இலக்குக்காக பலம்பெற்றிருந்த இணைப்பாட்டத்தைவிட இருமடங்கு பலம்பெற்றது இரண்டாவது இலக்குக்கான இணைப்பாட்டம். அரைச்சதம் கடந்தார் மசகட்ஷா ஆரம்பத்திலிருந்தே அடித்து நொருக்கினார் எர்வின். 84 ஓட்டங்களுடன் மசகட்ஷா ஆட்டமிழந்தாலும் தொடர்ந்தும் நம்பிக்கை தந்து அதிரடியில் மிரட்டிக்கொண்டிருந்தார் எர்வின். இறுதி 4 பந்துப்பரிமாற்றங்களில் 42 ஓட்டங்களைப் பெறவேண்டுமென்ற நிலைமை. எர்வினின் மிரட்டலில் ஒரு பந்துப் பரிமாற்றம் மீதமிருக்கவே இலக்கை அடைந்து நியூஸிலாந்துக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தது சிம்பாப்வே.
இறுதி வரை ஆட்டமிழக்காது 130 ஓட்டங்களைக் குவித்த எர்வின் ஆட்டநாயகனானார். (ம)

# சச்சினுக்கு கோக்லியால் ஆபத்து



சச்சினின் டெஸ்ட் சாதனையை இலகுவில் எவராலும் முறியடித்து விட முடியாது. ஆனால் அவரின் ஒருநாள் சாதனைகள் கோக்லியால் தகர்க்கப்பட அதிகப்படியான வாய்ப்புக்கள் உள்ளன. இவ்வாறு தெரிவித்துள்ளார் மேற்கிந்தியத் தீவுகளின் முன்னாள் நம்பிக்கை நட்சத்திரம் பிரைன் லாரா.
ஒரு நேர்காணலின்போது சச்சின் தொடர்பாக லாரா தெரிவித்ததாவது சச்சின் ஒரு வீரர் அல்ல. அவர் ஒரு ஜாம்பவான். ஒரு சகாப்தம். அவரது சாதனைகளைத் தொட்டுப் பார்க்கக்கூடிய தூரத்தில் எந்த வீரர்களும் இல்லை. இதனால் கிரிக்கெட்டின் எதிர்கால வரலாறுகளில் சச்சின் நிலைத்து நிற்பார்.
ஆனால் சச்சினின் சாதனைகளை தகர்க்கக்கூடிய ஒருவர் உள்ளார். அவரும் ஒரு இந்தியர். அவர்தான் கோக்லி. சச்சினின் ஒருநாள் சாதனைகள் கோக்லியால் தகர்க்கப்படக்கூடிய வாய்ப்புக்கள் அதிகப்படியாக உள்ளன. சச்சினின் சாதனைகளை கோக்லி தகர்க்க விரும்பினால் சிறிய அணி, பெரிய அணி என்ற பாகுபாடுகளைக் காட்டாமல் அனைத்து தொடர்களிலும் அவர் பங்கெடுக்க வேண்டும். நடப்பு வருடத்தில் சிம்பாப்வேக்கு எதிரான தொடரில் ஓய்வெடுத்ததைப் போல் ஓய்வெடுத்தால் கடைசிக் காலத்தில் ஓட்டங்களுக்காக அவர் மிகுந்த சிரமப்பட வேண்டியிருக்கும். எனவே கோக்லி இப்போதிருந்தே தனது பயணத்தைத் திட்டமிட்டுக்கொள்ள வேண்டும்.
சச்சின் சாதனை முடியடிக்கப்பட்டாலும் கிரிக்கெட் என்றதும் சச்சின்தான் நினைவுக்கு வருவார். ஏனெனில் சாதனைகள் புதிதாக வந்தாலும் சச்சின் ஒருவர்தான். சச்சினையும் என்னையும் ஒப்பிட்டு பேசுவதையும் தவிர்த்துக் கொள்ளுங்கள் ஏனெனில் என்னைவிட அவர் பலமடங்கு திறமையானவர் என்றார். (ம)



*தென்னாபிரிக்கா பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் நான்காம் நாளான நேற்றையதினமும் அதிகரித்த மழை காரணமாக ஆட்டம் கைவிடப்பட்டது. இதனால் 246-8 என்ற நிலையிலிருந்து பங்களாதேஷ் தொடர்ந்து துடுப்பெடுத்தாடவுள்ளது.(ம)*

# செரீனா விலகல்

சர்வதேச ரென்னிஸ் தரப்படுத்தலில் முதலிடத்தில் இருப்பவரும் நடப்பு வருடத்தின் விம்பிள்டன் தொடரைக் கைப்பற்றியவருமான செரீனா வில்லியம்ஸ், ஸ்டான் போர்ட் ரென்னிஸ் தொடரில் இருந்து விலகியுள்ளார். இந்தத் தொடரில் கடந்தமுறை கிண்ணம் வென்ற செரீனா முழங்கையில் ஏற்பட்ட காயம் காரணமாக விலகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
ஸ்டான்போர்டு ரென்னிஸ் தொடரில் இருந்து விலகியது குறித்து செரீனா தெரிவித்ததாவது ஸ்டான் போர்ட் ரென்னிஸ் தொடரில் இருந்து விலகுவது மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது. இருந்தாலும், நான் என்னுடைய காயத்தில் இருந்து 100 சதவீதம் குணமடைய வேண்டும். என்னுடைய பிடித்தமான தொடரில் இதுவும் ஒன்று. இங்குள்ள ரசிகர்கள் எனக்கு எப்பொழுதும் மிகப் பெரிய ஆதரவாக இருப்பார்கள். அடுத்த வருடம் இந்த தொடரில் விளையாடுவேன் என்று நம்புகிறேன். என்று கூறியுள்ளார். செரீனா இந்தத்தொடரில் இருந்து விலகினாலும் அவரது முதலிட அரியாசனத்துக்கு எவராலும் எந்தப் பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. (ம)



# சிறுநீரக நோய் ஒழிப்பு விளம்பரத் தூதுவர்களாக ஜனாதிபதியால் டில்ஷான், முரளி நியமனம்



சிறுநீரக நோய் ஒழிப்பு விளம்பரத் தூதுவர்களாக இலங்கை அணியின் முன்னாள் நட்சத்திர சுழற் பந்துவீச்சாளர் முரளிதரன், மற்றும் அதிரடி வீரர் டில்ஷான் ஆகியோர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.
இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இரண்டாவது ரி-20 ஆட்டத்தின்போதே இவர்களுக்கான நியமனக்கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. சிறுநீரக நோய் ஒழிப்பு தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால உறுதியளித்துள்ள நிலையிலேயே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (ம)

## இந்தியன் ரென்னில் தொடரில் நடால்

இந்தியாவில் ரென்னிஸ் விளையாட்டை வளர்த்தெடுக்கும் நோக்கில் வருடாவருடம் இந்தியன் பிரீமியர் ரென்னிஸ் லீக் என்னும் தொடர் நடைபெற்றுவருகிறது. சர்வதேச வீரர்கள் பங்கெடுக்கக்கூடிய இந்தத் தொடரில் நடப்பு வருடத்தில் நடாலும் பங்கெடுக்கவுள்ளார்.
இந்தியன் ஏசஸ், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ரோயல்ஸ், பிலிப்பைன்ஸ் மாவரிக்ஸ், சிங்கப்பூர் ஸ்லாமர்ஸ் ஆகிய அணிகள் கடந்த வருடத்துக்கான தொடரில் பங்கேற்றன. இந்த அணிகளில் இந்தியன் ஏசஸ் அணிக்காகவே நடால் பங்கேற்கவுள்ளார். தவிர தரப்படுத்தலில் முதலிட வீரரான ஜோகோவிக் சிங்கப்பூர் ஸ்லாமர்ஸ் அணிக்காக விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

CHEMISTRY CENTRE - இணுவில்
2016 (A/L) Batch
அசேதன இரசாயனம் & சேதன இரசாயனம்
ஆரம்பம்: 03.08.2015 திங்கட்கிழமை
நேரம்: மாலை 6.00 P.M
By Mr.T. Sivakumar B.Sc, PGDE
தொடர்புகளுக்கு: 0779 297344.
[Sunthara Vasam, Inuvil west, Inuvil ]

# மோட்டார் சைக்கிள் பந்தயத்தில் விபத்து
## காயத்துடன் தப்பிப்பிழைத்தார் ஸ்டோனேர்

மோட்டார் சைக்கிள் பந்தய முன்னாள் உலகச்சம்பியன் சசே ஸ்டோ னெர். இவர் நேற்று நடைபெற்ற மோட்டார் சைக்கிள் பந்தயத்தில் கலந்து கொண டார். அப்போது இவரது மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகி தூக்கி வீசப்பட்டது. ஆனால் ஸ்டோனேர் காயத்துடன் உயிர் பிழைத்தார். பந்தயம் தொடங்கியதும் ஸ்டோனெர் தனது மோட்டார் சைக்கிளில் சீறிப்பாய்ந்தார். பைக் சிறிய தூரம் சென்றதும் ஒரு வளையில் திரும் பிய போது கட்டுப்பாட்டை இழந்து ஓடுபாதையை விட்டு விலகிச் சென்று விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளுடன் ஸ்டோனெர் பல மீற்றர் தூரம் தூக்கி வீசப்பட்டார். அப்போது, அவருக்கு காயம் ஏதும் ஏற்பட்டதாக தெரியவில்லை. ஆனால், பின்னர் தனக்கு கை மற்றும் காலில் காயம் ஏற்பட்டதாக டுவிட்டரில் தகவல் தெரிவித்து படத்தையும் வெளியிட்டுள்ளார். (ம)

நாடாளுமன்றத் தேர்தல் 2015

அரச ஊழியர்களின் உரிமைக்காகவும்
கடந்த 30வருடங்களாகப் போராடிய
பேனாமுனையின் ஒரே குரல்.
வாக்களிக்க மறவாதீர்கள்

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரிக்கு
பழைய அதிபரே மீண்டும் வருகின்றார்



இ.போ.ச. பிரிப்புக்கு
எழுந்தது எதிர்ப்பு
சபை ஊழியர்கள் நேற்று
பணிப்புறக்கணிப்பு



யாழ்ப்பாணம், ஏப்.25
இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய டிப்போவை இரண்டாகப் பிரித்ததற்குக் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. நேற்று யாழ்.பிரதான பஸ் நிலையத்தில் டிப்போவைப் பிரிக்க வேண்டாம் என்று வலியுறுத்தி சபையின் ஊழியர்கள் பஸ்களைக் குறுக்கே நிறுத்தி பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். பக்.02

சுகாதாரத் தொண்டருக்கு
6 மாதங்கள் பணி நீ...
தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை...
முன்னாள் எம்.பி. சரவணபவன் நட...





தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
ஈ. சரவணபவன்
(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி,
உதயன் குழுமத் தலைவர்

5

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

ATMC AUSTRALIAN TECHNICAL & MANAGEMENT COLLEGE
Jaffna Campus

நேர்மையான......
செலவு குறைந்த.....
பாதுகாப்பான வழியில்......

அவுஸ்திரேலியா செல்வதற்கு
அழையுங்கள்:- 077 933 93 53
■ O/L 5 பாடச் சித்தியுடன் - யாழ் மண்ணில் 1 வருடம் படித்துவிட்டு செல்லலாம்.
■ A/L 3 பாட சித்தியுடன் - யாழ் மண்ணில் 6 மாதங்கள் படித்துவிட்டு செல்லலாம்.
■ பட்டதாரிகள் நேரடியாக செல்ல முடியும்.